KALKI 26.6.94 ரூ. 3.00


கல்கி





கல்லூரிப் படிப்பு கரண்டி பிடிக்கத்தானா?

உங்கள் மழலைச் செல்வம் அவனது மென்மையான மிருதுவான உலகம்.



அவனுக்கு நீங்கள் கொடுக்கும் முதல் திட உணவும் அவனைப் போலவே மிருதுவாக இருக்கட்டும்.

உங்கள் குழந்தைக்கு இப்பொழுது 4 மாதங்களாகிறது. இச்சமயம் அவனுக்கு தாய்ப்பால் மட்டுமல்லாமல் வேறு வகை உணவும் தேவை. ஏதாவது ஒரு திட உணவு. அதே சமயம் நீங்கள் அவனுக்கு தரும் திட உணவு மிருதுவானதாகவும் போஷாக்கு நிறைந்ததாகவும் இருந்திடல் அவசியம்.

ஆம், நெஸ்டம் தரும் போஷாக்கு போல - இது எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம். அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் நெஸ்டம், உங்கள் மழலைச் செல்வத்தின் மிகச் சரியான முதல் திட உணவாக அமைகிறது.

பாலுடன் நெஸ்டம் சேர்த்து உங்கள் குழந்தைக்கு ஸ்பூனால் ஊட்டுங்கள். இந்த ஆகாரத்தின் மூலம் அவன் வேகமாய் வளர்வதற்கு வேண்டிய எல்லா போஷாக்கு சக்திகளும் கிடைக்கின்றன.

உங்கள் செல்வ மகன் வளர வளர, நீங்கள் அவனுக்கு படிப்படியாய் புதிய ருசியுள்ள உணவு வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வகை முறையை நீங்கள் எளிதில் மிருதுவாய் ஆரம்பிக்க நெஸ்டம் உங்களுக்கு உதவுகிறது. நெஸ்டம், பால் சேர்க்காத ஒரே குழந்தை ஆகாரமாய் இருப்பதால், இதை மிகச் சுலபமாய் மற்ற உணவு வகைகளுடன் கலந்திட முடியும். உதாரணமாய், குழைய வைத்த வாழைப்பழம் காய்கறிகள் மற்றும் தயிருடன் உங்கள் குழந்தைக்கு நெஸ்டம் கொடுங்கள். நெஸ்டம் தரும் எல்லா வித மிருதுவான-தனிச் சிறப்பான போஷாக்குகளுடன் அவன் வளருவதைப் பாருங்கள்.




லேபிளில் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளை கவனமாய் பின்பற்றுங்கள்.

இலவசம்
நெஸ்டம் செய்முறை
புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25,
புதுடில்லி-110016

நெஸ்டம்

எளிதில் ஜீரணிக்க உகந்த குழந்தை ஆகாரம்.

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்.




அடுத்த இதழில்..

இந்திரா பார்த்தசாரதி

எழுதும்

வேதபுரத்து வியாபாரிகள்

புதிய தொடர் கதை ஆரம்பம்!


ஒரே உதை... காணாம போயிடணும்...
மத்திய அரசு
சேஷன்
பவுல்... பவுல்...
சூப்பர் ஊழல் பண்ணிட்டாங்க... இந்தாங்க சர்க்கரை; வாயில போட்டுக்கோங்க...
எதிர்க் கட்சிகள்
அவர் வாயில தான் போடுங்க.. அவர் சொன்ன -படிதான் நான் செஞ்சேன்..
ராவ்
இங்கே மீன் பிடிக்கக் கூடாது... உச்சநீதி மன்றத் தீர்ப்பு
அரசியல் ஆதாயம்
இதோ நானும் வந்துட்டேன்..



ஸ்ரீ

கல்கி



1994
ஜூன் 26
பவ
ஆனி 12
மலர் : 52
இதழ் : 48

தமிழ்த்திரு நாடு
தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா - பாரதியார்

சேஷன் தலை தப்பியதா?

"தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்" என்பார்கள். சேஷனின் அதிகாரம் தப்பியதற்கு வி.பி.ஐ. புண்ணியம் கட்டிக் கொள்கிறது. கடைசி வரை வி.பி.ஐ. (கம்யூனிஸ்ட் கட்சி), 'பிரதம தேர்தல் கமிஷனருக்கு மற்ற தேர்தல் கமிஷனர்களை விடவும் கூடுதல் அதிகாரம் தேவை' என்று பிடிவாதம் செய்தது.

வி.பி.ஐ. யின் இந்த வாதத்தை ஏற்பது எனில் இந்த சாசனத் திருத்த மசோதாவுக்கே அவசியம் இல்லை. தேர்தல் கமிஷன் என்பது ஒரு தனி மனிதரின் தர்பாராக இராமல் ஒரு குழுவின் ஆலோசனையாகவும் மெஜாரிடி முடிவாகவும் இருக்க வேண்டும் என்பது காங்கிரஸின் கருத்து. தற்போது உயர்நீதிமன்ற நீதிபதிகளும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளும் இவ்வாறே செயல்படுகிறார்கள். பிரதம நீதிபதி என்பதாக ஒருவர் இருந்தாலும் அவருக்குக் கூடுதல் அதிகாரங்கள் தீர்ப்பு வழங்குவதில் இல்லை. பெஞ்சுத் தீர்ப்பு என்பதிலும் பெரும்பான்மைத் தீர்ப்பே அமுல்படுத்தப்படுகிறது. இதனால் நீதித்துறையின் சுதந்திரம் பாதிக்கப்பட்டு விட்டதாக யாரும் கூற முடியாது. இதையெல்லாம் எடுத்துக் காட்டியும் வி.பி.ஐ. விட்டுக் கொடுக்கவில்லை.

வி.பி.ஐ. ஆதரவு இல்லாவிட்டாலும் ஒரு வோட்டு வித்தியாசத்தில் தீர்மானம் ராஜ்ய சபையில் நிறைவேறியிருக்கக் கூடும். ஆனால் இத்தகைய குறுகிய வெற்றிக்கு முயற்சி மேற்கொள்வதில் ஆபத்து அதிகம். மசோதா தோல்வி அடைவதைவிட அதை வாபஸ் பெறுவதே விவேகம் என்று மத்திய அரசு முடிவு கட்டி அவ்வாறே செய்துவிட்டது.

நன்கு யோசியாமலும் போதிய முன்னேற்பாடுகளைச் செய்யாமலும் திரைமறைவு வாக்குறுதிகளைப் பெறாமலும் காரியத்தில் இறங்கியதில் காங்கிரஸுக்கு இன்று தலைகுனிவு ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் சேஷன் இதனை ஒரு வெற்றியாகக் கொண்டாடாவிட்டாலும் தமது மகிழ்ச்சியை ஒளித்துக் கொள்ளவும் இல்லை. "நல்ல புத்தி நிலவியதில் மகிழ்கிறேன்" என்கிறார். "நான் தனி மனிதனல்ல; இந்த நாடே என் பின்னால் துணை நிற்கிறது" என்கிறார்.

"ஏற்கெனவே அவர் தாட்பூட் தஞ்சாவூர் டைப்; இந்த வெற்றி வேறு அவர் தலையைக் கனக்கச் செய்துவிடுமே" என்ற கவலை கட்சித் தலைவர்கள் பலருக்கும் நிச்சயம் ஏற்பட்டிருக்கும்.

தமது அதிகாரங்கள் குறையக் கூடாது என்பதற்காக சேஷன் ஜோதி பாசுவையும் இதர பல எதிர்க்கட்சித் தலைவர்களையும் சந்தித்து கூழைக் கும்பிடு போட்ட போது, அதிகாரி என்ற நிலையிலிருந்து அரசியல்வாதி என்ற நிலைக்கு மாறிவிட்டார் என்பதில் சந்தேகமேயில்லை. பரம எதிரியாகவே கருதப்பட்ட ஜெயலலிதாவிடம் கூட பேச முற்பட்டு மூக்குடைபட்டதாகச் செய்தி. எனவே, எதிர்காலத்தில் எந்த அளவுக்கு பாரபட்சமின்றி நடந்து கொள்வார் என்பது கேள்விக் குறி. அப்படியே அவர் நடந்து கொண்டாலும் இன்று மசோதாவைக் கொணர்ந்த ஆளும் கட்சியான காங்கிரஸும் அதற்கு வெளிப்படையாக ஆதரவு தந்த இதர கட்சிகளும் ஒவ்வொரு சிறு பாதிப்பின்போதும் அவருக்கு எதிராகக் கூக்குரல் எழுப்பும்; உள்நோக்கம் கற்பிக்கும். பிரதம தேர்தல் கமிஷனருக்கு எதிர்காலத்தில் எதிர்ப்பு கூடுமே தவிர குறையாது.

சேஷனின் நோக்கங்களில் நமக்கு மாறுபாடு கிடையாது. தேர்தல்களைத் தூய்மைப்படுத்த வேண்டும் என்ற கருத்தில் யாருக்குத்தான் மாறுபாடு இருக்க முடியும்? ஆனால் இந்த உன்னத இலக்கை எல்லோரையும் பகைத்துக் கொள்வதன் மூலம் அவரால் அடைய முடியாது என்றும், அனைவரையும் அணைத்துச் சென்று ஒத்துழைப்பைப் பெறுவதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும் என்பதும் நம் எண்ணமாக இருந்து வந்திருக்கிறது. இந்த அபிப்பிராயத்தில் தவறில்லை என்பதைத் தான் அடுத்தடுத்து நிகழ்ந்த சம்பவங்கள் நிரூபிக்கின்றன. சேஷனின் அதிரடி நடவடிக்கைகளால் - குறிப்பாக சட்டத்தின் ஒப்புதல் இல்லாத இனங்களில் அவர் நடந்து கொண்ட போக்கால் - மனக்கசப்பே வளர்ந்திருக்கிறது. எந்தக் கட்சித் தலைவராலும் அவரைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. இன்று அரசியல் காரணங்களுக்காக அவருக்கு ஆதரவாக நின்று அரசின் மசோதாவை எதிர்த்துள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள்கூட நேற்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவரைத் தாக்கியவர்கள்தாம்.

ஆகமொத்தம் பிரச்னை தீர்வதற்குப் பதில் விசுவரூபம் எடுத்துள்ளது.



நடுக்கடலில் எரியும் மீனவர் பிரச்னை

• அந்தோணி ராஜ்

காற்றில் நிரந்தரமாய் நிலவும் கருவாட்டு வாடை மட்டுமின்றி, ராமேஸ்வரத்தில் நிலவும் பணத்தின் மணமும் மூக்கில் விரல் வைக்கச் செய்யும்! பணப்புழக்கத்தில் 50% இங்கே மீன் பிடித்தல் மூலம்தான் சாத்தியமாகிறது. ஆகவே, மீனவர்கள் ஓர் ஆரோக்கிய, சுக, சௌகர்ய, சந்தோஷ வாழ்க்கை வாழ்வதாகத்தானே எண்ணத் தோன்றும்?



அதுதான் இல்லை! 'எங்களை விட, பாவப்பட்ட மனிதர்கள் வேறு யாரும் இருக்க முடியுமா, தெரியவில்லை" என்கிறார் இப்பகுதி மீனவத் தொழிலாளர் சங்கத் தலைவர் கடலைக் காசி.

"நடுக்கடலில் நாய்ப்படாத பாடுபடுகிறோம்" என்கிறார் அந்தோணி ராஜ்.

எல்லா மீனவப் பகுதிகளிலும் இருக்கும் விசைப் படகு - நாட்டுப் படகுக் காரர்களுக்கிடையே யான பிரச்னை



• அருளானந்தம்

(காண்க : பெட்டிச் செய்தி) இங்கும் இருக்கிறது. அதைத் தவிர, ராமேஸ்வரம் மீனவர்களைப் பொறுத்த வரை தொல்லை தரக் கூடிய விஷயங்கள் இரண்டு - எல்லைப் பகுதி என்பதனால் -

1. இலங்கை ராணுவ அச்சுறுத்தல்.

2. புலிகளின் குறுக்கீடு.

ஏதடா, இரு எதிரெதிர் துருவங்கள் எப்படி ஒரே சமயத்தில் சேர்ந்து படுத்த முடியும் என்று கேட்டால் - படுத்துகிறார்கள்.

நடுக்கடலில் மீன் பிடிக்கப் போகும் ராமேஸ்வரம் மீனவர்களுக்குப் பாதுகாப்பில்லாததுதான் பெரும் பிரச்னை. எல்லைப்புறத்தில் ரோந்து வரும் இலங்கை ராணுவம், கண்மூடித்தனமாக, மீனவப் படகுகளைச் சுட்டு வீழ்த்துகிறதாம். கேட்டால், 'புலிகளின் படகோ என்ற சந்தேகம்' என்று மழுப்பல்!



• கடலைக் காசி

இப்படியாக இதுவரை 31 பேர் இப்பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டவர்கள்.


இலங்கை ராணுவத்தினர் சொல்வது இதுதான். "நாங்கள் ரோந்து வருகையில் எங்கள் சந்தேகத்துக்கு இடமான வகையில் செல்லும் படகுகளை நிறுத்தச் சொல்லி சமிக்ஞை காட்டுகிறோம். மீனவர் கள், நிறுத்தி விட்டால் நாங்கள் பரிசோதித்து அனுப்பி விடப் போகிறோம். அவர்கள், எங்களைப் பார்த்ததும் மிரண்டு தப்பி ஓடப் பார்க்கிறார்கள். சந்தேகம் வலுக்க, நாங்கள் சுட வேண்டியதாகிறது."

ஆனால் இதனை மறுக்கிறார் கடலைக் காசி. "எங்களுக்கென்ன பைத்தியமா, அவர்கள் சுடுவார்கள் என்று தெரிந்தும் நிறுத்தாமல் ஓடுவதற்கு? 'பரிசோதிக்க வருகிறோம்' என்று சொல்வதெல்லாம் பொய். எந்தப் படகைப் பார்த்தாலும் புலிகளின் படகாக இருக்குமோ என்று அவர்களுக்குப் பயம். ஆகவே, கண்ணில் ஒரு படகு பட்டதும் சுட்டுக் கொண்டேதான் வருகிறார்கள். ஆள் இருக்கிறதா, இல்லையா? மீனவர்களா, புலிகளா என்பதெல்லாம் இறந்த பிறகுதான் கவனிப்பார்கள்" என்கிறார்.

தவிர, "இலங்கை ராணுவத்தினரிடமிருந்து நாங்கள் தப்பித்து ஓடுவதென்பது சாத்திய மில்லாத ஒரு விஷயம். ராணுவ விசைப் படகுகளின் HP(Horse Power) என்ன, ஒரு சாதாரண மீனவப் படகின் வலிமை என்ன...? அதனிடமிருந்து இப்படகு தப்பிக்க முயற்சி செய்வதாவது!" என்கிறார் அருளானந்தம்.

"இலங்கை ராணுவத்தினரால் தொல்லை என்றுதான் தெரிகிறதே, பின் ஏன் எல்லை தாண்டி அல்லது எல்லை வரையில்

• பழுது பார்க்கப்படும் படகு



மீன் பிடிக்கப் போகிறீர்கள்?" என்று கேட்டால்,

"கச்சத் தீவை இலங்கைக்கு விட்டுக் கொடுத்த 1974 ஒப்பந்தப் படி, இந்திய மீனவர்கள் கச்சத் தீவு வரை மீன்பிடிக்கப் போகலாம், அந்தக் கரையில் இறங்கி வலை காயப் போடலாம் என்று இருக் கிறது. அதன்படி நாங்கள் போகி றோம். தவிர - நல்ல, தரமான மீன்கள் கச்சத்தீவை ஒட்டிய பகுதி களில்தான் கிடைக்கிறது. தொழில் ரீதியில் மீன் தேடிப் போகிறவர் களுக்கு 'இது இந்திய மீன், இது இலங்கை மீன் என்று எப்படித் தெரியும்?" என்கிறார் அந்தோணி ராஜ்.

"எல்லை தாண்டி வரும் படகு கள்தான் இலங்கை ராணுவத்தின ரின் இலக்குகளாகின்றன என்றால் அதைத் தவிர்ப்பதுதானே புத்திசாலித்தனம்?" என்றால், அந்தோணி ராஜ் ஒரு கணக்கு சொல்கிறார் :

"தனுஷ்கோடிக்கும் தலைமன் னாருக்கும் நடுவே 18 கி. மீ. தூரம். அதேமாதிரி ராமேஸ்வரத்துக்கும் கச்சத் தீவுக்கும் இடையே 18 கி.மீ. தூரம். கரையிலிருந்து 3 கி. மீ. தள்ளிப் போய்தான் வலைவீச வேண்டும் என்பது நமது சட்டம். கரையிலிருந்து மூன்றாவது கிலோ மீட்டரில் - இந்தப் பகுதியில் பாறை கள் நிறைய இருக்கின்றன. அங்கு படகை நிறுத்தி வலைவீசுவது இயலாத காரியம். எனவே, இன்னும் மூன்று கி. மீ. தள்ளிப் போக வேண்டியதா யிருக்கிறது.

"ஒரு தரம் வலைவீசினால் நான்கு மணிநேரம் கழித்துத் தான் எடுக்க முடியும். இது நார்வே தொழில் நுட்பம். வந்து சொல்லிக் கொடுத்தார்கள். கடலில் நிறுத்தப்படும் படகு தரையில் நிற்பது போல் அப்படியே இருப்பதில்லை. மணிக்கு 2 கி. மீ. நகரும். எனவே, நாலு மணி நேரத் திற்கு 8 கி. மீ. ஆயிற்றா? ஏற்கெனவே ஆறு கி. மீ. கடந்தாயிற்று. இப்போது 8 கி. மீ. மொத்தம் 14 கி. மீ.

"இந்தியாவுக்கும் இலங்கைக் கும் இடையே 18 கி.மீ.தான். எல்லை என்பது 9 - 10 கி. மீக் குள் வரும். அதைத் தாண்டாமல் இருப்பது எப்படி சாத்தியம்?" என்று கேட்கிறார் அந்தோணி ராஜ்.

இதற்கு இவர்கள் சொல்லும் தீர்வுதான் என்ன?

"இந்திய ராணுவக் கப்பல்கள் எல்லைப்புறத்தில் நிரந்தரமாக நிற்க வேண்டும். அப்போதுதான் ஏழை மீனவர் களின் உயிருக்குப் பாதுகாப்பு" என்கிறார்கள்.


அங்கு அசல்; இங்கு நகல்!


கச்சத்தீவில் புனித அந்தோணியார் கோவில் ஒன்று உண்டு. வெகு அழகான கோவில். கச்சத்தீவு இலங்கைக்குப் போய் விட்டதும் கொஞ்சநாள் மீனவத் திருவிழா வெல்லாம் இல்லாதிருந்தது.

இப்போது ராமேஸ்வரம் கடற்கரை யோரத்தில் மீனவக் குப்பத்திலேயே ஒரு புனித அந்தோணியார் கோவில் எழுப்பி விட்டார்கள். அச்சு அசல் கச்சத்தீவு ஆலயம் போலவே! மறுபடி திருவிழா வெல்லாம் ஆரம்பித்து ஜோராக நடத்தி வருகிறார்களாம்.

"அடுத்த வாட்டி திருவிழா வர்றப்ப 'இன்விடேஷன்' அனுப்பறோம், வந்து பாருங்க, என்னா ஷோக்கா இருக்குதுன் னுட்டு!"

• இங்கு நகல்





• விசைப்படகுகளிடையே நாட்டுப் படகுகள்...

ஒரு வட்டாரத்தில் விசைப்படகுக்காரர்கள் வலைவீசி, நான்கு மணிநேரம் கழித்து வலை எடுத்தால் அத்தனை மீன்களும் கபளீகரம் செய்யப்பட்டுவிடும்.

நாட்டுப் படகுக்காரர்களுக்கு இது சாத்தியமில்லை. அவர்களால் கடலுக்குள் வெகுதூரம் போக முடியாது என்பது தவிர, விசைப்படகின் ப்ரொப்பல்லர் (சுழலும் விசிறி) இடையே சிக்கி, இவர்களது வலை பிய்ந்து நஷ்டமாகி விடுகிறது. எனவே, அவ்வப்போது இவர்களுக்குள் சண்டை, தகராறு.

மீனவரிடையே ஒரு மோதல்!

இதனைத் தீர்க்க, நீதிமன்றம் வரை போய் ஒரு முடிவெடுத்திருக்கிறார்கள். வாரத்தில் மூன்று நாட்கள் விசைப்படகுக்காரர்கள் மீன்பிடிக்கப் போகலாம். அடுத்த நான்கு நாட்கள் நாட்டுப் படகுக்காரர்கள்.

இதிலும் சிக்கல்! 'நாட்டுப் படகுக்காரர்களுக்கு இதனால் கிடைக்கிற வருவாய் மிகவும் குறைவாக இருக்கும்' என்று ஒரு சாரார் குரல். 'இல்லை, அதிகமாக மீன் அறுவடை செய்பவர் விசைப்படகுக்காரர்கள்தான் - எனவே பாதிப்பும் அவர்களுக்குத்தான் அதிகம்' என்று மற்றொரு குரல்.

இந்தக் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கப் பார்ப்பவர்கள் அரசியல்வாதிகள்!

"அரசுக்கு இத்தொழில் மூலம் பல கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறது. ஆனால் மீனவர்கள், அவர்களின் நல்வாழ்வு குறித்தெல்லாம் ஒருத்தரும் சிந்திப்பதில்லை" என்கிறார் அருளானந்தம்.

"எம். ஜி. ஆர்., மீனவர்களின்மேல் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டார். யாராவது மீனவர் இறந்தால் குடும்பத்திற்கு ரூ. 15,000 நஷ்டஈட்டுத் தொகையாகக் கிடைத்தது. கலைஞர் காலத்தில் அத்தொகை ரூ. 20,000 ஆனது. இப்போதும் தொகை அதிகம்தான். ஆனால் கிடைப்பதுதான் இல்லை" என்கிறார்கள்.

"உள்ளூர் அரசியல்வாதிகளும் சில 'போலி' மீனவர்களும் பணத்தைச் சுருட்டிக் கொண்டு விடுகிறார்கள்" என்கிறார்கள். சில அரசியல் பேர்வழிகள்தான் மீனவர்கள் போல் உலவுகிறார்களாம். கடத்தலில் ஈடுபட்டு புலிகளுக்கும் உதவும் இவர்களைத்தான் 'போலி மீனவர்கள்' என்கிறார்கள்!

"இந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் அமைச்சர் தென்னவன் இவர்களைக் கவனிப்பதில்லையா?" என்றால்,

"மினிஸ்டராயி இத்தனை நாளாச்சுங்களே, ஒரு வாட்டி இந்தப் பக்கம் வந்திருப்பாரா? ஒரு மீனவரைச் சந்திச்சிருப்பாரா? எங்க பகுதி கிராமங்கள் எப்படி இருக்கும்னு கூட அவருக்குத் தெரிஞ்சிருக்காதுங்க!" என்கிறார்கள்.


"அந்த 'அம்மா' காதுக்கு எப்படியாவது எங்க பிரச்னை போயி அவங்க ஒரு தீர்வு கண்டாத்தாங்க உண்டு!"

'அம்மா' என்ன தீர்வு காணப் போகிறார்?

- சபாடினி

உயர் வரிசைகளிலே!

பாம்பே டையிங் பள்ளிச் சீருடைத்துணிகள் அவர்களது எதிர்காலம் போலவே ஒளிமிகுந்தவை.



ஒளிவான உமது சின்னஞ்சிறு "நிபுணர்களுக்கு" மிகச்சிறந்ததே
தேவை. எனவே, முன்னைவிடச்சிறந்த பள்ளிச்சீருடைத்
துணிவகைகளைத் தருகிறது பாம்பே டையிங்.

- பாலியெஸ்டர் ப்ளெண்டெட் - சுருக்கம் விழாது.
  குறைந்த பட்ச இஸ்திரியே போதும்.
- நீடிப்பவை - நீடித்துழைக்கும், நிறம் மங்காது
- கடுமையான தினத்திற்கு மென்மையாக,
  வசதியாக இருக்கும்.
- எளிதில் துவைக்கலாம்.

உங்களுக்குத் தேவையான அதே நிறத்தில் கிடைக்கும்

பாம்பே டையிங் பள்ளிச் சீருடை
அணிவரிசைக்கு உட்பட்டவை:

துணிகள்

தூய பருத்தி மற்றும் பாலியெஸ்டர்
ப்ளெண்டுகளில்
சூட்டிங்ஸ் மற்றும் ஷர்ட்டிங்ஸ்

ரெடிமேட்கள்

ரெடிமேட் பள்ளிச் சீருடை ஷர்ட்ஸ் மற்றும்
டிரௌஸர்ஸ், டைஸ், ஸாக்ஸ் மற்றும்
பள்ளி பைகள்



பாம்பே டையிங்
ஸ்தாபிதம் 1879

"குழாயைத் திறந்தால்...

மெட்ரோ வாட்டர் பற்றி ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தார் வி. எ. ராஜன். (கல்கி, 12.6.94 - "குழாயைத் திறந்தால் கொட்டுது ஊழல்") அவை குறித்து மெட்ரோ வாட்டர் நிறுவனத்தில் விசாரித்த போது, நிர்வாக இயக்குனர் எம். எஸ். சீனிவாசன் தவிர, பர்சேஸ் மானேஜர் வரதராஜன், தலைமைப் பொறியாளர் சந்தானமூர்த்தி ஆகியோரும் உடனிருந்தனர். குற்றச்சாட்டுக்களுக்கு அவர்கள் அளித்த பதில் :

தண்ணீர் டாங்க் வாங்கியது பற்றி: குறிப்பிட்ட வாட்டர் டாங்குகள் சிட்கோவில்தான் வாங்கப்பட்டன. அவர்கள் குறிப்பிட்ட தொகை ரூ. 78,000. பேரம் பேசி ரூ. 59,900 என்று குறைத்தோம். இதைவிடக் குறைவான விலைக்கு வாங்கப் பட்டிருந்தால் அவை நிச்சயம் தரமுடையதாக இருந்திருக்காது.

கன்ஸல்டன்ஸி: திறமையான இஞ்சினியர்கள் மெட்ரோவில் இருந்தாலும் சில விஷயங்களில் கன்ஸல்டன்ஸி பெறுவது நல்லதே. காரணம், அதிநவீன (டெக்னாலஜி) முறைகளைக் கையாள வேண்டும் என்பதே. உலக வங்கியும் இதனை வலியுறுத்துகிறது.



நெய்வேலி லாரி டிரிப்: நெய்வேலியிலிருந்து வந்த நீர், இங்கு ரசாயனப் பரிசோதனைக்கு உள்ளாகி, நெய்வேலி நீர்தான் என்று உறுதியான பிறகே ஏற்றுக் கொள்ளப்பட்டது. அடுத்து, நெய்வேலி - சென்னை பயண நேரம் சராசரியில் கணக்கிடப்பட்டு, ஒவ்வொரு லாரியின் பயண நேரமும் கம்ப்யூட்டர் மூலம் சரி பார்க்கப்பட்டது. தவறு செய்த சில லாரிகள் விலக்கப்பட்டன. இந்நிலையில் ஒரு டிரிப் அடித்துவிட்டு, இரண்டு மூன்று டிரிப்புகளுக்குப் பணம் பெறுவது சாத்தியமே அல்ல.

கிருஷ்ணா நீருக்கு செட்டூரில் சுத்திகரிப்பு நிலையம்: அந்த நிலம் பொதுப்பணித் துறையிடமிருந்து பெறப்பட்டது. அவர்கள் கொடுக்க ஒப்புக்கொண்டபோது சரியாக இருந்தது. ஆனால் அதிகாரபூர்வமாக ஒப்படைக்கப்பட்டபோது ஏராளமான அளவுக்கு மண் எடுக்கப்பட்டிருந்தது. பள்ளத்தை இட்டு நிரப்பாமல் சுத்திகரிப்பு நிலையம் கட்ட முடியாது. இதற்கு ரூ. 36 லட்சம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் இது மெட்ரோவாட்டர் செய்த தவறினால் உண்டான செலவு அல்ல.

காண்ட்ராக்டுகளைப் பிரித்துக் கொடுப்பது: ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான மதிப்புள்ள வேலை எனில் அரசு அனுமதி பெற வேண்டும் என்றாலும், அதற்கும் ஒரு விளக்கம் உண்டு: உதாரணமாக, ஒரு திட்டம் இரண்டு கோடி ரூபாய் ஆகும் எனில், அந்த வேலைக்கான சிமெண்ட், கம்பிகள், மணல் போன்ற பொருள்களை வாங்கவே ஒரு கோடியே ஐந்து லட்சம் செலவு ஆகிறது என்றால், மீதி 95 லட்சம் ரூபாய்க்குத்தான் கட்டுமானப் பணி டெண்டர் விடப்படுகிறது. இதற்கு அரசு அனுமதி தேவையில்லை. போர்டு மெம்பர்களே தீர்மானித்துக் கொள்ளலாம். ஆக, இரண்டு கோடி ரூபாய் காண்ட்ராக்டை அரசு அனுமதியைத் தவிர்க்க இரண்டாகப் பிரிப்பதாகக் கூற முடியாது.

வி. எ. ராஜன் மீது பொய்ப் புகார் சொல்லி, கேஸ் போட வைத்து, சஸ்பெண்ட்: போர்டு மீட்டிங்கின் போது ராஜன் அனுமதி பெறாமலும், தம்மைத் தடுத்த பணியாளர்களை அடித்து விட்டும்தான் உள்ளே நுழைந்தார். எனவே, அந்தப் பணியாளர்கள் தாம் அவர் மீது வழக்குத் தொடுத்தனர். அதன் காரணமாகவே ராஜனும் அவருக்குத் துணை நின்றவர்களும் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். ராஜன் தவிர, மற்றவர்கள் தவறுக்கு மன்னிப்புக் கோரியதால் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இவ்வாறு மெட்ரோ வாட்டர் அதிகாரிகள் விளக்கம் தந்தனர். சென்னை நகரவாசிகளைப் பொறுத்தமட்டில், 'குழாயைத் திறந்தால் கிருஷ்ணா நீரோ, வீராணம் தண்ணீரோ கொட்டப் போவது எப்போது?' என்றுதான் காத்திருக்கின்றனர்.

சந்திப்பு : **பிரின்ஸ்**

கொட்டப்போகுது கிருஷ்ணா நீர்!"

பரபரப்பாய் ஒரு

ராமேஸ்வரம் நகரின் பணப்புழக்கத்தில் 50% மீன் பிடித்தல் மூலம் என்று 4 ஆம் பக்கக் கட்டுரையில் படித்திருப்பீர்கள். மீதி 50%? கோவில்! இவ்வூரின் ஆண்களுக்கு 'வேலை வாய்ப்பு' வழங்கியிருப்பவர்கள் யாத்திரிகர்கள்தாம். எப்படி?





• காலை நேரக் கடற்கரை...

யாத்திரைப் பயணியர் வழிகாட்டிகள் சங்கம்

வடநாட்டிலிருந்து வரும் ஏராள பக்தர்களை வரவேற்று, அவர்கள் தங்க வசதி செய்து கொடுத்து, ஊரைச் சுற்றிக் காண்பித்து, கோவில் சுற்றிக் காண்பித்து, தல வரலாறு சொல்லி, ஸ்நானம், தரிசனம் இன்னபிற சடங்குகளை நிறைவேற்றி வைத்து அவர்கள் ஊர் திரும்பும் வரை கூடவே இருந்து உதவும் வழிகாட்டிகள் (கெய்டுகள்) மொத்தம் 420 பேர் இருக்கிறார்கள் இங்கு. இவர்களுக்கு ஒரு சங்கம் இருக்கிறது. யாத்திரைப் பயணியர் வழிகாட்டிகள் சங்கம். அங்கீகரிக்கப்பட்ட, நல்ல வருவாய் தரக்கூடிய, உன்னத மான தொழிலாக இது, இப்பகுதி யில் செழித்திருக்கிறது.

எஸ். தட்சிணாமூர்த்தி

யாத்திரைப் பணியாளர் சங்கத்தின் முன்னாள் தலைவர் தட்சிணாமூர்த்தி சொல்கிறார் :

"இவ்வூர் மக்களுக்கு அநேகமாக இந்தியாவின் எல்லா மொழிகளும் தெரியும். வருபவரிடம் அவரது தாய்மொழியிலேயே பேசி, அவர்களது பயண வழிகாட்டியாக எங்களை அமைத்துக் கொள்ளக் கோருவோம். அவர்கள் விரும்பும் பரிகாரங்களைச் செய்து வைக்க, புரோகிதர்களையும் ஏற்பாடு செய்து தருகிறோம்.

எல்லாம் முடிந்து அவர்கள் தரும் 'அன்பு ஊதியத்தை'ப் பெற்றுக் கொள்வோம். பேரம் பேசுவதில்லை. சில நேரங்களில் அவசரத்தில் அவர்கள் தரும் அஸ்தி கலசத்தைக் கூட நாங்கள் ஏந்தி நிற்க வேண்டி வரும். இதற்கெல்லாம் சங்கடப்பட முடியாது!"



• கடற்கரையில் புரோகிதர்...

புரோகிதர்கள்

ராமேஸ்வரத்தில், சுமார் 30 தொழில் முறைப் புரோகிதர்கள் இருக்கிறார்

பக்தி பிஸினஸ்!


கள். தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, வங்காளம் என்று பல்வேறு மாநிலங்களிலி ருந்து வந்திருக்கும் புரோகிதர்கள். கைய்டுகள் அழைத்து வரும் யாத்ரீகர்களுக்குத் தேவை யான பரிகாரங்கள், ஸ்நான வழிமுறைகள், சங்கல்பங்கள் போன்றவற்றைச் செய்து வைப் பது இவர்கள் தொழில்.

கமிஷன்

கைய்டுகள் அழைத்து வரும் யாத் ரீகர்கள் தரும் 'அன்பு ஊதியம்', 60% - 40% என்ற விகிதத்தில் முறையே கைய்டுகளுக் கும் புரோகிதர்களுக்கு மாகப் பிரிக்கப்படுகிறது. தவிர ஊரிலுள்ள எல் லாக் (வெற்றிலை, பாக்கு, பூக் கடைகள் உட்பட) கடைகளிலும் கைய்டுகளுக் குக் கமிஷன் உண்டு. ஏனெ னில் வாடிக்கையாளர்களை அங்கு அழைத்து வருபவர் கள் அவர்கள்தானே?

சீசன் டிக்கெட்

கைடுகளுக்கு நாட்டின் பல்வேறு (சென்னை, மதுரை, பம்பாய், கல்கத்தா) பகுதிகளுக் குச் சென்று வர புரோகிதர்கள் டிக்கெட் வாங்கித் தந்து விடுவதும் உண்டு. கிட்டத்து ஊர்களுக்கு சீசன் டிக்கெட்டே வாங்கித் தந்து விடுகிறார்கள். கைய்டுகள், பல்வேறு ஊர்களுக்குச் சென்று, அங்கிருந்து புறப்படும், 'ராமேஸ் வரம் எக்ஸ்பிரஸ்'களில் ஏறி, பெட்டிகளில் பயணம் செய்யும் பயணிகளிடம் பேச்சு கொடுக்கிறார்கள். ராமேஸ்வரத்தில் அவர் களுக்கு எல்லா வகையிலும் உதவுவதாக 'கேன்வாஸிங்' ஆரம்பித்து விடுகிறார்கள். ஊருக்கு வந்ததும் முன்பே பேசி வைத்தபடி புரோகிதர்களிடம் அவர்களைச் சேர்ப்பித்து விடுகிறார்கள்.



• கோதானம்



• கடற்கரையோரம் உடை மாற்றி...

ராமநாத தீட்சிதர்

பல தலைமுறைகளாக ராமேஸ்வரத்தில் வசித்து வரும் குடும்பத்தைச் சேர்ந்த ராமநாத தீட்சிதர் சொல்கிறார் :

"கைய்டுகள் மூலம் அழைத்து வரப்படும் யாத்ரீகர்களுக்கு நான் புரோகிதம் செய்வது கிடையாது. பரம்பரை பரம்பரையாக எங்கள் வம்சத்தில் வருபவர்களிடம் மட்டுமே புரோகிதம் செய்து கொள்வது என்ற நோக்கில் பலர் இருக்கிறார்கள். அவர்களும் அவர்களின் நண்பர்களும் மட்டும்தான் எங்களை அணுகுவார்கள் கமிஷன் கொடுத்து இதனை ஒரு 'பிஸினஸ்'ப் பண்ணுவதில் எனக்கு விருப்பம் இல்லை!

கடற்கரையில்...

கடற்கரையில் நாம் பார்த்த சில புரோகிதர்கள், மந்திரங்களை மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார் கள்! 'விட்டால் கந்தசஷ்டி கவசம் சொல்லியே முடித்து விடுவார்கள், என்று கமெண்ட் அடித் தார் ஒரு உள்ளூர் நண்பர்.

"மந்திரத்தை மாற்றிச் சொல்பவர் யாராவது ஓரிருவர் இருக்கலாம். எல்லாரும் அப்படி என்று முடிவு கட்டி விடக்கூடாது. இத் தொழி லில் பெரிய வருமானம் என்று சொல்வதற்கில்லை. ஒரு நாளைக்கு நூறு ரூபாயும் கிடைக்கும். இருபது, இருபத் தைந்தோடும் முடிந்து விடும். வருவதை நாங்கள் கைடு களுடன், ஒரு 'அண்டர் ஸ்டாண்டிங்'கில் பிரித்துக்

• சில்லறை வியாபாரம்





• தட்சிணாமூர்த்தி



• சாம்பனம்



• ராமநாத தீட்சிதர்

ஸ்டாண்டிங்'கில் பிரித்துக் கொள்கிறோம். இதில் தவறு ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. யாரையும் ஏமாற்றுவதில்லை.'' என்கிறார் ராமு சாஸ்திரிகள்.

கோதானம்

ராமேஸ்வரத்திற்கு வருபவர்கள் பெரும்பாலும் கோதானம் (பசு தானம்) செய்ய விரும்புகிறார்கள். அந்தணர்களுக்குப் பசு தானம் செய்வதால் வாழ்க்கை வளம் பெறுவதாக நம்புகிறார்கள். அத்தனை பேரும் தானம் செய்ய பசுவுக்கு எங்கே போவது?

ஒரே பசு தினம் தினம் இருபது, முப்பது பேருக்குத் தானமாகிறது இங்கே. விஷயம் தமாஷானது. மணிகண்டன் என்பவரைச் சந்தித்தோம். அவரிடம் ஒரு பசு இருக்கிறது.

கோதானம் செய்ய விரும்புபவர்களை, கைய்டுகள் இவரிடம் கொண்டு விடுகிறார்கள். பசுவின் விலை மிகக் குறைச்சல் ரூ. 12.50 தான்! இவரிடம் பசுவை வாங்கி யாருக்காவது (தானம் பெறுவதற்கும் 'நியமிக்கப்பட்ட' ஆட்கள் இருக்கிறார்கள்) தானம் செய்து விடலாம். தானம் வாங்கியவர் அந்தப் பசுவை (கொஞ்சம் கமிஷன் வாங்கிக் கொண்டு) உரியவரிடமே திருப்பித் தந்து விடுகிறார்! இப்படியாக ஒரு பசு, ஒரு நாளைக்குப் பலருக்குத் தானமாகிறது இங்கே!

சில்லறை வியாபாரம்

புரோகிதர்களுக்கு அவ்வப்போது நாலணா, எட்டணா என்று தட்சணை கொடுக்க வேண்டும் அல்லவா? சில்லறைக்கு எங்கே போவது? கடற்கரையிலேயே ஒரு கிழவர் பத்து பைசா, ஐந்து பைசா, நாலணாக்களை அடுக்கி வைத்து, உட்கார்ந்திருக்கிறார். ஒரு ரூபாய்க்கு 10 காசுகளாகச் சில்லறை வேண்டுமென்றால் 10 பைசா கமிஷன். ஐந்து காசுகளாக என்றால் 15 காசு கமிஷன்!

சிக்கல்

சில யாத்ரீகர்கள் பணம் தொலைந்து விட்டது, பையைக் காணோம் என்றெல்லாம் கைய்டுகளிடம் புகார் சொல்வார்களாம்.

"நிஜமோ பொய்யோ - எப்போது நாங்கள் அவர்களின் சுற்றுப் பயணத்துக்குப் பொறுப்பேற்றோமோ அப்போதே இது போன்ற பிரச்னைகளைச் சந்திக்கவும் தயாராகி விடுகிறோம். நாங்களே சிலருக்கு டிக்கெட் வாங்கிக் கொடுத்து அனுப்பி வைத்த அனுபவமும் உண்டு. சிலர், ஊருக்குப் போய் பணம் அனுப்புவார்கள். சிலர் அனுப்பமாட்டார்கள். இதெல்லாம்தான் இத்தொழிலில் சிக்கல்" என்கிறார் சாம்பனம். இவர் யாத்திரைப் பணியாளர் சங்கத் தலைவர்.

- மோனிகா செலஸ்

மண்ணின் மைந்தர்!



• அப்துல் கலாம்

"கிணற்றில் கல்லைத் தூக்கிப் போட்டுட்டு தண்ணில வர வட்டங்களையே ரொம்ப நேரம் பார்த்துக்கிட்டிருப்பான். புத்தகங்களைத் தேடித் தேடி நிறைய படிப்பான்; யோசிப்பான்; அதிகம் பேச மாட்டான்.."

- இப்படி தமது தம்பியின் 'பாலகாண்டத்தை'ப் படிப்பவர் ஏ.பி.ஜே. முகம்மது முத்துமீரா லெப்பை மரைக்காயர். தம்பி...?

ராமேஸ்வரத்துக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்க்கும் ஏவுகணை விஞ்ஞானி அப்துல் கலாம். 'விஞ்ஞானியாக மட்டுமின்றி சிறந்த கவிஞராகவும் கலை ரசிகராகவும் விளங்குவார் என்பதற்கும் 'பாலகாண்டத்திலேயே அறிகுறிகள் தெரிந்தன' என்கிறார் அண்ணன்.

"இப்போதும் இங்கே வந்து போய்க்கிட்டிருக்காரா...?"

"ம்ஹூம்! அதற்கு அவருக்கு நேரம் கிடைக்குமா..? கடைசியா வந்தது எங்க தம்பி மகனோட கல்யாணத்துக்கு. அவர் உதவியோடதான் அந்தக் கல்யாணம் நடந்தது."

"கலாம் ஏன் கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை...?"

"அவருக்குக் கல்யாணம் செய்ய நிறைய முயற்சிகள் எடுத்துக்கிட்டோம். ஆனால் எதுவும் கை கூடலை. ஒரே ஒரு முறை. பெண் பார்க்கச் சம்மதிக்க வைத்து வரவழைச்சோம். அப்போ என் மனைவி, மகன் இரண்டு பேருக்குமே உடம்பு சரியில்லாமல் போய் ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டியதாகிவிட்டது. 'இந்த மாதிரி நிலையில் நான் பெண் பார்க்க வர மாட்டேன்'னு சொல்லிட்டான். மருத்துவச் செலவுக்கு 'செக்' எழுதிக் குடுத்துட்டுப் போயிட்டான்!" என்கிறார் மரைக்காயர்.



• முகமதுமீரா மரைக்காயர்

இவர்கள் குடும்பத்து முதாதையர்கள் ராமநாதசுவாமி கோயிலின் அறங்காவலர் பொறுப்பு வகித்திருக்கிறார்கள். தெப்போற்சவத்தில் இவர்களுக்கு முக்கிய பங்கு இருந்ததாம். அது முடிந்ததும் இந்த முஸ்லிம் குடும்பத்தினருக்குப் பரிவட்டம் கட்டி மரியாதை செய்யும் வழக்கமும் இருந்ததாம்!

வாசகர் தகவல் : சந்திரசேகரன், ஜெகாதா.

இதோ ஒரு ஸ்டேட்மெண்ட் போட்டி முடிவு!



"ஸ்டேட்மெண்ட் சிகாமணி" பட்டமும் ரூ.250/- பணமுடிப்பும் பெறுபவர்: பி.நரேந்திரன், நெ.1., கொத்தூர் (அஞ்சல்) நாட்டரம்பள்ளி(வழி) வ.ஆ.அ.மாவ-635852.

இதோ அவருடைய ஸ்டேட்மெண்ட்:

தமிழ்க் குடி மக்களே! மக்களின் இரத்தத்தையெல்லாம் உறிஞ்சி எலும்புக் கூடாக விட்டுச் சென்ற சில மூட்டைப் பூச்சிகள் என்னை ஊழல் பேர்வழி என்கிறார்கள். ஆயிரம் கார்களில் பவனி வந்தால் அரசுக்கு பெட்ரோல் இழப்பு ஏற்படுமென்று ஐந்நூறு கார்களில் வந்து மேடைக்கு ஒரு மைல் தூரத்திலே கார்களை நிறுத்தி விட்டு, மலர்ப் பாதையில் கால் கடுக்க நடந்து வந்து பெட்ரோலை மிச்சப்படுத்தும் நானா ஊழல் பேர் வழி! நான் செல்லும் பாதையில் மக்களுக்கு 'டிராபிக் ஜாம்' ஏற்படக் கூடாது என்று தனி விமானம் வாங்கிய நானா ஊழல் பேர் வழி! மக்களுக்கு வெவ்வேறு பெயர்களால் குழப்பம் ஏற்படக் கூடாது என்பதால் நாடு முழுவதும் என் பெயரை வைத்து குழப்பத்தை நீக்கிய நானா குற்றவாளி? என் மீது பழி போடும் அவர்கள் செய்த ஊழலை மக்கள் சூரியனுக்கே வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டதை அவர்கள் மறந்து விட்டார்கள். உண்மையை ஊமையாக்க முடியாது. அவர்களது பேச்சை மக்கள் காது கொடுத்துக் கேட்க மாட்டார்கள்.

பின் வரும் இரு ஸ்டேட்மெண்ட்களுக்கு ஆறுதல் பரிசு தலா ரூ.25.

• தோழர்களே! உழுத்தர்கள் கூறிய ஊழல் குற்றச்சாட்டு கேட்டீர்களோ? யார் மீது? உன் அண்ணன் மீது! இந்த அநாதை மீது! நிலவிலே களங்கம் உண்டு! பாலிலே நீருண்டு! பழத்திலே அழுகல் உண்டு! பல்லிலே சொத்தை உண்டு! ஆனால் உன் தலைவன் மீது குற்றமுண்டோ? பணி செய்துபலன் என்ன என்று ராஜினாமா செய்யத் துடிக்குது நெஞ்சம். தீக்குளிக்கத் துடிக்கும் தொண்டரணி ஒரு புறம்! புறம் சொல்லிய புலவர்களை தவிடு பொடியாக்கத் துடிக்கும் போர்ப்படை மறுபுறம்! இதை எண்ணியே முன் என்றாலும் பதவியில் உள்ளேன்! நிதி வேண்டும் என்றால் உன்னைக் கேட்கமாட்டேனா? அடலேறே! தேனியென சுழன்று கோடியென கொட்டிடு நிதியை! அதுதான் என்மீது சுமத்தப்பட்டுள்ள பழியை நீ நம்பவில்லை என்று எனக்குக் காட்டும் சாட்சியம்!

— ஜீவா, 1, பிள்ளையார் கோவில் வீதி, கோபி, பெரியார்(மாவ)638452.

• என் காருக்குப் பெட்ரோல் ஆன கண்மணிகளே!

என் கண்ணுக்கு லென்ஸ் ஆன மின் மினிகளே!

உங்கள் சோற்றுக்கு உப்பாக இருக்கும் என்னைச் சிலர் தப்பாகப் பேசிச் சேற்றுக்குள் தள்ளப் பார்க்கிறார்கள்; அவர்களை ஆற்றுக்குள் தள்ள வேண்டிய வேளை நெருங்கி விட்டது. அப்படி என்ன ஊழல் செய்து விட்டேனாம்?

பாட்டில் மூடியில் பந்தைத் தேய்த்தேனா?

காட்டில் ஒளிந்து கடத்தல் செய்தேனா?

சினிமா தியேட்டரில் வீட்டைக் கிழித்தேனா?

உத்தமனான எனக்கா ஊழல் பட்டம்! சத்தியமாய் இது எதிரிகள் இட்டம்! அடங்கட்டும் இனி அவர்களின் கொட்டம்! நாளை நமக்கே உச்சக் கட்டம்!

— என்.சிவன் பிள்ளை, 89, ஏ.5.மேலத் தெரு, கிருஷ்ணன்கோவில், நாகர் கோவில்–629001.



Kalki Shopping Page

Kalki Shopping Page



அமரர் கல்கி அவர்கள் பெயரில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளை ஆண்டுதோறும் ஏழை மாணவர்களுக்கு உதவி வருகிறது. சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டதைக் காட்டிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கு (94 - 95) ரூ. 5000/- அதிகரித்து மொத்தம் ரூ. 45,000/- உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது. இத்தொகை பின்வருமாறு விநியோகமாகும்.

●● பட்ட மேற்படிப்பு அல்லது ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ள மாணவர்கள் இருவருக்குத் தலா ரூ. 1,500 வீதம் ரூ. 3,000/-

●● இசை அல்லது நாட்டியம் பயிலும் இருவருக்குத் தலா ரூ. 1000 வீதம் ரூ. 2,000/-

●● பதினாறு கல்லூரி மாணவர்களுக்குத் தலா ரூ. 1,000 வீதம் ரூ. 16,000/-

●● நாற்பது உயர்நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்குத் தலா ரூ. 600/- வீதம் ரூ. 24,000/-

கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை

ஏழை மாணவர்களுக்கு உதவி ரூ. 45,000

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக்கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற, தமிழகமெங்கும் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து அவர்கள் தங்கள் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் மட்டுமே வரவேற்கப்படுகின்றன.

உதவித் தொகைகளைப் பெற, மாணவ மாணவியர் படிப்பில் சிறந்தவர்களாகவும் அதேசமயம் கல்வியைப் பெற்றோர் உதவியுடன் மட்டும் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும். அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு கல்வி நிலையத்தில் சேர்ந்து படிக்க அனுமதி பெற்றிருக்க வேண்டும். இவற்றை உறுதிப்படுத்தக் கல்லூரி அல்லது பள்ளி முதல்வரின் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகலை முதல்வரின் கையொப்பத்துடன் இணைப்பது அவசியம்.

விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவித் தொகை பெறத் தகுதியுள்ள மாணவ மாணவியரை அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. கடிதப் போக்குவரத்து கிடையாது.

விண்ணப்பங்கள் வந்துசேரக் கடைசி தேதி ஜூலை 31, 1994.

விலாசம் :

நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை,
நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம்,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.


THE SPICE OF SCHOOL LIFE



“நாலுங்கிழ இருபத்தெட்டு, சந்நிதித் தெரு. மிஸ்டர் சீதாராமன் வீடு இதுதானே?”

"உக்கும். இது விளக்கெண்ணெய் செட்டியார் வீடாக்கும். மிஸ்டர் சீதாராமன் ரெண்ட்டுக்குத் தான் இருக்கார்" என்று சட்டென்று சொல்ல வந்ததை உதட்டோடு நிறுத்தி, "அதே"என்றாள் ரேணுகா.

"உள்ளே வரலாமா? ஐயாம் ஜெகந்நாதன்."

"வரலாம். அப்பா போஸ்ட் ஆஃபீஸ் வரைக்கும் போயிருக்கார். யு ஹாவ் டு வெயிட்."

"அது பரவாயில்லை. ஒரு தம்ளர் தண்ணீர் கிடைக்குமா? என்ன வெயில்!"

வந்தவன் உட்கார ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு, ரேணுகா உள்ளே போனாள். வெப்ப வேகத்துக்கு ஒரு தம்ளர் போதாது என்று தோன்ற, சொம்பில் நீர் கொண்டு வந்து அவன் எதிரே வைத்தாள்.

“ஐயாம் ஜகந்நாதன்.”

“வாசற்படியிலேயே சொல்லியாச்சு.”

“தஞ்சாவூர் சொந்த ஊர். உத்தியோகம் அங்கேயே. பேங்க் ஆஃப் பரோடா. ஏழு வருஷம் எக்ஸ்பீரியன்ஸ். கொஞ்சம் எழுத்துப் பித்து. உங்கப்பாவின் ரசிகன். போனவாரம் லெட்டர் போட்டிருந்தேன். மெட்ராஸ் வந்தா, வரச் சொல்லி எழுதியிருந்தார், பதிலுக்கு. இந்த வாரம் வரவேண்டியதாயிற்று. அதான்.”

“பார்த்தேனே உங்க லெட்டரை. ஐந்து சுரத்தான் துணைன்னு போட்டு, ரோஸ் கலர் இன்லண்டுல மில்லி மீட்டர் விடாம எழுதியிருந்தீங்க.”

இதற்கென்ன பதில் சொல்வதென்று அவன் யோசித்தான். ரேணுகா, ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு அவன் எதிரே உட்கார்ந்தாள். ஆஹா, என்ன ஒரு உயரம்? என்ன ஒரு கலர்? என்ன ஒரு கூர்மையான மூக்கு? என்ன ஒரு கச்சித மீசை? அந்த ஷேவிங்கில் என்ன ஒரு ப்ரொஃபஷனல் டச்? ரேணுகா, மனத்துக்குள் அவனுக்கு ஐம்பத்தெட்டு மார்க் போட்டாள். சே, போனால் போகிறது. அறுபது.

பா.ராகவன்

“ஏதாவது சாப்பிடுகிறீர்களா? மோர்? ஃப்ரிட்ஜெல்லாம் கிடையாது. ஸோ, கூலிங் எதிர்பார்க்க வேண்டாம். ஏழை எழுத்தாளர் வீடு" என்று சிரித்தாள்.

“அடடே, அதொண்ணும் வேண்டாம்" என்று அவசரமாய் மறுத்தான்.

ஏதடா, சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத் தக்க ஒரு பூலோக ரம்பை, படு கேஷுவலாக இப்படி எதிரே கால்மேல் கால்போட்டு பரபுருஷனோடு சலபமாகப் பேசிச் சிரிக்கிறாளே என்று நினைத்திருப்பான்.

“போஸ்ட் ஆஃபீஸ் ரொம்ப தூரமோ?”

“போரடிக்கிறேனாக்கும். இதோ வந்து விடுவார்.”

“ஐயோ, யு ஹாவ் மிஸ்டேக்கன் மி.”

அவன் தவிப்பு அவளுக்கு ரசமாயிருந்தது.

“சேச்சே, சும்மா சொன்னேன். வெயிட் பண்ணுங்க, மோர் கொண்டு வரேன்.”

ரேணுகா, ஃபிரேமிலிருந்து வெளியேறியதும் அவன் அறையை நோட்டமிட்டான். சந்தேகமில்லை. விளக்கெண்ணெய் செட்டியார் வீடாகத் தான் இருக்கும். சுவரெல்லாம் எண்ணெய்க்கறை. சாந்துக்கறை. பால் கணக்கு. உத்தரக் கொம்பில் எட்டுமுழம் வேட்டியும் ஏழெட்டு டவல்களும்.

ATTEMPT

ஜன்னலோர கோட் - ஸ்டாண்டில் சாயம் வெளுத்த இரண்டு புடைவைகள். டேபிளில் பாண்ட்ஸ், ஷிங்கார், அஸ்வினி ஹேர் ஆயில், கோபுரம் பூசு மஞ்சள் தூள், ஸ்டிக்கர் பொட்டு, ஸ்பூன், டேபிள் லாம்ப், அட, ஃபேர் அண்ட் லவ்லி.

அங்கே அலமாரியில் அழுக்குப் புத்தகங்கள். இங்கே தரையில் விரித்த நிலையில் பாம்புப் பஞ்சாங்கம், திங்கட் கிழமை ஏழரை ஒன்பது ராகு காலம்.

வாசலில் சப்தம். ஆஹா, சீதாராமன். ஐயா வணக்கம். அடியேன் ஜகந்நாதன். தஞ்சாவூர் பேங்க் ஆஃப் பரோடா. போன வாரம் போட்டிருந்தேன் லெட்டர்.

"உட்காருங்கோ. ரேணுகா, ஸாருக்கு குடிக்க என்ன கொடுத்தே?"

"இதோ, மோர்."

அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். அவள் உள்ளே போனாள். டைரியைப் பிரித்தாள். அப்பாவைப் பார்க்கவரும் இளம் ரசிகசிகாமணிகளின் லிஸ்டில் ஒரு புதுச் சேர்க்கை. தஞ்சை மண்ணில் வார்த்தெடுத்த பிஞ்சு முகம். கொஞ்சு முகம். மஞ்சு முடி மேல் பறக்க, விஞ்சும் இதழ் தான் சிரிக்கும் பஞ்சுமுகம். அடச்சீ, உடைப்பில் போடு உன் உருப்படாத கிறுக்கலை.

'இத்தனை பேசினோமே, உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா என்று ஏன் கேட்கத் தோன்றவில்லை தனக்கு?' என்று ரேணுகா நினைத்துக் கொண்டாள்.

"போடீபோ. நண்டும் சிண்டுமா ரெண்டு குட்டிகள். குண்டும் குழியுமா கார்ப்பரேஷன் ரோலர் சைஸில் ஒரு மனைவி" என்று சொல்லிவிடப் போகிறானோ என்கிற பயம் காரணமாயிருக்கலாம்.

போன வாரம் வண்ணாரப் பேட்டையிலிருந்து நாலு கமலாப்பழங்கள் வாங்கி வந்திருந்த (ஒன்று அழுகல்) நாகராஜன், முன்னதாக அப்படித்தான் சொல்லி அவளை ஒரு இரவெல்லாம் அழவைத்திருந்தான். அழுகை-அவனுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதே என்பதற்கல்ல; அனாவசியமாக எழுபது மார்க் கொடுத்து விட்டோமே என்பதற்காக.

கல்லூரி நாட்களில் மார்க் போடுவது தவிர, கல்யாணம் ஆகிவிட்டதா, இல்லையா, குழந்தை

தமிழ் சிறுகதைதாங்க. தலைப்பு மட்டும்தான் இங்கிலீஷ். சும்மா ஒரு சேஞ்சுக்கு.

உண்டா, இல்லையா, சுமார் சம்பளம் எத்தனை இருக்கும், ஆள் எப்படி- அழுத்தமா, இளசா, கண்ணில் குறும்பு எத்தனை பர்ஸென்ட், சோகம் எத்தனை பர்ஸென்ட், குமுதம், விகடன் படிக்கிற டைப்பா காலச்சுவடு, முன்றில் தேடுகிற டைப்பா, அல்லது மௌண்ட் ரோடு ஹிண்டு வாசலில் இருபுறமும் 'பின்' அடித்த புத்தகம் பொறுக்குகிற டைப்பா என்றெல்லாம் உடனே, உடனே பார்த்த ஸெக்கண்டில் ஒப்பித்து விடக் கூடியவள்தான். இப்போது முடிகிறதில்லை. நாற்பது வயதுக்காரனைப் பார்த்தாலும் கல்யாணம் ஆனவனா, இல்லையா என்று சட்டென்று தீர்மானிப்பது கஷ்டமாயிருக்கிறது. அதுசரி, இதென்ன நெற்றியில் எழுதி ஒட்டி வைக்கிற விஷயமாக்கும்?

ஆனால் அவளை மட்டும் பார்த்ததும் கேட்டு விடுகிறார்கள். அறுபது வயது கோமுப்பாட்டியாயினும் சரி; அதற்கு மேலும், கிழம் ஜீவித்திருக்கிற எந்த வயசுக்காரர்களாயிருந்தாலும் சரி:

"ஏண்டியம்மா, இன்னும் ஒண்ணும் தகையலையாக்கும்?"

"அது பற்றி உனக்கென்ன? ஃபிக்ஸ்



ஆனால் வந்து சொல்கிறேன். கல்யாணத்திற்கு வந்து சேர். மூணுவேளை நன்றாகத் தின்னு. முடிந்தால் மொய் எழுது. பின் இடத்தை காலி பண்ணு. பிறிதொருமுறை இப்படி நடு ரோடில் நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்டால் விளைவுகள் விபரீதமாயிருக்கும். பீ கேர் ஃபுல்!"

இருபது வயதில் அப்பா வரன் பார்க்க ஆரம்பித்தபோது அவளுக்குச் சந்தோஷமாகத்தான் இருந்தது. தன்னை, கையில் மாலையோடு சுயம்வர மண்டபத்தில் காத்திருக்கும் இளவரசியாகவும், முகம் தெரியாத அந்த யாரோ ஒருவனை குதிரையில் வந்திறங்கும் பிருதிவிராஜனாகவும் எண்ணிக் கொண்டே இரண்டு வருடம் கழித்தாள். பின் குதிரையிலிருந்து கொஞ்சம் கீழிறங்கி கார், பைக், ஸ்கூட்டர், சைக்கிள் என்று பலவாறாக எண்ணிப் பார்த்தாள். பின்னாளில், நடந்து வந்தாலும் போதும் என்று அவள் நினைக்க ஆரம்பித்த அன்று, முதன் முதலாகக் கவிதை எழுதினாள். உருக்கமான வரிகளுடன் உன்னதமான சோக கீதம். இன்ட்டலெக்சுவலாவது? புடலங்

காயாவது? நாநூறு பக்க நோட்டுப் புத்தகம் ஒருசில மாதங்களில் கவிதைகளால் நிரம்பியது.

அப்பா அவற்றைப் படித்திருப்பார், நிச்சயம். ஆயினும் அவர் செய்யக்கூடியது ஏதுமில்லை. ரிடையர்டு ஸ்கூல் வாத்தியார். ஏழை எழுத்தாளர். பேங்க்கில் எழுநூற்றி நாற்பது ரூபாய் பேலன்ஸ் இருக்கிறது. தவிர அவ்வப்போது அவர் கதைகளுக்கு வரும் ரூபாய் எழுபத்தைந்து, சன்மானம். கலியுகம் முடிந்து, பிறிதொரு புலியுகம் வந்தாலும் இந்தப் பத்திரிகை ஆபீஸ்களில் எழுபத்தைந்து ரூபாய்க்கு மேல் எழுபத்தைந்து பைஸா கூட தரமாட்டார்கள் போலும். அதென்ன, 'ரௌண்ட்' பண்ணி ஒரு நூறாக்கினால் குறைந்தா போய் விடுவார்கள்?

பொருளாதாரம் ஒரு பொருட்டல்ல; எப்படியும் சமாளித்து விட முடியும் என்று அப்பா சொல்லியிருந்தார். ஆனால் கட்டங்கள் போட்ட ஒரு துண்டுக் காகிதம் அவளை என்னவெல்லாம் பாடு படுத்துகிறது? இது குறித்து மேலும் விவரம் அறிய, ரேணுகாவின் நாநூறு பக்க நோட்டில் நாற்பத்தேழாவது பக்கத்தில் 'கிரகங்களே! கிரகங்களே!' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கவிதையைப் படித்தாக வேண்டும்.

ஆடுபுலி ஆட்டத்தில்
சிக்கிக் கொண்ட ஆட்டை
ஏன் எந்தப் புலியும் ஏறெடுக்கவில்லை?
கட்டங்களைக் காவல் காக்கும்
கிரக பூதங்களே,
உங்கள் தடுப்பு தரும்
சலிப்பால்,
புலிகள் எல்லாம் சைவமாகி விட்டால்
ஆடுகளுக்கு ஏது
மோட்ச சாம்ராஜ்ஜியம்?

கல்லூரி நாட்களில் இரண்டு பேர் அவளுக்கு கடிதக் காதல் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவனை– மைலாப்பூர்க்காரன், தேவதாஸ் என்ற பெயர் படைத்தவன் – ஆடிட்டோரிய வளாகத்தில் ஏழெட்டுபேர் முன்னிலையில் செருப்பால் அடித்திருக்கிறாள். அடுத்தவனுக்கு, அடுத்த நாளே டி.ஸி.வாங்கிக் கொடுத்து ஊர் போய்ச் சேர்ந்து, சமர்த்தாக விவசாயம் பார்க்கச் சொல்லியிருக்கிறாள்.

பிற்பாடு கல்லூரி முடிந்து ஏழெட்டு பஜ்ஜி, சொஜ்ஜி கேஸ் வந்து போன பிறகு மேற்படி இருவரை நினைத்து, வருந்தி, உருகி ஒரு முழு நீள ஆசிரியப்பா எழுதியிருக்கிறாள். அதற்கு நூற்றி நாற்பத்தொன்றாவது பக்கத்துக்குப் போக வேண்டும். வேண்டாம்; லேட்டாகி விடும்.

தனக்கு ஏன் கல்யாணம் அவசியம் என்று ரேணுகா யோசித்துப் பார்த்தாள். ஒரு பீரியடில் கல்யாண ஆசையெல்லாம் தனக்கு வராது என்று எல்லாரைப் போலவும் தான் நினைத்துக் கொண்டும், சொல்லிக் கொண்டும் இருந்தாள். ஆனால், பசியைப் போல, உறக்கம் போல, சுவாசம் போல-ஏதோ ஒரு அனிச்சை உணர்வு விடாது பிராண்ட ஆரம்பித்தபோது அவள் தீர்மானித்தாள். ஜாதகக் கட்டோடு வந்த மொப்பெட் தரகர் களுக்கு ஃபில்டர் காப்பி போட்டுக் கொடுத் தாள்.

"என்னங்க, ஜீனியஸுங்க உங்கப்பா!"

- தஞ்சாவூர் ஜெகந்நாதன்.

"முடிஞ்சுதா உங்க இலக்கிய சர்ச்சை?"- புடைவைத் தலைப்பால் நெற்றியை ஒற்றிய படி மிதந்துவந்தாள் ரேணுகா.

"அதென்ன, அத்தனை சீக்கிரம் முடிஞ் சிடுமா. கொஞ்சம் இரு. முனைக் கடையில் வெற்றிலை, சீவல் வாங்கிண்டு வர்றேன்னு போயிருக்கார்."

"மத்தியானம் சாப்பாடு இங்கதானே. சொன்னீங்கன்னா எக்ஸ்ட்ராவா ஏதாவது செய்துடலாம்."

"ஐயோ, எதுக்குங்க சிரமம்?"

"உக்கும். யூஷுவல் டயலாக்."

சிரித்தான்.

"நல்லா மடக்கறீங்க!"

"என்ன சொல்றார், உங்க பிராண எழுத்தாளர்?"

"அவர் என்னங்க, இன்னும் நூறு வருஷம் கழிச்சிப் பிறக்க வேண்டியவருங்க. பயங்கரமான தாட்ஸ் எல்லாம் வெச்சிருக் கார்."

"என்னவாம்?"

"உலகத்துல ஜாதிகள் ஒழியணும்னா முதல்ல, மேரேஜ்ங்கர கான்செப்டை அழிக் கணுங்கறார். ஜாதி பற்றிய பேச்சு ஆரம்பிக் கிற இடமே கல்யாணம் தானாம். அப்புறம் தான் நர்ஸரி ஸ்கூல் அட்மிஷன்!"

"கல்யாணம் கூடாது; பின்னே?"

"ஃப்ரீ லவ்; ஃப்ரீ செக்ஸ் - அப்படீங் கறாரு. பயங்கரம்!"

"இதையே அவர் கட்டை பிரம்மச் சாரியா இருந்து சொல்லியிருந்தார்னா ஒரு வேளை மன்னிச்சிருப்பேன். கல்யாண வயசுல ஒரு பெண்ணை வெச்சிண்டு இப்படி யெல்லாம் பேசறது அயோக்கியத்தனம். இன் ஃபாக்ட் அவரோட கையாலாகாத் தனத்தை மறைக்க இப்படியெல்லாம் சிந்திக்க வேண்டி யிருக்காக்கும்!"

"தப்பா நினைக்காட்டி சொல்றேன்... உங்களுக்கென்னங்க, சுயம்வரமே வெக் கலாம். எல்லோரா பிரதி மாதிரி இருக்கீங்க. க்யூல நிக்க மாட்டாங்களா? ஒன்லி திங் இஸ் யூ ஹாவ் டு ஸெலக்ட் தி பெஸ்ட்."

"ஆஹா, போதுமே!"

"நிஜமாத்தாங்க சொல்றேன்!"

கேட்டுவிடலாமா?

கேட்டு விடலாமா?

கேட்டு விட்டாள்.

"சரிதான். உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சா?"

சட்டென்று வெட்கப்பட்டான். அட, காது சிவக்கிறது டோய்!

"கூடிய சீக்கிரம் ஆயிடும்... எங்க ஆஃபீஸ் லயே ஒரு கேர்ல். பேரன்ட்ஸ் ஒத்துக்கிட் டாங்க... இன்விடேஷன் அனுப்பறேன். பிரா பப்ளி நெக்ஸ்ட் மன்த் இருக்கும்... நிச்சயம் வரணும், அப்பாவோட..."

"ஆஹா, வரேன்."

வாசலில் ஒரு வாரி பேரிரைச்சலோடு கடந்து போயிற்று. ரேணுகா உள்ளே போனாள். வெற்றிலை சீவல் வாங்கப் போன அப்பா திரும்பி வர, பேச்சு மறுபடி ஆரம்ப மானது.

வாசலில் போஸ்ட் மேன்.

"ரேணுகா, அதென்ன பாரு."

ரோஸ் நிற இன்லண்ட். பிரித்தாள். காஞ்சி காமாட்சி துணை. ஐயா, நான் உங்கள் ரசிகன். பெங்களூரில் உத்தியோகம்... சென்னை வரும்போது சந்திக்க விருப்பம். லோா அண்ட் லோா அண்ட் லோா...

ரேணுகா, ஒரு வித அஸ்வாரஸ்யத்துடன் அதை ரேடியோவுக்கு அடியில் மடித்து வைத்தாள். பெங்களூர்க்காரன் இன்னும் ஓரிரு வாரங்களில் அல்லது மாதங்களில் வரக் கூடும்.

"நாலுங்கிழ இருபத்தெட்டு, சந்நிதித் தெரு, மிஸ்டர் சீதா ராமன் வீடு இதுதானே?" என்று கையில் பெட்டியோடு வெயில் வேளையில் கேட்கக் கூடும். வேறெதுவும் பேச ஆரம்பிக்குமுன்,

"பெங்களூரில், உங்க ஆபீஸில் நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களா?" என்று முன்னதாகக் கேட்டுவிட வேண்டும் என்று ரேணுகா நினைத்துக் கொண்டாள்.

வண்ணத்துப்பூச்சி வேட்டை

25

ரஞ்சனி என்ற பெயர் என் மனத்தில், அவளை முதலில் பார்த்த ஒட்டல் அறைக் காட்சியுடன் பதிந்திருந்தது. நான் சட்டென்று கதவைச் சார்த்த முயன்றபோது, "ரேகா நான் உனக்கு உதவி பண்ணத்தான் வந்திருக்கிறேன்" என்றாள். பெரிசாகப் பொட்டும் கொஞ்சம் நகர்ந்தாலே சப்தமிடும் நகைகளும் அணிந்திருந்தாள். இந்த வேளையில் உதட்டுக்கு லிப்ஸ்டிக் போட்டிருந்தாள். கைவிரல் நகங்கள் நீளமாக இருந்தன. ஃபாஷன் மாடல் போலத் தோற்றமளித்தாள். அவளருகில் லேசான செண்ட் வாசனை இருந்தது.

"அர்ஜுன் அனுப்பிச்சாரா?"

"இல்லை. நானாகவே வந்தேன். இன்னிக்குத்தான் அட்ரஸ் கிடைத்தது."

சுவரில் மாட்டியிருந்த அலங்காரக் கத்தியைப் பார்த்துக்கொண்டே பேசினாள்.

"இந்தக் கத்தி நான் வாங்கித் தந்தது!"

"எதுக்கு வந்தே?"

"உன்னோடு பேச."

"ஒரு வப்பாட்டி, மனைவி கூட பேச என்ன இருக்க முடியும்?"

"நான் உன் புருஷனுக்கு வப்பாட்டி இல்லை..."

"பின்னே, மற்றொரு மனைவியா?"

"கல்யாணம் பண்ணிக்கிறதா சொல்லியிருக்காரு."

"என்னைத் தள்ளி வெச்சுட்டு?"

"உள்ளே வரலாமா? வாசலிலேயே நின்னுக்கிட்டு நம்ப ரெண்டு பேர் வாழ்க்கைப் பிரச்னையையும் பேசித் தீர்க்கணுமா?"

நான் தயக்கத்துடன்தான் அவளை அனுமதித்தேன். ஹாலில் அலமாரியில் வைத்திருந்த எங்கள் திருமண போட்டோவைப் பார்த்ததும் கண்ணீர் விட்டாள்.

"எனக்குத் தெரியவே தெரியாது! குடிக்கத் தண்ணி வேணும்."

நான் தண்ணீர் எடுத்து வரும்போது அந்த போட்டோவை கிட்டத்தில் பார்த்தாள்...

"எப்ப கல்யாணம் ஆச்சு?"

"ஒரு வருஷம் முன்னாடி."

"சொல்லவே இல்லை! சொல்லவே இல்லை! என்ன ஒரு ஏமாற்று வேலை?" என்று தன் பைக்குள் இருந்து நீல நிறக் கடிதங்களை எடுத்துக் காட்டினாள்.

"படி."

நான் அதைத் தொடவில்லை. அவள் உட்கார்ந்து தானே படித்துக் காட்டினாள்.

"டியர் ரஞ்சனி... இன்னும் ஒரு மாதம்... ஒரே மாதம்... மற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டேன்! ஹனிமூனுக்கு ஹோட்டல் அறை கூட கொடைக்கானலில் ரிஸர்வ் செய்துவிட்டேன்..."


"என் கணவர் பொய் சொல்கிறார் என்பதற்கு எனக்கு நிரூபணம் தேவையில்லை" என்றேன்.

"சாதாரணப் பொய்யா? ராஸ்கல், டில்லியில் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டதை என்னிடம் சொல்லவே இல்லை. மூன்று வருஷமாகப் பழக்கம். முதன் முதலில் அர்ஜுனை பம்பாயில் சந்தித்தேன்...."

"ஹுக்! எனக்கு விவரம் எதுவும் வேண்டாம்!"

"கேட்டுத்தான் ஆகவேண்டும். அர்ஜுன் என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாகச் சத்தியம் செய்து கொடுத்து விட்டுத்தான் என்னிடம் சுதந்திரங்கள் எடுத்துக் கொண்டார். எனக்கு

"நான் பேசமாட்டேன்!
அவனுடன் எனக்கு இனி
பேச்சு கிடையாது!
பழிவாங்கல்தான்!"



சுஜாதா

நகை, புடைவை வாங்கிக் கொடுத்தார். நான் சென்னை வரும்போதெல்லாம் ஸ்டார் ஹோட்டலில் தங்க வைத்து... நான் ஏமாந்து விட்டேன். உன்னைப் பார்க்கும்போது... இத்தனை அழகான, அற்புதமான முகத்தைப் பார்க்கும் போது... உன்னையும் ஏமாற்றி யுள்ளானே! எப்பேர்ப்பட்ட பாதகன்! கிராதகன்!"

"இதைச் சொல்லத்தான் வந்தாயா?"

"நீ என்ன செய்வதாக உத்தேசம் என்று கேட்க வந்தேன்!"

"நான் தீர்மானிக்கவில்லை. தீர்மானித்தாலும் அதை உன்னைப் போன்ற... உன்னைப் போன்ற பெண்ணிடம் சொல்ல மாட்டேன்."

"அர்ஜுன் நம் இருவரையும் ஏமாற்றியுள்ளான்... அவனை நாம் பழிவாங்க வேண்டாமா?"

எனக்குச் சட்டென்று இந்தப் பெண்ணை அனுப்பி பேச வைப்பதே அர்ஜுனின் சூழ்ச்சியாக இருக்கலாம் என்று தோன்றியது.

"நான் உன்னிடம் பேச விரும்பவில்லை."

அவள் கைக்குட்டையை எடுத்துத் துடைத்துக் கொண்டு நாசூக்காக அழுதாள்.

"இருவரும் சேர்ந்து பழிவாங்கலாம் என்று நினைத்தேன். இப்போது தனியாக! ரேகா, நாம் இருவரும் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். இதற்கு நியாயம் கிடைக்கும். ஆனால் வருஷங்களாகும்... அவர்கள் எல்லாருமே ஆண்கள்! கேஸ் பதிவு செய்பவர்கள், நீதிபதிகள், வழக்காடுபவர்கள் எல்லோருமே! அர்ஜுன் செய்ததை ஆமோதிக்கும் கயவர்கள்! ரேகா நான் சொல்வதைக் கேள்!"

"எனக்கு உபதேசம் வேண்டாம்..."

அப்போது போன் ஒலித்தது. போய் எடுத்தேன்.

"ரேகா, நான்தான் அர்ஜுன் பேசறேன்! அங்கே அந்தப் பொண்ணு வந்தாளா?"

"ம்."

"அவ சொல்றது எதையும் கேக்காதே! அவ சொல்றது புளுகு! அவ இந்த மாதிரி எட்டு பேரை ஏமாத்தி இருக்கா... பணம் கேட்டா கொடுக்காதே! நான் உடனே வரேன்! விரட்டி விடு... அவகிட்ட குடு!"

நான், "உன்னைத்தான்" என்று போனைக் கொடுத்தபோது,

"நான் பேசமாட்டேன்! அவனுடன் எனக்கு இனி பேச்சு கிடையாது! பழி வாங்கல்தான்!" என்று உரத்த குரலில் போன் மூலம் கேட்குமாறு,

"அர்ஜுன், நீ நாசமாப் போயிடுவே. நீ உருப்படுவியா? ஐ'ல் கில் யூ" என்று சப்தமிட்டாள்.

"கேக்குது இல்லை?" என்றேன்.

"ஷி இஸ் எ ஸ்லட்! அவ சொல்றதை எதையும் நம்பாதே!"

"சரி, உங்களை நம்பறேன். கட்டின பெண்டாட்டியை ஜெயில் மாதிரி வீட்டிலே பூட்டிட்டுப் போறவரை நம்பறேன். தலையிலிருந்து கால் வரைக்கும் இதுவரை பொய்யே சொன்னவரை நம்பறேன்."

"ரேகா! தக்க சமயத்தில எல்லாத்தையும் விளக்கமா..."

"எனக்கு விளக்கமும் வேண்டாம். ஒரு எழவும் வேண்டாம். வீட்டில வைச்சுப் பூட்டாம இருந்தா சரி! என்னை விட்டுடுங்க! எதுக்காக என்னைக் கல்யாணம் பண்ணினீங்க?"


"ரேகா, ப்ளீஸ். சரி! இரு, நான் உடனே வர்றேன்! அவ போக மாட்டா. உன் மனசைக் கெடுத்துடுவா!"

அந்தப் பெண் சோபாவில் உட்கார்ந்து கொண்டு டிஷ்யு பேப்பரால் மூக்கைத் துடைத்து அழுது கொண்டிருந்தாள்.

"நீ நம்புவியோ இல்லையோ, காட் ப்ராமிஸ், உன்னை அர்ஜுன் கல்யாணம் செய்துக்கிட்டு இருக்கிறது தெரியவே தெரி

"பத்து வருஷமா நான் உங்ககிட்டே வேலை பார்க்கிறேன். சம்பள உயர்வு கேட்டதே இல்லை...!"

"அதனாலேதான் பத்து வருஷமா இங்கேயே இருக்கீங்க!"





"என்னய்யா 306! யோசனை பலமா இருக்கு?"

"பிச்சுவா பக்கிரி நேத்து சாயந்திரம் வந்து மாசா மாசம் நூறு ரூபாயா, இல்லை வருஷத்துக்கு ஆயிரமா, அல்லது ஆயுள் மாமூலா இருபதாயிரம் ரூபாயா'ன்னு கேட்டுட்டு, யோசிச்சுச் சொல்லச் சொல்லி இருக்கான், ஸார்! அதான்!"

- பாலு

யாது! ரேகா, பாம்பேல ஒரு அட்வர்டைஸ்மெண்ட் ஏஜென்ஸியில் சந்திச்சேன்! தன்னைப் பற்றிப் பிரமாதமா பேசிக்கிட்டான். முப்பது வயசில முப்பது லட்சம் பண்ணிடணும்னான் என்னைச் சிக்கவைக்க."

"எனக்கு முப்பத்தஞ்சு - முப்பத்தஞ்சு!"

"மகாலட்சுமிக்குப் போவோம்! ரேஸ் ரொம்ப நல்லா ஆடுவான். ரம்மி ஆடுவான். எனக்குப் பரிசா கொடுத்துக்கிட்டு இருந்தான். இந்த மோதிரம் அவன் தந்தது. என்னை டிசம்பர்ல கல்யாணம் செய்துக்கிறதா சொல்லி ரிஜிஸ்திரார் ஆபீஸ் லெட்டர் எல்லாம் காட்டினான். ரேகா, உன் மாதிரி இத்தனை அழகான, சாதுவான பெண்டாட்டி தனக்கு இருக்கறதை அவன் சொல்லலே இல்லை ரேகா! என்னை மன்னிச்சுடு. உன் சந்தோஷத்தைக் கெடுக்கறதில்லை, என் நோக்கம். ஆனா, அர்ஜுன் மாதிரி ஆசாமிகளை வெட்ட வேண்டாமா...?"

நான் எந்தவித உணர்ச்சியும் காட்டாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். இவளை எந்த வகையில் சேர்க்கிறது? அழும்போது அழகாகவே இல்லை. அவள் அலங்காரங்கள் எல்லாம் கரைந்து, அனுபவத்தின் கவடுகள் முகத்தைச் சேதப்படுத்தியிருந்தன. ஒரு வகையில் அவள் முகத்தில் ஒரு காலப்போக்கின் சரித்திரம் தெரிந்தது.

"நான் விடமாட்டேன்! நான் விடப் போற இல்லை!" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கையில் அர்ஜுன் வந்து அவசரமாகக் கார்க்கதவைச் சாத்திவிட்டு உள்ளே நுழைந்தார்.

"ரஞ்சனி! கெட் அவுட்! கெட் லாஸ்ட்!" என்று அருகே டெலிபோனை எடுத்து அவள் மேல் எறிந்தார். அது அவள் காலில் விழுந்தது. ரஞ்சனியை அவர் கட்டிப்பிடிக்க முயல, சப்தம் போட்டுத் திமிறி, அவர் தலைமுடியை இரண்டு கைகளாலும் பற்றி உலுக்க, இவர் 'பளார்' என்று கன்னத்தில் அடித்தபோது, அப்படியே பொட்டில் அடித்தது போலக் கையைக் கன்னத்தில் வைத்து உட்கார்ந்தாள்.

"தெரியாம போய் இவகிட்ட சிக்கிட்டேன்! என் தலைவிதி!என் தலைவிதி! இப்ப நீ போகப் போறியா கழுத்தைப் பிடிச்சுத் தள்ளட்டா?" என்று அதட்டினார் அர்ஜுன்.

அவள், 'போக மாட்டேன்' என்று பிடிவாதமாக சோபாவில் உட்கார்ந்து கொள்ள, அவளை இடம் பெயர்க்க முயன்றார். கன்றுக்குட்டி போல் பிடிவாதம் பிடித்தாள். ஒவ்வொரு தடவை அர்ஜுனை விலக்கும் போதும் அவளது விலைகுறைந்த நகைகள் ஒலித்தன. அவள் அழுதாள்.

ஒரு கட்டத்தில் அவளைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. என்னைப் போல்தான் அவளும்! இருவரும் ஒரே ஆண்மகனால் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். அவள் கண்களில் ஏமாற்றப்பட்ட கோபம்தான் தெரிந்தது. வெறுப்பு இல்லை.

"உன்னை... உன்னை..." என்று அவளை என்ன செய்வது என்று சுற்றிலும் பார்த்தார் அர்ஜுன்.

அப்போது அந்த இடத்தில் மிக எதிர்பாராத ஒரு விஷயம் நடந்தது. சுவரில் மாட்டியிருந்த அந்த அலங்காரக் கத்தியை எடுத்து அதை அதன் உறையிலிருந்து உருவினாள். உள்ளே ஏறக்குறைய ஓர் அடி நீளத்துக்குக் கூரான, பளபளப்பான கத்தி.

ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் கத்தி அது. அதை எடுத்து நேராக அர்ஜுன் சற்றும் எதிர்பாராத விதத்தில், அர்ஜுனின் இதயத்தை நோக்கித் தாக்கினாள். அர்ஜுன் திரும்பிக் கொண்டு தடுக்க, அவர் வலது பக்கம் மார்பெலும்புகளைத் தவிர்த்து சற்றுக் கீழே விலாப்பக்கம் உள்ளே முழுக்கத்தியும் பாய்ந்தது.

"செத்துப் போ! செத்துப் போ!"


அர்ஜுன் நடந்ததை இன்னமும் நம்பாமல்,

"வாட் ஹாவ் யு டன் ரஞ்சனி! என்ன பண்ணிட்ட பாரு..."

ரத்தம் சற்று நேரம் பொறுத்துத்தான் வந்தது. ரஞ்சனி, குத்திய கத்தியை மீண்டும் உருவி, தன்னையும் குத்திக் கொண்டாள்.

நான் அலறினேன்.

(தொடரும்)



• ஸ்ரீ ராமநாதர் ஆலயத் தோற்றம்

அனுமனுக்கு வந்த கோபம்!

கமலமனராஜன்

ஆஞ்சநேயன் என்றதுமே ஸ்ரீ ராம பிரானின் தாசானு தாசனாக, கரங்கள் கூப்பி, கண்களில் பக்தி தேக்கி நிற்கும் உருவம் நமக்கு நினைவு வரும். அல்லது தமது மார்பைப் பிளந்து ஸ்ரீ ராமனை நெஞ்சுக்குள்ளேயே தாங்கியிருப்பதை நிரூபித்த வீர உருவம் கண் முன் தோன்றும்.

இந்த ஆஞ்சநேயர் ஸ்ரீ ராமபிரானிடமே கோபித்துக் கொண்டு உக்கிரமடைந்தார் என்றால் வியப்பாக இல்லையா...? அந்த உக்கிர நிலையில், பற்கள் தெரிய, கோபம் கொண்ட ஒரு குழந்தையைப் போல் கை கால்கள் ஆரவாரித்த நிலையில் காட்சியளிக்கிறார் அஞ்சனா நந்தனர். ராமேஸ்வரம் ஸ்ரீ ராமலிங்க சுவாமி திருக்கோயிலுக்குள் நுழைந்ததும் விநாயகரை வழிபட்டு விட்டு வலப்புறம் திரும்பினால் எதிர்ப்படுபவர் இந்த உக்கிர ஆஞ்சநேயர்தான்! சந்தனக் காப்பு சார்த்தியும் குளிராத திருமேனி, உணர்ச்சி ததும்ப காட்சியளிக்கிறது.



• அம்பாள் ர்வதவர்த்தினி

அனுமான் உரிமையுடன் ஸ்ரீ ராமரிடமும் சீதா பிராட்டியிடமும் கோபித்துக் கொண்ட வரலாறு இக் கோயிலில் தனிச் சிற்ப வடிவமாகக் காணப்படுகிறது. கதை இதுதான்:

ராவணனைக் கொன்று விட்டுத் திரும்பிய ராமரிடம் அதற்குப் பரிகாரம் செய்யும்படி எடுத்துச் சொன்னார்கள் பெரியோர்கள். சிவ பக்தனான ராவணனைக் கொன்றதால் ராமனை பிரும்மஹத்தி தோஷம் பற்றிக் கொண்டிருக்கிறது என்றும் அது நீங்க வேண்டுமெனில் ஈச்வரனைப் பிரதிஷ்டை செய்து வழிபட வேண்டும் என்றும் கூறினார்கள்.

உடனே ஆஞ்சநேயர் லிங்க வடிவத்தில் கல் எடுத்து வருவதாகச் சொல்லி வட திசை நோக்கி விரைந்தார்.

பூஜைக்கான முகூர்த்தம் நெருங்கியது. அனுமான் வந்த பாடில்லை. எனவே சீதா தேவி மணலைக் கொண்டு ஒரு லிங்க வடிவத்தை அமைக்க, ஸ்ரீ ராமர் அதற்குப் பூஜைகள் செய்து பரிகாரத்தை முடித்துக் கொண்

இங்கு ஏர் ஓட்டி உழுவதில்லை!

ராமாயணக் கதை நிகழ்ச்சிகள் நடைபெற்றதாகச் சொல்லும் பல இடங்கள் இராமேசுவரம் வட்டாரத்தில் உள்ளன.

- இலங்கை செல்ல ராமன் பாலம் அமைத்த இடம் தனுஷ்கோடி.
- ராமனும் சீதையும் ஏகாந்தமாக உரையாடிய இடம் தங்கச்சி மடம் என்ற ஊரில் உள்ள ஏகாந்த ராமர் கோயில்.
- அனுமன் 'ஜிவ்' என்று எழுந்து ஆகாய மார்க்கமாய் இலங்கை சென்றது கந்தமாதன பர்வதத்திலிருந்து - நகரையொட்டியுள்ள இந்த சிறு குன்றில் ராமர் பாதங்களுக்குக் கோயில் இருக்கிறது. நாலா திசையிலும் திறந்தவெளி கொண்ட அழகான இடம். கடலலைகளும் மணற் சரிவுகளும் கண்ணுக்கு விருந்து!

டார்.

தாமதமாக வந்த ஆஞ்சநேயருக்குத் துக்கமும் கோபமும் பிறிட்டுக் கிளம்பின. சீதா பிராட்டியை மீட்டு வருவதற்காகச் செய்த அனைத்து உதவிகளைக் காட்டிலும் அதி முக்கியமானதாக அவர் கருதிய இந்த உதவி பயனற்றுப் போன ஏமாற்றத்தைத் தாள இயலாமல் கோபித்துக் கொண்டார்.

"நான் ஏற்கெனவே பூஜித்த இந்த லிங்கத்தை அகற்றிவிட்டு நீ எடுத்து வந்துள்ளதைப் பிரதிஷ்டை செய்" என்று ராமர் சமாதானமாகச் சொன்னார். உடனே அனுமார் தமது வாலை மணல் லிங்கத்தில் சுற்றி அதை அகற்ற முயல, அந்த லிங்கம் அசைந்து கூட கொடுக்கவில்லை!

ஆஞ்சநேயரின் ஏமாற்றத்தைப் புரிந்து கொண்ட ராமர், அவர் எடுத்து வந்த லிங்கத்தையும் அந்த மணல் லிங்கத்துக்கு மிகச் சமீபத்திலேயே பிரதிஷ்டை செய்யச் சொன்னார். "நான் பூஜித்த லிங்கத்தை வழிபடுவதற்கு முன்னால் எல்லா பக்தர்களும் நீ பிரதிஷ்டை செய்துள்ள ஈச்வரனையே வழிபடுவார்கள்" என்று பக்தனை மேலும் சாந்தப்படுத்தினார்.




• பெரிய நந்தி

இந்த புராணக் கதைக்கு ஏற்ப, நாமும் இராமேஸ்வரம் கோயிலில் ஆஞ்சநேயர் அழைத்து வந்த ஸ்ரீ விஸ்வநாதரையும் அவர் உடனுறை விசாலாட்சி அம்மனையுமே முதலில் தரிசிக்கிறோம். அதன் பின்னர் ராமர் வழிபட்ட ஈச்வரன் என்பதால் 'இராமநஸ்வரம்' என ஊருக்குப் பெயர் வாங்கித் தந்த ராமலிங்கரைத் தரிசிக்கிறோம். அனுமனின் வால் கட்டி இழுத்ததால் உண்டான தழும்புகள் இவர் திருமேனியில் இன்னமும் இருப்பதாகச் சொல்கிறார்கள்! விசுவநாதரைக் காட்டிலும் உருவில் சிறியவர் இராமலிங்கர்.

யாத்திரிகர்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். ஜோதியைப் போல் ஒளிரும் ராமலிங்கரைப் பார்த்துப் பார்த்துப் பரவசமடைகிறார்கள். தினமும் வடநாட்டு யாத்திரிகர்கள் வருவதால் இடைவிடாது கங்கை அபிஷேகம் இராமலிங்கருக்குக் கை கூடுகிறது.

இதையெல்லாம் பார்த்து வியப்பில் விரிந்த கண்கள், விரிந்த நிலையிலேயே நிலைகுத்தி விட்டது போல் பிரும்மாண்டமான நந்திகேசுவரர் உருவம் மூலவருக்கு எதிராக அமைந்திருக்கிறது. வண்ணங்கள் தீட்டப்பட்ட சுதை உருவம்.

ராமலிங்கரை அடுத்து பர்வதவர்த்தினி அம்பாள் சந்நிதி. தரிசனம் செய்து வெளிப்பட்டால் சுக்ரவார மண்டபத்தில் உத்சவ அம்பாள் அலங்காரமாகக் கொலுவிருக்கிறாள். (வெள்ளிதோறும் இந்த தரிசனம் கிடைக்கும்) சிவப்புப் பட்டும் பொன் ஆரங்களுடன் போட்டியிடும் பெரிய பவழங்களும் அழகூட்ட, பாதங்களில் முத்துச் சலங்கையும் காப்பும் அணி செய்ய, பரவசமூட்டும் தோற்றம்.



• வில்லூண்டி தீர்த்தம்

● சீதை 'தாகம்' என்ற போது கடலில் ஓர் இடத்தில் அம்பு எய்து ராமர் குடிநீர் வரவழைத்த இடம் வில்லூண்டி தீர்த்தம். இவ்விடத்தில் கடலுக்குள் இன்னமும் ஒரு கிணறு இருக்கிறது. அதனருகே சென்று பார்க்க வழி செய்த கல்பாலம்தான் உடைந்து கிடக்கிறது.

● 'அனுமன் இலங்கையிலிருந்து திரும்பி வந்து இந்த இடத்தில்தான் ராமனைச் சந்தித்துக் 'கண்டேன் சீதையை' என்று சொன்னான்' - கந்தமாதன பர்வதம் செல்லும் வழியில் உள்ள ஒரு சிறு ஆஞ்சநேயர் கோயிலில் இப்படிச் சொன்னார்கள். தினமும் பக்தர்களுக்குக் கண்டல் விநியோகமாகிறது இங்கு - சூடும் சுவையும் மிக்க கண்டல்!

● சீதை இவ்வூரில் மணலை லிங்கமாகப் பிடித்ததால் ஒவ்வொரு தனி மண்ணும் தெய்வத்துக்குச் சமம் என நம்புகிறார்கள். இதனால் இங்கே ஓர் ஒட்டி உழுவதில்லை. விவசாயம் நடப்பதில்லை!

இக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்த சேதுபதி மன்னர்களின் உருவச் சிலைகள் ஆங்காங்கே இருக்கின்றன. பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை கீற்றுக் கொட்டகையின் அடியில் ஒரு துறவியின் 'பாதுகாப்பில்'தான் இருந்தாராம் சுவாமி. இலங்கை அரசன் பராக்கிரமபாகுதான் பன்னிரண்டாம் நூற்றாண்டில் மூலஸ்தானத்தைக் கட்டினான் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இதன் பின்னரே (15 ஆம் நூற்றாண்டு) சேதுபதி மன்னர்களின் கைங்கர்யங்கள் தொடங்கின.

இராமேஸ்வரம் கோயில் பிராகாரங்களைப் பற்றிய புகழுரைகளைப் பலமுறை கேட்டிருந்தாலும் நேரில் காணும் போதுதான் அவற்றின் பிரும்மாண்டத்தையும் கலையழகையும் முழுமையாக உணர முடிகிறது. ஒரு கோடியில் நின்று மறு கோடி வரை பார்த்தால் ஆதியும் அந்தமுமில்லாத ஒரு பாதையைக் காண்பது போன்ற உணர்வு வந்து கவிகிறது. மூன்றாம் பிராகாரத்தில், தத்துவார்த்த விளக்கங்களுக்குத் தாவும் மனத்தைப் பிடித்திழுத்து சிற்ப நுணுக்கங்களை ரசிக்கிறோம்.



• உலகப் புகழ் பெற்ற மூன்றாம் பிராகாரம்

இறையுணர்வையும் கலையுணர்வையும் குழைத்துக் குழைத்து வடிவம் கொடுத்துள்ள மன்னர்களையும் திருப்பணிகளுக்கு இடைவிடாது உழைத்த நகரத்தார் சமூகத்தினரையும் நன்றியுடன் நினைத்துக் கொள்கிறோம்.


பிராகாரத்தைச் சுற்றியுள்ள இருபத்திரண்டு தீர்த்தங்களிலும் சிரத்தையாக நீராடும் பக்தர்கள், கடலில் குளித்துவிட்டு ராமனையும் சீதையையும் போல் மணலில் லிங்கம் பிடித்து வைத்துப் பூஜை செய்யும் தம்பதியர், 'ஓம் நம சிவாய ஓம் நம சிவாய' என இடைவிடாது கூவியபடி வரும் யாத்திரிகர்கள் என்று ஆழ்ந்த நம்பிக்கையின் பலவிதமான வெளிப்பாடுகளை ராமேஸ்வரத்தில் பார்க்கிறோம்.

அகிலன் அவர்கள் எழுதிய 'நாதனுள்ளிருக்கையில்' என்ற கதை (ராமேஸ்வரப் பின்னணி) நினைவுக்கு வருகிறது. 'அந்தப் பெண்ணின் கண்ணீர் வெறும் நம்பிக்கையால் துடைக்கப்பட்டு விட்டதே' என்ற அவரது சிகரமான வரிகளுக்கு இங்கே தினம் தினம் சான்றுகள்!

கடலுள்ள வரையில், கடலில் அலையுள்ள வரையில், கடற்கரையில் மணலுள்ள வரையில் இந்த நம்பிக்கை, வாழ்க்கையின் நங்கூரமாய் நீடிக்கும்.

வாசகர் தகவல் : டி.கே. சுப்பிரமணியம், ஏ.கே. ஆனந்தப்பிரியா, என். அழகப்பன், மு. முருகேசன், சீதாராகவன், ஜி. கதிரேசன், சங்கரநாராயணன், வி.வி. நடராசன்.

மாறுபட்ட துறவி:
மாற்றி அமை



• சுவாமி பிரணவானந்தா

வாழ்க்கையை
க்கும் துறவி!

ராமேஸ்வரத்தில் ஒரு துறவி இருக்கிறார் - சுவாமி பிரணவானந்தா. முற்றிலும் மாறுபட்ட துறவி. பகுதிவாழ் மீனவர்களின் நல்வாழ்வுக்கென்றே தம் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் துறவி. "அறைக்குள் உட்கார்ந்து ஆயிரம் பிரசங்கம் செய்து கொண்டிருப்பதில் உபயோகமில்லை. நடுத்தெருவுக்கு வந்து பார்க்க வேண்டும். அடித்தட்டு மக்களோடு அன்றாடம் பழகிப் பார்க்க வேண்டும். நமது கலை, கலாசாரம், பாரம்பரியம் பற்றியெல்லாம் மேல்மட்ட மக்களிடம் மட்டும் பேசிப் பிரயோஜனமில்லை. கல்வி அறிவில்லாத இந்தப் பாமரர்களைச் சிறக்கச் செய்ய வேண்டும்..." என்றெல்லாம் பேசிப் போகிறார் பிராணவானந்தா.

1968-ல் ராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்து சில காலம் இருந்து, பின் 1969ல் ராமகிருஷ்ண



• சாரதா

தபோவனத்தில் சுவாமி சித்பவானந்தரின் சீடராக ஏழு வருடம் இருந்திருக்கிறார். இயல்பாகவே இவரிடம் இருந்து வரும் 'மக்கள் சேவை' மனப்பான்மை, இவரைத் தனியே அழைத்து வந்து ராமேஸ்வரத்தில் ஒரு ஆசிரமம் ஆரம்பிக்க வைத்திருக்கிறது.

பிரணவானந்தாவின் சொந்த ஊர் கோவை மாவட்டத்தில். பணி இடமாக ராமேஸ்வரத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன்?

"மண்டைக்காடு கலவரம் சமயத்தில் கன்னியாகுமரியில் இருந்தேன். அங்கு, மீனவர்கள் பட்ட பாட்டை நேரில் பார்த்தேன். அப்பாவி மீனவர்களை அரசும் பணம் படைத்த சிலரும் ஆட்டிப் படைப்பதைக் கண்டு ரொம்பவும் வருத்தமாயிருந்தது. பிறகு ராமேஸ்வரத்துக்கு வந்த போது இங்கிருக்கும் மீனவர்களுக்கும் அதே நிலை என்பதைக் கண்டேன். ஒரு சரியான வழிகாட்டும் நபர் இவர்களுக்கு இல்லாததால்தான் இப்படி அவதிப்படுகிறார்கள் என்பது புரிந்தது. நாமே ஏன் அப் பொறுப்பை ஏற்கக் கூடாது என்று தோன்றிற்று. சுவாமி சித்பவானந்தரிடம் அனுமதி கேட்டேன். தனித்து இயங்க அனுமதி அளித்ததோடு ஆசியும் தந்தார்.

"ஒரு சிறிய கொட்டகை போட்டுக் கொண்டு இந்த இடத்தில் (ராமகிருஷ்ணாபுரம்) என் பணியை ஆரம்பித்தேன்.

"மீனவர்களின் வாழ்க்கை முறை மிக வித்தியாசமானது. அவர்கள் மழைக்காகவும் பள்ளிப் பக்கம் ஒதுங்காதவர்களாக இருந்தார்_

• சித்ரா





• சுத்தமான மீனவர் குடியிருப்பு



• மீனவப் பிள்ளைகளுடன்...

கள். இந்தப் பகுதி ஆண்கள் பெரும்பாலும் குடிகாரர்களாக இருந்தார்கள். தவிர சில சமூக விரோத சக்திகளின் பிடியில் சிக்கி போதைப் பொருள், ஆயுதம் கடத்தல் போன்ற வற்றுக்கெல்லாம் உதவி வந்தார்கள். பெண் களோ, நாகரிகம் என்றால் என்ன என்பதே தெரியாதவர்களாக இருந்தார்கள். இந்நிலை யில் எப்படி இவர்களைக் கடைத்தேற்றுவது?

"ஒரே வழி - இவர்களின் பிள்ளைகளை நல்ல முறையில் உருவாக்குவதுதான் என்பது புரிந்தது. நானே இந்தப் பகுதிப் பிள்ளைகளுக் குக் கல்வி அளிக்க ஆரம்பித்தேன். கொஞ்சம் கொஞ்சமாக இளைய தலைமுறை நல்ல வழியில் யோசிக்க ஆரம்பித்ததும் பெற்றோர் களின் கவனம் என் பக்கம் திரும்பியது. அவர்கள் ஒத்துழைப்பைப் பெற்று அவர் களை மாற்ற முடிந்தது."

ராமகிருஷ்ணாபுரம், மீனவர் குடி யிருப்புதான்... எங்காவது மீன் வாடை அடிக்க வேண்டுமே! ம்ஹூம்! ஒரு திறந்த வெளிச் சாக்கடை? ஒரு குப்பைமேடு? தேடினாலும் கிடைக்கவில்லை. தூசு துப்பற்ற சுத்தமான மண் சாலை. இருபுறமும் ரயில் பெட்டிகள் மாதிரி வரிசை பிசகாத, தூய்மையான குடி சைகள். ஆங்காங்கே தென்னை, பனை மரங் கள். வாசலில் குரோட்டன்ஸ். அங்கே ஒரு கோவில். இங்கே ஒரு தியான மண்டபம். குழந்தைகளுக்கான விளையாட்டுத் திடல், ஒரு லைப்ரரி, ஒரு பள்ளி, ஒரு தோட்டம், ஒரு சின்ன டிஸ்பென்ஸரி என்று தன்னிறைவு பெற்று விளங்கியது.

மீனவர்களுக்குத் தினம் தினம் நூறு பிரச்னை. கட்டுமரக்காரர்கள் - விசைப் பட குக்காரர்களுக்கிடையே தகராறு. நடுக்கடலில் பாதுகாப்பின்மை, இலங்கை ராணுவ அச் சுறுத்தல், புலிகளின் தொந்தரவு இவை தவிர உள்ளூர் அரசியல்வாதிகளின் நச்சரிப்பு, உபத்திரவம்...

அத்தனையிலிருந்தும் இவர்களைக் காப்பதே தம் தினசரிப் பணி என்கிறார் பிரணவானந்தா.

"அக்கிரமம் பண்ணுகிறவர் களிடம் அமைதியாக, அன்பாகப் பேசிப் பார்த்துப் பயனற்றுப் போய் விட்டது. இது அராஜகத் தின் காலம். எனவே இங்கே மீனவர்களுக்கு ஒரு பிரச்னை வந்தால் நாமும் கொதித்தெழுவ தைத் தவிர வேறு வழியில்லை" என்கிறார்.

ஆனால் ஒரு துறவி தீவிர நடவடிக்கைகளில் இறங்கலாமா என்று கேட்டால்,

"போர்ச்சுகீசியர்கள் ராமேஸ்வரத்தைக் கைப்பற்றியபோது தாயுமானவ சுவாமியே போர்க்கோலம் தரித்துப் படையெடுத்து வர வில்லையா?" என்கிறார்.

வெறும் பரீட்சையில் 'பாஸ்' என்கிற நிலையைத் தாண்டி, ராமகிருஷ்ணாபுரம் மாணவர்கள் சுவாமியின் வழிகாட்டலில் சாதனை புரிந்திருக்கிறார்கள். அதுவும் பெண் கள்! சாரதா, சித்ரா என்ற இரு பெண்கள், பள்ளி இறுதித் தேர்வில் மிக அதிக மதிப் பெண்கள் பெற்று இன்று மேல் படிப்புக்குத் தயாராகியிருக்கிறார்கள். பிரணவானந்தா முயற்சியால் இவர்கள் மேல் படிப்புக்கான உதவித் தொகையும் கிடைத்திருக்கிறது!

மீனவப் பெண்களுக்குத் தையல் பயிற்சி, பனை ஓலை தொழிற் பயிற்சி, அவற்றின் மூலம் வருவாய் வசதி என இவர்களின் வாழ்க்கைத் தரத்தை வெகுவாக உயர்த்தி வருகிறார். ராமகிருஷ்ணாபுரம் தவிர விவேகானந்தா நகர், சேரன் கோட்டை, உறையூர் இன்னும் சில இடங்களிலும் இவ ரது கல்விப் பணி தொடர்ந்து வருகிறது.

இதற்கெல்லாம் பொருள் வசதி?

"மக்கள் கொடுக்கிறார்கள் - நன்கொடை யாக! தவிர எனது சொற்பொழிவுகளின் மூலம் கிடைக்கும் தொகை. அவ்வளவே" என்கிறார் பிரணவானந்தா.

• ஔரங்கசீப்

வாசகர் தகவல் :

அ. அருள், மாலதி நாகராஜ்

வண்ணப்படங்கள், ராமேஸ்வரம்

தொடர்பான இதர படங்கள் : **'தோட் ஜ'**

11

நரகமான நகரம்

டி.எஸ்.பி. முறைப்பாக கிருஷ்ணராவை நோக்கினார். கிருஷ்ணராவ் தம்முடைய வாழ்நாளில் எத்தனையோ காக்கி உடைக்காரர்களைக் கண்டவர்போல் வெகு அலட்சியமாக டி.எஸ்.பி.யைப் பார்த்தார்.

"மிஸ்டர் கிருஷ்ணராவ்... நீங்க எல்லாருமே இதிலே வசமா மாட்டியிருக்கீங்க. அம்பது லட்ச ரூபாய் லாகிரி வஸ்துக்களோட பிடிபட்டிருக்கான். பயங்கர வலுவான சாட்சியம்."

"என்ன செய்யப் போறீங்க?"

"உண்மை வேண்டும். இந்த பிரகாஷ் எப்படிப்பட்டவன்...? கெட்டவன் என்றால்.. உங்களுக்குத் தெரியும். சொல்லிடுங்க. நீங்க தப்பிக்கலாம்!"

"நீங்க அசிங்கமா பேசறீங்க. என்மேலே நீங்க பொய் குற்றச்சாட்டு போடக் கூடாது என்கிறதுக்காக ஒரு அப்பாவியைப் பொல்லாதவன்னு நான் ஒப்புக்கணுமா?"

"அப்ப சரி, நீங்க போகலாம். நாங்க பிரகாஷைக் கவனிக்க வேண்டிய முறையிலே கவனிச்சு உண்மையை வரவழைக்கிறோம்."

"டி.எஸ்.பி.சார்! ஒரு அப்பாவியை அடிக்கிறது அராஜகம்."

"அது எங்களுக்குத் தெரியும். ஆனா இவன் எங்க நோக்கில் அப்பாவி இல்லே!"

கிருஷ்ணராவ் வேகமாக டி.எஸ்.பி.யின் கேபின் விட்டு வெளியே வந்தார். அப்போது பிரகாஷின் அப்பா கன்ஷியாம், கான்ஸ்டபிள்காரனோடு போராடிக் கொண்டிருந்தார்.

"கிருஷ்...என்ன ஆச்சு?"

"ட்ரக் கடத்தல்னு அரெஸ்ட் பண்ணினாங்களாம்..."

"பிரகாஷ் எங்கே?"

"பார்க்கலை. காட்டமாட்டேன்னு சொல்றாங்க. ராஸ்கல்ஸ்!"

"நான் பார்க்கிறேன். டி.எஸ்.பி.யை..."

பெனிட்டோ குமார்

கன்ஷியாம் கனிசமான கோபக் கணைகளோடு டி.எஸ்.பி.யின் அறையினுள் நுழைந்தார். கிருஷ்ணராவ் நிஷாவிடமும், பிரகாஷின் அம்மாவிடமும் வந்தார்.

"என்னப்பா? எதுக்கு அரெஸ்ட்?"

"அவன் கொண்டு போன சூட்கேஸ்ல அரைக் கோடி மதிப்புள்ள ஹெராய்ன் இருந்துச்சாம்."

"எப்படி?"

"யாருக்குத் தெரியும்? டி.எஸ்.பி. நம் குடும்பம் மொத்தத்தையும் சந்தேகிப்பதாகச் சொல்றார். பிரகாஷ், நான் மற்றும் எல்லோருமே சேர்ந்து கூட்டாகப் போதைப்

பொருள் கடத்தறோம்னு சொல்றார்."

"எல்லாம் அந்த 'ஷில்பா' ஆசாமிங்க வேலைதான்! அந்த கம்பெனியில் பிரகாஷ் வேலைக்குச் சேர்ந்த நாளிலேயிருந்தே குழப்பம். எவனோ ஸ்டேஷன்ல மீட் பண்ணி ஒரு திட்டத்தை விவரிச்சது; பிரகாஷ் அதை ஏற்க மறுத்தது; அப்புறம் பிரகாஷ் கண்ணெதிரேயே ஒரு ஆள் கொலையானது... அப்பா-இன்னொரு முக்கியமான விஷயம்."

"என்னது?"

"ஒரு நாள்... பிரகாஷ் அலுவலகத்தில் ஒரு ஃபைல் பார்த்ததாச் சொன்னான். அதில் 'ஓபியம்' அது இதுன்னு போட்டிருந்ததாம்! போலீஸ்கிட்டே சொல்லிடலாம். பிரகாஷுக்கும் இந்த அரை கோடி ரூபாய் ஹெராய்னுக்கும் தொடர்பே இடையாதுன்னு நிரூபிக்கலாம். எல்லாம் ஷில்பாக் காரங்களோட கோல்மால் ஆட்டம்னு புரிய வைக்கலாம்."

"எனக்குக் குழப்பமா இருக்கு. நான் இப்போ ஃபோர்ட் போய் 'ஷாண்பாக்'கை அழைச்சுண்டு வர்றேன். அப்புறம் அவர் பாத்துக்குவார். அவரிடம் நீ உனக்குத் தெரிந்த விவரங்களைச் சொல்!"

"ஷாண்பாக் யார்?"

"வக்கீல்" கிருஷ்ணராவ் அவசரமானார். கிளம்பிப் போய் விட்டார்.

அடுத்த சில விநாடிகளில் பவுலர் கையிலிருந்து விடுபட்ட பந்துபோல் டி.ஸி.பி அறையை விட்டு வெளியே வந்தார் கஸ்யாம்.

"என்ன அங்கிள்...என்ன கேட்டாங்க?"

"பாவிங்க ஒரே ஒரு பந்தை வைத்துக் கொண்டு அதையே திரும்பத் திரும்பச் சுவரில் அடிக்கிறாங்க; திரும்பப் பிடிக்கிறாங்க."

"பிரகாஷைப் பார்க்கணும்னு நீங்க கேட்கலையா?"

நிஷாக்கு அப்போதே அவன் பக்கத்தில் இருந்து ஆதரவாய் தடவிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது.

"கேட்டேனே. அவனைக் கண்ணுலயே காட்ட மாட்டாங்களாம்.

அப்போது நிஷாவை டி.ஸி.பி.யின் அறையினுள் போகச் சொன்னார் கான். நிஷா எதையும் மறைக்காமல் அனைத்தையும் சொன்னாள். டி.ஸி.பி.யும் அவளிடம் கடுமையாக நடந்து கொள்ளவில்லை.

"நீங்க போகலாம்..." என்றார்.

"சார், பிரகாஷைப் பார்க்கணும்."

"என்கொயரி முடிஞ்சவுடன்..."


"பார்க்க மட்டும் அனுமதிச்சா போதும் ஸார், ஒண்ணும் பேசலை."

"ஸாரி, அதுக்கு வழியே இல்லை..."

நிஷா கோபமும் ஏமாற்றமுமாக வெளியே வந்த போது சஃபாரி சூட்டில் இருந்த ஒரு ஆசாமியை கிருஷ்ணராவ் அழைத்து வந்திருந்தார். அவர் நிஷாவிடம் நிறையக் கேட்டார். பிறகு தேர்தலில் வெற்றி பெற்ற வேட்பாளர் போல் அங்குமிங்கும் தோரணையாகப் பார்த்துக் கொண்டு டி.ஸி.பி. கேபினுள் போனார். கிருஷ்ணராவ் பின் தொடர்ந்தார்.

ஷாண்பாக் அறையினுள் போனவுடனேயே 'டபக்' என்று ஒரு நாற்காலியில் அமர்ந்தார். கிருஷ்ணராவையும் அமரச் சொன்னார்.

அவர் போக்கும் தோரணையும் பிடிக்கா விட்டாலும் டி.ஸி.பி. அதைக் காண்பித்துக்



நவரச நாயகன் சத்யராஜ்
நகைச்சுவை சக்ரவர்த்தி கவுண்டமணி
அழகு மயில் சுகன்யா
பருவக் குயில் சிவரஞ்சனி

குணச்சித்திர வில்லன் ஆனந்தராஜ்-யார் கொடுத்த பட்டங்கள் என்கிறீர்களா...? ராமேஸ்வரத்தில், 'உங்கள் அபிமான ஸ்ரீராம் திரையரங்கில், காணத் தவறாதீர் கடைசி இரண்டு காட்சிகள் - 'வண்டிச்சோலை சின்ராசு' என சினிமாவை சைக்கிள் ரிக்ஷாவில் கூவி விற்பவர்தான்! வீதியில் குறுக்கே வரும் கழுதைகளையும் கினி, கோழிகளையும் சாகஸமாக சமாளித்தபடி சைக்கிள் ரிக்ஷா பயணிக்க, விளம்பரதாரர் ஆண்/பெண் குரல்களில் மாறி மாறிப் பேசுவதே ஒரு மினி சினிமா போல்தான் இருக்கிறது. விளம்பரம் முடிந்த கையோடு பாட்டு...ஒலிப்பது 'சின்ராசு' காசெட் இல்லை... பழைய காலத்துப் 'பாலும் பழமும்!'



கொள்ளாமல் தலை நிமிர்ந்தார்.

"அடிக்கடி தப்புப் பண்றீங்க வர்மா..."

"நாங்க தப்புப் பண்ணலை. தப்புப் பண்றவங்களைப் பிடிக்கறதுதான் எங்க வேலை..."

அதுலதான் தப்புப் பண்ணுறீங்க. நேற்று தான் ஸ்கூல்விட்டு வெளியே வந்த பையன். அவனை அரெஸ்ட் பண்ணிக் கொண்டு வந்து வதைக்கிறீங்க!"

"காரணம் இல்லாமல் அரெஸ்ட் பண்ண மாட்டோம்."

"சாதாரண சிகரெட் புகையைக் கண்டாலே ஒதுங்கிப் போகும் ஒரு அப்பாவி. அவனை 'ட்ரக்' கடத்தினான்னு அரெஸ்ட் பண்ணறதா?"

"அப்பாவி கையிலே அரை கோடி ரூபாய் ஹெராய்ன் இருந்ததே?"

"உங்களைக் கூட கள்ள நோட்டு பாக்கட்டில் வைத்திருக்கும் ஆன்னு அரெஸ்ட் பண்ணலாம். ஒரு கள்ள நோட்டை உங்க பாக்கட்ல உங்களுக்குத் தெரியாமல் வச்சுட்டால் போதும்..."

"யார் உனக்கு இந்த ட்ரக் கொடுத்ததுன்னு கேட்டேன். தப்புத் தப்பாப் பதில் சொல்றான்."

"ஏன் அவன் சொல்றது உண்மையா இருக்கக் கூடாது? எது உண்மை? எது பொய்னு விசாரணை பண்ணினீங்களா?"

"அதை நாங்கள் செய்வோம்..."

"அரெஸ்ட் வாரண்ட் பார்க்கணும்..."

"பிரகாஷை நாங்க அரெஸ்ட் பண்ண வாரண்ட் தேவையில்லை. NPSA படித்து விட்டு வாங்க."

"ஓ.கே. பிடித்தவனை பார்க்க அனுமதி கிடையாதுன்னு உங்க நர்கோட்டிக் ஆக்ட் சொல்லுதா?"

டி.எஸ்.பி. வளைத்து கொடுத்தார். பட்டன் அழுத்தி கான்ஸ்டபிளை அழைத்து மராட்டிய பாஷையில் பேசினார். ஒரு நிமிடம் கழித்து பிரகாஷ், தமிழ்ப் படங்களில் ஹீரோவிடம் அடிபட்ட ஆசாமி போல் வந்தான். அவன் கேசம் கலைந்திருந்தது. சட்டையை தளர்வாக ஆட விட்டுக் கொண்டிருந்தான். தலை குனிந்து ரொம்பப் பரிதாபத் தோற்றம்.

"வர்மா! காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை உங்க டிபார்ட் மெண்ட்ல உதவாக்கரை ஆயுதம் இதுதான். உடனே விளையாடிட்டீங்க..." என்றார் ஷாண்பாக்.

"உண்மையைச் சொல்லியிருந்தா இதிலே ருந்து தப்பிச்சிருக்கலாமே?"

"சே...ஷேம்!...ஷேம்!.." என்ற வக்கீல் ஷாண்பாக் எழுந்து பிரகாஷிடம் போனார். அவன் கிருஷ்ணராவைப் பார்த்தான்.

"பிரகாஷ்...இப்ப உன்னை அழைச்சிக் கிட்டுப் போயிடுவோம். .. கவலைப்படாதே! வெளியே போய் இவங்களை கவனிச்சுக் கலாம்" என்று கிருஷ்ணராவ் ஆறுதலாக அவனைத் தொட்டார்.

"இவர் வக்கீல்"

"நான்...எதுவுமே செய்யலை சார்..."என்று ஷாண்பாக்கைப் பார்த்து அழுதான் பிரகாஷ். நான் வேலை பார்க்கிற கம்பெனிலே ஸூட் கேஸ் கொண்டு போகச் சொன்னாங்க; கொண்டு போனேன். நான் எவ்வளவு எடுத்துச் சொன்னாலும் நம்ப மாட்டேங்கறாங்க போலீஸ்ல."

"அதான் அவங்களோட சரித்திரத்திலேயே கிடையாதே... அவங்க நினைக்கிறதை ஒத்துக்கிடணும். இல்லைன்னா உதடு பிஞ்சுடும்..."

"எப்படி சார் நம்மோட சட்டத்துல இதெல்லாம் சாத்தியம்? விளங்கவே மாட்டேங்குது! ஃபுட் பால் க்ரவுன்ட்ல அகப்பட்ட பந்து மாதிரி..."முகத்தைக் கையால் மூடிக் கொண்டான்.

"எல்லா நாட்டு போலீஸ் தர்மமும் இதுதான்!"

"ஸார்! இந்த நிலையிலே நான் நிஷாவையோ என் அம்மாவையோ பார்க்க விரும்பலை..."

டி.ஸி.பி. ரிவால்விங் சேர்விட்டு எழும்பி இவர்களிடம் வந்தார்.

"ஷாண்பாக்...நம்மோட புதிய சட்டங்கள் உங்களுக்கு நிறைய தெரியலை. டவுரி, ட்ரக் தொடர்பான ஆசாமிகளுக்கு அவ்வளவு கலபமா அனுக்கிரகம் கிட்டாது! இன்னிக்கு முழுவதும் விசாரணை நடத்தி... நாளைக் காலை மாஜிஸ்ட்ரேட் முன்னாடி நிறுத்துவோம். அப்போது உங்களோட திறமையைக் காட்டுங்க. பெய்லில் அழைச்சுக்கிட்டு போங்க."

"வாங்க...ராவ்! போகலாம்" கோபமாக வெளியே நடந்தார் ஷாண்பாக்.

"கிருஷ்ணராவ் மௌனமாகப் பின் தொடர்ந்தார்.

"ஆறு மணிக்குள்ள பிரகாஷை வெளியே கொண்டு வரலை... நான் உதவாக்கரை லாயர். சீப்-மினிஸ்டரிடமே நேரிடையாய் பேசுவேன். ஸி.எம்.ஆபீஸ் செகரட்டரி நம் ஃப்ரண்ட்தான். அவர்கையில் ஏகப்பட்ட மினிஸ்டர்கள். தைரியம் சொன்னார் ஷாண்பாக்.

இவர்கள் இருவரைக் கண்டவுடன் கன்ஷியாம், அவர் மனைவி, நிஷா மூவரும் சூழ்ந்தார்கள்.

"என்னாச்சு ராவ்? பிரகாஷைப் பார்த்தீங்களா?"

"பார்த்தோம்...ஒரு செகண்ட் காட்டினாங்க. இன்னும் என்கொயரி பண்ணணுமாம்."

"அவனுக்கு ஒண்ணுமில்லையே?"

"ஒண்ணுமில்லை, கவலைப்படாதீங்க."

"அப்பா, பிரகாஷைப் பார்க்கணும்பா..." நிஷா கெஞ்சினாள்.

"விட மாட்டாங்க. இப்பவே மினிஸ்டரைப் பார்க்கலாம்."

அனைவரும் குழப்பமாக வெளியேறினார்கள்.

டி.ஸி.பி. காலை அழைத்தார். "பங்கஜ் குமாரை வரச் சொல்லு!"

நெடு நெடுவென வளர்ந்திருந்த பங்கஜ் குமார்தான் விசாரணைச் சடங்குகளைச் செய்பவர். பிரகாஷின் மிருதுவான உடலைப் பலவிதமான கஷ்டங்களுக்கு உள்ளாக்கி வதக்கிப் போட்டவர்.

"ஏதாவது உருப்படியான தகவல் சொன்னானா?"

"இல்லை சார்..."

"சொன்னதையே திரும்பத் திரும்பத் சொல்றானா?"

"ஆமாம்சார்."

"இதிலிருந்து என்ன முடிவெடுக்கலாம் நாம்?"

"அது உங்களோட டிபார்ட்மெண்ட்."

"விசாரிச்சவர் நீங்க. உங்களுக்கு என்ன தோணுது?"

"உண்மை சொல்றான்னே தோணுது சார். சின்னவன்... கொடுமையான குணங்கள் ஏதுமில்லாத நல்ல பிரஜை போலத் தான் தோணுது."

"உங்களோட இத்தனை விருந்துகளுக்கும் ஈடுகொடுத்துக் கொண்டு சொன்னதையே சொல்றான் என்றால்....அவன் பேசறது உண்மையாகத்தான் இருக்கணும்."

"அப்போ....அவனை அறியாமலேயே ஹெராய்ன் சூட்கேஸில் வந்துள்ளதா?"

"எஸ்...எஸ்..."

"ஷில்பா ஆசாமிகள்தான் ட்ரக் கடத்தியிருக்காங்களா?"

"சொல்றேன்..." என்ற டி.ஸி.பி.யோசனையில் ஆழ்ந்தார்.

(தொடரும்)

எட்ட கிட்ட

இலேசாகப் பச்சை போர்த்திக் கொண்டு நீலக் கடல் சூழ வெயிலில் ஜொலிக்கும் ராமேஸ்வரம். பாம்பன் பாலத்திலிருந்து பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டுகிறது அதன் அழகு.

ஆனால் நகரை நெருங்கி உட்புகுந்து பார்த்தால்...

- கோயில் வாசலில் குப்பை
- வீதிகளில் தாள முடியாத மீன் நாற்றம்
- பாவங்கள் போக்கும் கடலில் சங்கமிக்கும் சாக்கடை நீர்
- கடலில் குளித்து விட்டு, ஈரம் சொட்டச் சொட்ட பக்தர்கள் நடந்து வருவதால் நிரந்தரமாகச் சொத சொதத்துப் போன ரோடுகள்.

என்று பரவசத்தைப் பறக்கடிக்கிற ஏகப்பட்ட விஷயங்கள்...!

இத்தனைக்கும் ராமேஸ்வரம் சுலப மாய்ப் பராமரிக்கக்கூடிய வாமன ஊர். வீதிகளில் இரண்டு நிமிடம் நின்றால் ஐந்து மொழிகள் காதில் விழுகின்றன; அந்த அளவுக்கு இந்தியா முழுவதிலு மிருந்து யாத்திரிகர்கள் வருகிறார்கள். அதனால் வியாபாரம் கொழிக்கிறது, ஊருக்கு வருமானமும் பெருகுகிறது... இருப்பினும் இப்படி கந்தலாடை கோலத்தில் இத் தலம் ஏன் காட்சியளிக்க வேண்டும்...?

"எல்லாம் நகர நிர்வாகத்தின் அலட்சியப் போக்கினால்தான்..." என்கிறார் இந்த தாலுகா மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் ஆவல் நைனா.

"பஞ்சாயத்தா இருந்தவரையில் இந்த ஊர் நிர்வாகம் சிறப்பா நடந்ததுங்க.. 1965இல் நகரியமா மாத்தினாங்க. அப்பலேர்ந்து படிப்படியான பின்னடைவு...

"குடிநீர்ப் பிரச்னை மிகப் பெரிய பிரச்னை! எமர்ஜன்ஸி காலத்துல ஆளு னரின் ஆலோசகரிடம் சொல்லி, ஒரு குடிநீர்த் தொட்டி கட்டறதுக்கு 25



• பாலத்திலிருந்து தீவின் தோற்றம்

லட்சம் ரூபாய் சாங்ஷன் வாங்கினோம். அந்தத் தொட்டியை நில மட்டத்தில கட்டி யிருக்கறதாலே நீர் விநியோகிக்கும் போது போதுமான அழுத்தம் இருக்க மாட்டேங்குது. மேல்நிலைத் தொட்டி ரொம்ப அவசியம் இந்த நகருக்கு.. பங்குனி மாசத்துல இங்க வர்ற யாத்திரிகர்கள்லாம் குடிக்க தண்ணி இல்லாம படற அவஸ்தை கொஞ்ச நஞ்சமில்லை. பன்னிரண்டாயிரம் ரூபாய் வரை கொடுத்து வீடுகளுக்குப் 'பைப்' கனெக்ஷன் வாங்கியிருக்கறவங்க கூட தண்ணி வராம அவஸ்தைப் படறாங்க.." என்றார் ஆவல் நைனா.

குப்பை அள்ள ஒரே டிராக்டர்தாங்க. இரண்டு நவீன மிட்ஸுபிஷி வண்டிகள் வாங்கி, கையாளத் தெரியாம வீணா கிடக்குது; ஒரே ஒரு மாட்டு வண்டிதான் மொத்த வீடுகளின் கழிவுநீர் அகற்றும் வேலைக்கும்.. நகரம் சுத்தமாகணும்னா இதெல்லாம் மாறணும். முக்கியமா மூணு விஷயங்களை உடனே கவனிக்கணும் :

1. மேல்நிலைத் தொட்டி (குடிநீருக்கு)

2. அடிக்கடி மின் தடை ஏற்படறதால தண்ணி சப்ளை நின்னு போகுது. இதைச் சமாளிக்க ஒரு ஆயில் இஞ்சின், இல்லைன்னா ஜெனரேட்டர் ஏற்பாடு செய்யணும்.

3. பாதாளச் சாக்கடை வசதியைக் கொண்டு வரணும்.

...ன்றால் அழகு;
...ந்தால் அசிங்கம்!

"யாத்திரிகர்கள் - குறிப்பாகப் பெண்கள் - கடலில் குளித்து விட்டு உடை மாற்ற இடமின்றித் தவிப்பதைக் காண ரொம்ப சங்கடமாயிருக்கிறதே..?" என்று நாம் சொன்ன போது,

"அதுக்காக தனியே இடம் கட்டிப் போட்டிருக்குங்க.." என்றார் நைனா. "ஆனால் உள்ளூர் ரவுடிகள் அதை ஆக்கிரமிச்சுக்கிட்டிருக்காங்க.. அதுனால அந்த இடத்தை ஏலமெடுத்து காண்ட்ராக்ட் மூலம் நிர்வகிக்கவே யாரும் முன்வர மாட்டேங்கறாங்க.."

லாட்ஜுகள் மூலமாகவும், மீன் மார்க்கெட் மூலமாகவும், பாலத்துக்கு விதிக்கப்படும் சுங்கத் தீர்வை மூலமாகவும் நகரியத்துக்கு வருமானம் நிறைய கிடைக்கிறது என்பதை ஏற்கும் நைனா, பாலம் மூலம் வருவதாகக் கூறப்படும் ஏராளமான வருமானத்தை அரசு மிகக் குறைந்த தொகைக்கு ஏலம் விட்டு விட்டதாக அடிபடும் ஒரு செய்தியையும் வெளியிட்டார்.

"மொத்த ராமேஸ்வரத்துக்கும்

"நகரியத்தில் ஆளும் கட்சிக்கு வேண்டிய உறுப்பினர்கள்தான் இருக்காங்க.. தவறுகள் நடந்தாலும் கேட்க ஆளில்லை. இருந்தாலும் நாங்கள் போராடிக்கிட்டுத்தான் இருக்கோம்.." என்று கூறும் நைனா ராமேஸ்வரம் மீண்டும் பஞ்சாயத்தாக்கப்பட்டால் தான் உருப்படும் என்று கருத்து வெளியிட்டார்.

"அப்படி நடந்தாலும் உள்ளாட்சித் தேர்தல்கள் நடைபெறாதவரை என்ன பயன்..?" என்று நாம் கேட்க,

"அதுவும் சரிதான்.." என ஆமோதித்தார் ஆவல் நைனா.

- மலர்

வாசகர் யோசனை :

சிறுமுகை ஜீ. கதிரேசன்



பாதுகாப்பான வழியில் எந்த நிறுவனம் தன் நிதிகளை முதலீடு


உங்கள் பணத்தை ஒரு நிதி நிறுவனத்தில் டெபாசிட் செய்யும் போது நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள்? அதன் மூலம் ஒரு நிலையான வருமானத்தைப் பெற வேண்டும்; பொருளாதார மாற்றங்கள் அந்த வருமானத்தைப் பாதிக்கக் கூடாது... என்பதுதானே! அந்த வகையில், நீங்கள் டெபாசிட் செய்ய மிகவும் ஏற்ற நிறுவனம் ஸ்ரீராம்தான். காரணம்—

ஸ்ரீராம் லாரிகளுக்கு நிதியுதவி அளிக்கும் பாதுகாப்பான வழிமுறையில் ஈடுபட்டுள்ளது. தவிர, லாரிகளைத் தயாரிக்கும் டெல்கோ, அசோக் லேலண்ட் நிறுவனங்களும் ஸ்ரீராம் நிறுவனங்களில் முதலீடு செய்துள்ளன. லாரிப் போக்குவரத்து ரொக்க அடிப்படையில் நடைபெறும் தொழில். உரிமையாளருக்கு ஒவ்வொரு நிமிடமும் வருமானத்தை ஈட்டித் தரும் சாதனமாக லாரி விளங்குகிறது. எனவே, லாரி உரிமையாளரால் தவணைத் தொகைகளை ஒழுங்காகச் செலுத்திவிட முடிகிறது. அப்படி அவரால் செலுத்த முடியவில்லையா? அந்த லாரியைக் கையகப்படுத்தி விற்பனை செய்து கடனை எளிதில் வசூலித்து விட முடியும்.

லீஸிங் எனப்படும் குத்தகை ஒப்பந்த முறையில் கருவிகளுக்கு நிதியுதவி அளிப்பதில் இதே அளவு பாதுகாப்பு இருக்கிறதா?

குத்தகை ஒப்பந்த முறையில் ஒரு சில தொழில்கள், பொருள்கள், இடங்களில் மட்டுமே நிதியுதவி அளிக்க முடியும். இவ்வாறு செய்யும்போது பல எதிர்மறையான அம்சங்கள் இடம்பெற்று விடுகின்றன. கடன் பெறுகிறவர் திருப்பித் தரத் தவறும்போது, அவருடைய சொத்துக்களை உடனடியாகக் கையகப்படுத்தி விற்பனை செய்வது எளிதல்ல. எனவே,

பணத்தின் அருமை தெரிந்தவர்கள் நாங்கள். அதை விட



செய்கிறதோ, அதுவே.

எளிதாக விற்று முதல் ஆகக்கூடிய லாரிகளுக்கு நிதியுதவி அளிப்பது மிக அதிகமான பாதுகாப்பைப் பெறுவதாகும்.

ஸ்ரீராம் — லாரிகளுக்கு நிதியுதவி அளிப்பதில் முன்னணி நிறுவனம்

ஸ்ரீராமின் பின்பலமாக இருப்பவை — ரூ.500 கோடி மதிப்புள்ள ஸ்ரீராம் நிறுவனங்கள். ரூ.170 கோடிக்கும் கூடுதலாகவுள்ள வலுவான டெபாசிட் ஆதாரம். உங்களுக்கு மிகச் சிறந்த சேவையை அளிப்பதற்கு வசதியாக நாடு முழுவதும் 65 அலுவலகங்கள். உங்களுடைய தேவைகளையும் அக்கறைகளையும் புரிந்து கொண்டு அவற்றை உண்மையான ஈடுபாட்டுடன் நிறைவேற்றும் ஸ்ரீராமின் பண்பாடு.

இன்று 1,50,000 டெபாசிட்தாரர்கள் ஸ்ரீராமைத் தங்கள் சொந்த நிதி நிறுவனமாக நம்புகிறார்கள். அது உங்களுடைய நிதி நிறுவனமாகவும் இருக்க வேண்டாமா?

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
ஸ்ரீராம் சிடி யூனியன் ஃபைனான்ஸ் லிமிடெட்

இப்போது டெல்கோ, அசோக் லேலண்ட், சிடி யூனியன் வங்கி ஆகிய நிறுவனங்களின் சக்திமிகு பங்கேற்புடன்.

நிர்வாக அலுவலகம்: மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், 4 லேடி தேசிகா ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004. போன்: 4991363, 4990960, 4993965.

டெபாசிட்டுகள் திரட்டும் கேம்பெய்ன் இப்போது

For statutory details refer to our advt. in The Hindu dated 9/7/93

ங்கள் அக்கறைகளையும் உணர்ந்தவர்கள்.

தியாக பூமி

அமரர் கல்கி

65. சாந்தி

நாணா போனதும், ஸ்ரீதரன் மறுபடியும் குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தான். தனக்குத் தானே பின்வருமாறு சொல்லிக் கொண்டான். 'கேஸாம், ஜயமாம், இங்கே யாருக்கு வேணும்! சாவித்திரி! உன் பணத்துக்கு ஆசைப்பட்டுண்டு கேஸ் போட்டேன் என்றுதானே நினைச்சே? நீ நினைச்சது தப்பு என்று இதோ காட்டுகிறேன், பார்! நான் பழைய ஸ்ரீதரன் இல்லேன்னு சொன்னேன்; நீ நம்பலை - இன்னிக்குச் சாயங்காலம் நான் தேசத் தொண்டிலே சேர்ந்து ஜெயிலுக்குப் போய்ட்டேன்னு நீ கேள்விப்படறபோதாவது நம்ப மாட்டாயா, பார்க்கலாம்!'


இம்மாதிரி சொல்லிக் கொண்டே ஸ்ரீதரன் அன்று காலையில் தான் வாங்கிக் கொண்டு வந்திருந்த கதர் உடைகளை எடுத்து அணிந்து கொண்டான்.

சென்னை நகரில் அப்போது அஹிம்சைப் போர் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. தேசிய பஜனை ஊர்வலமும் சாத்துவிக மறியலும் தடை செய்யப்பட்டிருந்தன. இந்தத் தடை உத்தரவுகளை மீறி, தேசத் தொண்டர்களும் தேச சேவிகைகளும் சிறை புகுந்து கொண்டிருந்தார்கள்.

அன்று சிறை புகுவதற்குத் தயாராய்க் கிளம்பிய தேச சேவிகைகளுடன் சாவித்திரியும் சேர்ந்து கொண்டாள். அவர்கள் தேசியக் கொடி பிடித்துக் கொண்டும், தேசிய பஜனை செய்து கொண்டும் சென்னை நகரின் வீதிகளில் ஊர்வலம் வந்தார்கள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர்களுக்கருகில் போலீஸ் வண்டி ஒன்று வந்து நின்றது. வண்டியுடன் வந்த போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தேச சேவிகைகளைக் கைது செய்து வண்டியில் ஏறச் சொன்னார்கள்.

வண்டி கிளம்பிக் கொஞ்ச தூரம் சென்றதும், கடை வீதியில் இன்னொரு போலீஸ் உத்தியோகஸ்தர் கையைக் காட்டி வண்டியை நிறுத்தினார். அந்த இடத்தில் ஜனக் கூட்டம் சேர்ந்திருந்தது. "இந்த வீதியில்தான் மறியல் நடக்கிறது" என்று கைதியான தேச சேவிகைகள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள்.

வண்டி நின்ற இடத்தில், போலீஸ்காரர்களால் சூழப்பட்டுச் சில தேசத் தொண்டர்கள் நின்றார்கள். அவர்களையும் அந்த வண்டியில் ஏற்றிக் கொள்ள முடியுமா என்று கீழே நின்ற போலீஸ் உத்தியோகஸ்தர் கேட்டார். வண்டியோடு வந்த போலீஸ்



அருள்வாக்கு



'சாவு அவன் கையில்தானிருக்கிறது என்றால் அப்புறம் நம் அளவில் நாம் ஆயுளை நீட்டித்துக் கொள்ளப் பார்ப்பதில் என்ன அர்த்தமிருக்கிறது?' என்று கேட்பவர்களுக்கு ஒன்று சொல்கிறேன். அப்படிப் பார்த்தால், சாவு மட்டுந்தானா? நம்முடைய ஸகல விஷயங்களுமே, கல்யாணம், கார்த்திகை, உத்யோகம், ஸாதனை பண்ணுவது, நல்லது செய்வது, கெட்டது செய்வது எல்லாமே அவன் கையில்தானிருக்கிறது. அந்த ஸூத்ரதாரி ஆட்டுவிக்காமல் நாம் என்னதான் பண்ண முடியும்? ஆனாலும் ஏதோ ஒரு விநோதமாக இதில் நமக்கே கொஞ்சம் ஸ்வயேச்சை, ஸ்வாதந்திரியம் இருந்து நாமாகப் புருஷ யத்தனம் பண்ணி இந்த மற்ற எல்லா விஷயங்களையும் நடத்திக் கொள்கிற மாதிரிதானே இந்த நாடகம் நடக்கிறது? அதனால் இதில், அவன் கையிலேயே இருக்கிற மற்ற எல்லா விஷயங்களிலும் நம் இஷ்டம், நம் பிரயாஸை இவற்றைக் கொண்டு நாமே செய்து கொள்கிற மாதிரிதான், மரணம் அவன் கையிலேயே இருந்தாலும் நாம் இந்தப் பிறவி தீருமுன் ஜனன மரணத்தைத் தாண்டுவதற்கான யோக்யதையை ஸம்பாதித்துக் கொண்டு விட வேண்டும் என்ற நோக்கத்தில் ஆயுள் ரக்ஷணை செய்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். இதற்காகவே உடம்பை ஜாக்ரதையாகக் காப்பாற்ற வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

ஸார்ஜெண்ட் 'இடமில்லை' என்று சொல்லவே, வண்டி மறுபடியும் கிளம்பியது.

இப்படிப் போலீஸ் வண்டி அங்கே நின்ற ஒரு நிமிஷத்தில், சாவித்திரியின் வாழ்க்கையில் ஒரு மகத்தான சம்பவம் நடந்து விட்டது. வீதியில் கைது செய்யப்பட்டு நின்ற தேசத் தொண்டர்களின் மீது சாவித்திரியின் பார்வை சென்ற போது, அவர்களுக்கு மத்தியில் ஸ்ரீதரனும் நிற்பதைக் கண்டாள். அவனுடைய உடை மாறியிருந்தது போலவே முகத் தோற்றமும் மாறியிருப்பதைப் பார்த்தாள். சாவித்திரியின் முகம் புளகாங்கிதம் அடைந்தது. அவளுடைய கண்களில் ஆனந்த பாஷ்பம் துளித்தது.

அதே சமயத்தில் ஸ்ரீதரனும் போலீஸ் வண்டிக்குள் பார்த்தான். அங்கே தேச சேவிகைகளின் மத்தியில் சாவித்திரியைக் கண்டு அளவிலாத வியப்படைந்தான்.

சொல்ல முடியாத ஆதுரத்துடன் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். "பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?" என்ற கவியின் வாக்குக்கு அப்போது அவர்களுடைய நிலைமை மிகவும் பொருத்தமாயிருந்தது. உண்மையில், இத்தனை நாளும் பிரிந்திருந்தவர்கள் அந்த நிமிஷத்திலேதான் ஒன்று கூடினார்கள். அதாவது, அவர்களுடைய இருதயங்கள் ஒன்றுபட்டன. இரண்டு ஜீவன்களுடைய இதயங்கள் ஒன்றுபட்டனவென்றால், அவர்களுடைய தேகங்கள் வட துருவத்திலும் தென் துருவத் திலும் இருந்தால்தான் என்ன? அவர்களை யாரால் பிரித்து வைக்க முடியும்?

அந்த நிமிஷத்தில் ஸ்ரீதரனுக்கும் சாவித்திரிக்கும் புனர் விவாகம் நடந்தது என்று சொல்லலாம். ஏற்கெனவே பெரியோர்களுடைய வற்புறுத்தலினால் தேக சம்பந்தமான விவாகம் அவர்களுக்கு நடந்திருந்தது. இன்றைய சுபதினத்தில், அவர்களுடைய ஆத்மாக்கள் ஒன்றையொன்று மணந்து கொண்டன. இந்த ஆத்மிக விவாகத்துக்கு பாரத மாதாவும் காந்தி மகாத்மாவுமே சாட்சிகளாயினர்.

போலீஸ் வண்டிக்குள்ளிருந்த தேச சேவிகைகள், "ஜய ஜய பாரத!" என்று கோஷித்தார்கள். வெளியில் நின்ற தேசத் தொண்டர்கள், "மகாத்மா காந்திகி ஜே!" என்று ஆர்ப்பரித்தார்கள்.

மறுநாள் 'வசந்த விஹார்'த்தில் குழந்தை சாரு தனியாக உட்கார்ந்து சாவித்திரியின் படத்தை வைத்துக் கொண்டு, "அம்மா! என்

ளையும் நீ அழைச்சுண்டு போயிருக்கக் கூடாதா? நானும் உன்னோட வந்து ஜெயிலிலே இருக்க மாட்டேனா?" என்று சொல்லிக் கொண்டிருந்தாள். அவளைத் தேடி வந்த சம்பு சாஸ்திரி, குழந்தையைத் தூக்கி எடுத்து அணைத்துக் கொண்டு, "கண்ணே சாரு! ஒரே சமயத்திலே உனக்கு அப்பாவும் அம்மாவும் கிடைத்தார்கள். அவாள் இரண்டு பேரையும் ஒரே நாளில் இழந்துட்டே! ஆனால், இதுக்காக வருத்தப் படாதே, குழந்தை! நல்ல காரியத்துக்குத்தான் அவாள் போயிருக்கா. சீக்கிரத்திலே திரும்பி வந்துடுவா. அதுவரைக்கும் நாம் நம்முடைய பழைய இடத்துக்கே போகலாம். வா, அம்மா! இந்தப் பங்களா எல்லாம் நமக்கு வாயக்கில்லை, சாவடிக்குப்பந்தான் நமக்குச் சரி!" என்றார்.

சாவடிக்குப்பத்தில் சம்பு சாஸ்திரி குடி இருந்த குடிசையை நல்லான் சுத்தமாக வைத்திருந்தான். குடிசைக்குள்ளிருந்த பூஜை மாடத்தையும் பத்திரமாகப் பாதுகாத்து வந்தான். சம்பு சாஸ்திரியும் சாருவும் அந்தக் குடிசைக்கு மறுபடி வந்ததும், தங்களுடைய சொந்த வீட்டுக்கு வந்து விட்டதாக எண்ணினார்கள். சாஸ்திரி வாசலில் நின்று நல்லானுடன் பேசிக் கொண்டிருக்கையில், சாரு உள்ளே சென்று, பூஜை மாடத்துக்கு முன்னால் கைகூப்பி நின்று, "அம்பிகே! பராசக்தி! எனக்கு அம்மா வேணும்னு கேட்டேன். அம்மா, அப்பா இரண்டு பேரையும் கொடுத்தே! ஆனா, அவா ஒருத்தருக்கொருத்தர் சண்டை போட்டுக்கறது எனக்குப் பிடிக்கவேயில்லை. ரொம்பக் கஷ்டமாயிருக்கு. எங்க அப்பாவும் அம்மாவும் சண்டை போட்டுக்காமே ஒத்துமையாயிருக்கும்படி கிருபை செய்யப்படாதா?" என்றாள்.

முன்னொரு தடவை குழந்தையின் பிரார்த்தனையைக் கேட்டுக் கொண்டு சம்பு சாஸ்திரி உள்ளே வந்தது போல் இப்போதும் வந்தார். சாருவின் பின்னால் வந்து நின்று கொண்டார். "குழந்தை! உன்னுடைய பிரார்த்தனையைத்தான் ஏற்கெனவே பராசக்தி நிறைவேற்றி விட்டாளே! உன் அப்பாவும் அம்மாவும் ஒற்றுமைப்பட்டு விட்டார்கள், சாரு! எப்போது இரண்டு பேருக்கும் ஏக காலத்திலே தேச சேவையிலே ஈடுபட வேண்டுமென்று தோணியிருக்கோ அப்போதே அவாளுடைய மனது ஒற்றுமைப்பட்டுடுத்து. திரும்பி வர்ற போது அவாள் புது மனுஷாளாயிருப்பாள். அவாளுடைய இருதயம் பரிசுத்தமாயிருக்கும். இரண்டு பேரும் மனம் ஒத்து வாழ்வார்கள், அம்மா!" என்றார்.



"டைரக்டர் சார்! என் கணவர் செட்லே இருந்தாரே, எங்கே?"

"தெரியலையே எனக்கு! உங்க டூப்புதான் 'வேலை முடிஞ்சுருச்சே, புறப்படட்டுமா'ன்னு கேட்டாங்க; 'சரி'ன்னு சொன்னேன்...!"

- கீதா

அன்று சாவடிக்குப்பம் ஒரே குதூகலமாயிருந்தது. "சாஸ்திரி ஐயாவும் சாருவும் திரும்பி வந்துட்டாங்க" என்னும் செய்தி சாவடிக் குப்பத்து ஜனங்களுக்கு அளவிலாத மகிழ்ச்சியை அளித்தது. அன்றைய தினமே பஜனை ஆரம்பித்து விட வேண்டுமென்று நல்லான் வற்புறுத்தினான். சாயங்காலம் பஜனை ஆரம்பிக்க வேண்டிய சமயத்தில் ஜனங்கள் ஏராளமாக வந்து கூடி விட்டார்கள். குப்பத்து ஜனங்கள் மாத்திரமின்றி, வக்கீல் ஆபத்சகாயமய்யர், சாருவின் பழைய வாத்தியாரம்மா முதலியோரும் வந்திருந்தார்கள். கூட்டம் அதிகமாயிருந்தபடியால், குப்பத்துத் தெருவில் திறந்த வெளியிலேயே பஜனை நடத்த வேண்டியதாயிற்று.

ஆனால், அன்று பஜனையில் சம்பு சாஸ்திரியினால் பாடவே முடியவில்லை. உணர்ச்சி மிகுதியால் அவருக்குத் தொண்டையை அடிக்கடி அடைத்துக் கொண்டது. மற்றவர்கள்தான் பாடினார்கள். காந்தி மகானுக்குப் பிரியமான கீதம் என்று பிரசித்தமான "வைஷ்ணவ ஜனதோ" என்ற பாட்டைச் சம்பு சாஸ்திரி பஜனையில் அடிக்கடி

பாடுவதுண்டு. அதை மற்றவர்களுக்கும் கற்பித்திருந்தார். அந்த கீதம் இன்று பஜனையில் பாடப்பட்ட போது, சாஸ்திரி மெய் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

"எவன் பிறருடைய துக்கத்தைத் தன்னுடைய துக்கமாகக் கருதுவானோ, கஷ்டப் படுகிறவர்களுக்கு உதவி புரிந்து விட்டு அதைப் பற்றி மனத்தில் கர்வம் கொள்ளாமலும் இருப்பானோ, அவனே உண்மையான வைஷ்ணவன்.

"எவன் உலகில் பிறந்தோர் அனைவரையும் வணங்குவானோ, யாரையும் நிந்தனை செய்ய மாட்டானோ, மனோ வாக்குக் காயங்களைப் பரிசுத்தமாக வைத்துக் கொண்டிருப்பானோ, அப்படிப்பட்டவனுடைய தாயே தன்யையாவள்.

"எவன் (விரோதியையும் நண்பனையும்) சம திருஷ்டியுடன் நோக்குவானே, எவன் ஆசையைத் தியாகம் செய்தவனோ, எவன் பரஸ்திரீயைத் தன் தாயாகக் கருதுவானோ, எவன் தன் நாவால் ஒரு போதும் பொய் பேச மாட்டானோ, எவன் பிறருடைய பொருளைக் கையால் தொடவும் மாட்டானோ, அவனே வைஷ்ணவன்.

"எவனை மோகமோ மாயையோ அண்டாதோ, எவனுடைய மனத்தில் திடவைராக்கியம் குடிகொண்டிருக்குமோ, எவன் ஸ்ரீராம நாமத்தைக் கேட்டதுமே அதில் ஆழ்ந்து மெய்மறந்து விடுவானோ, அவனுடைய சரீரம் எல்லாப் புண்ணிய தீர்த்தங்களுக்கும் இருப்பிடமாகும்.

"எவன் லோபமும் கபடமும் இல்லாதவனோ, எவன் காமத்தையும் குரோதத்தையும் விட்டொழித்தவனோ, அப்படிப்பட்ட உத்தமனைத் தரிசிப்பவனது எழுபத்தொரு தலைமுறையும் கரையேறிவிடும்."

இந்தக் கீதத்தைக் கேட்டு வருகையில் சம்பு சாஸ்திரிக்கு இன்றுதான் அதனுடைய உண்மையான பொருளைத் தாம் உணர்வதாகத் தோன்றியது. 'ஆகா! இந்தப் பாட்டில் சொல்லியபடி உண்மை வைஷ்ணவனாக நாம் என்று ஆகப் போகிறோம்? இந்த ஜன்மத்தில் அத்தகைய பேற்றை நாம் அடைவோமா! அம்பிகே! தாயே! இந்தக் கீதத்தில் வர்ணித்திருக்கும் குணங்களில் நூறில் ஒரு பங்காவது எனக்கு அருள மாட்டாயா?' என்று தமது இருதய அந்தரங்கத்தில் பிரார்த்தனை செய்தார்.

(முற்றும்)

வட்டமேஜை

♦ 'ஜனநாயகத்தின் முதல் எதிரி' என்ற இவ்வாரத் தலையங்கம், இந்திய மக்கள் அனைவரின் ஒட்டு மொத்தக் குரலாக எதிரொலித்தது தலைவா..!
மதுரை-10, பி.ராஜா

♦ இனி வரும் தேர்தல்களில், கள்ள வோட்டைத் தடுக்க, ஒரு சேஷனை மட்டும் நம்பிப் பயனில்லை, நாமும் அக்கறையோடு வாக்களிக்க வேண்டும் என்ற உணர்வையே தங்களின் தலையங்கம் தூண்டி விட்டது. நன்றி சார்.
கும்பகோணம், எஸ்.கே.மூர்த்தி.

♦ குப்பை பொறுக்குபவர்களையும், பிச்சை எடுப்பவர்களையும் ஒன்று சேர்த்து வெற்றிகரமான ஒரு கூரியர் சர்வீஸை நடத்தும் டோனிநாதன் நிச்சயம் நம் பாராட்டுக்குரியவர்.
மொரட்டுப் பாளையம்,
சு.தா.இராஜேஸ்வரன்.

♦ கீழ்க் கோர்ட்டிலும், மேல் கோர்ட்டிலும் முட்டி மோதி

எயிட்ஸை விட ஆபத்து!

வீடியோ கேம்ஸ் சுத்தமான சூதாட்டம்தான் என்று நிரூபிப்பது ஒரு புறம் இருக்கட்டும்; ஆனால் அதற்குள் பலர் பாக்கெட்டுகள் சுத்தமாகத் துடைக்கப்பட்டு விடும் என்பதை நினைக்கும்போது வருத்தமாக இருக்கிறது.!
பொன்மலை, ஆர்.பிரகாஷ்.

♦ இதிகாசகாலத்தில் ஆரம்பித்த சூதாட்டம் நாகரிக உடைபோட்டு, இருபதாம் நூற்றாண்டின் முடிவிலும் சகுனிகளால் வீடியோ கேம்ஸ் என்ற பெயரில் வளர்க்கப்படுவது, எயிட்ஸ் நோயை விட ஆபத்தானது என்பதை உணர்த்திய விதம் அருமை.
திருச்சி-7, இ.அறிவரசு.

♦ வாட்டர் ஊழல்களை வாசகர்களுக்கு காட்டிக் கொடுத்த கல்கிக்கு எத்தனை சபாஷ் வேண்டுமானாலும் எண்ணாமல் போடலாம்.
மதுரை-16. எல்.எம்.அபிதா.

♦ அவங்க 'ஆக்ஷ'னுக்கான உங்க கமெண்ட்டில் நக்கலும், குறும்பும் வெகு ஜோராக இழை போடுகின்றன... கமெண்ட்ஸ்க்கு உதவிய(?) அரசியல் தலைவர்களுக்கு ஸ்பெஷல் நன்றிங் கோவ்!
கச்சிராயபாளையம், ஆர்.சி.மதிராஜ்.

♦ யோகியின் 'ஷாக்' சிறுகதை போலவே சாருக்கு உள்ள கஷ்ட நஷ்டங்களையும், அவர்களுக்கு உள்ள மனப்போராட்டங்களையும் தத்ரூபமாக உணர்த்தியது.
மங்கைநல்லூர், ஆர்.செல்வராணி.

♦ தமயந்தி எழுதிய 'ஐ மிஸ் யு' படித்த போது என்னையே நான் மிஸ் பண்ணி விட்டேன்.
திருச்சி-21, பா.கணேசன்.

♦ கவிதைத் தனமான 'நம்ம அண்ணாச்சி'விமர்சனம் படு 'சூப்பர்'. அண்ணாச்சி!
பவித்திரமாணிக்கம், ஆர்.பாஸ்கரன்.

♦ திருவாரூர் சிறப்பிதழில் ONGCயின் செயல்பாடு சம்பந்தமாகச் சில வினாக்களை எழுப்பியிருந்தீர்கள். அந் நிறுவனத்தின் நில எடுப்புப் பிரிவில் மாற்றுப்(deputation) பணியில் உள்ளவன் என்கிற முறையில் சில விளக்கங்கள் தருகிறேன்.

ONGC., நிலச் சொந்தக்காரர் மற்றும் சாகுபடிதாரரின் சம்மதம் பெற்றுதான் நிலத்தில் நுழைகிறது. அப்போது நிலத்தில் சாகுபடியாயுள்ள பயிருக்கேற்ப சாகுபடிதாரருக்குப் பயிர் இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. மேலும், குறிப்பிட்ட நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும் போது, ரெவன்யூ டிபார்ட்மெண்ட் நிர்ணயிக்கும் நஷ்ட ஈட்டுத் தொகையை அவர்கள் குறிப்பிடும் நபருக்குத் தருகிறது ஓ.என்.ஜி.சி.

எண்ணெய் கிடைக்காத நிலங்கள் வரிசைக் கிரமமாக நில உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. நிலத்தைச் சீர் செய்வதற்காக அதன் சந்தை மதிப்பில் 90சதம் வரை வழங்கப்படுகிறது. இந்தத் தொகையைக் கொண்டு நிலத்தைச் சிலர் சரிசெய்தும் இருக்கிறார்கள். சிலர் வேறு நிலம் வாங்கிக் கொண்டு இதனை மனைகளாகப் பிரித்து விற்றும் இருக்கிறார்கள்.
சிக்கல், எம்.கோபாலசாமி.

அட்வைஸ் அம்புஜம்

"என் வயசுக்கு, எத்தனையோ பார்த்தாச்சு. ஒண்ணைப் பார்த்ததுமே, அது நல்லதா இல்லையான்னும், உடனே தெரிஞ்சுடறது. மனசிலே பட்டதை பட்டுன்னு சொல்லிடறதாலே, எனக்கு "அட்வைஸ் அம்புஜம்"னு எங்க ஆத்துக்காரர் அந்த காலத்திலேயே பேர் வைச்சிருந்தார்.

இன்னைக்கும்சரி, என் பேச்சை மீறி யாரும் நடக்கறதே கிடையாது. என் பிள்ளை, இந்த வயசுலேயும் என்னைக் கேட்காம எதுவும் செய்ய மாட்டான். நேத்துகூட, ஆத்துக்குள்ள வந்ததும் நேரே என்னண்ட வந்து உட்கார்ந்துண்டான். "ஏம்மா... அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணலாம்னு இருக்கேன், என்ன சொல்றே"ன்னு கேட்டான்.


அவன் கேட்ட தொனியிலேயே, அனுபவ்லே முதலீடு செய்ய அவனுக்கு ரொம்ப ஆசைன்னு எனக்குப் புரிஞ்சு போயிடுத்து.

என்னைக்குமே, தேக்கு மரங்கிறது, ரொம்ப அத்தியாவசியமான தேவையா இருந்து வந்திருக்கு. வர்ற காலங்களிலே, தேக்கோட மதிப்பு இன்னும் அதிகமாகத்தான் போறது. அரசாங்கத்தோட குறைஞ்சபட்ச மதிப்பீட்டிலே கணக்குப் போட்டாலும், இருபது வருஷங்களிலே, அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே தரப்போற 1440 கன அடி தேக்கோட விலை, 36 இலட்சங்களுக்குக் குறையாம இருக்குமே!

அதுவும், அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணினா, 3600 சதுர அடி நிலம் நமக்கே சொந்தமாயிடறது. நிலத்தைவிட நிலையான சொத்து வேற இருக்கா என்ன?

அனுபவ் தேக்குப் பண்ணைகளிலே முதலீடு பண்ணிட்டு, இருபது வருஷங்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆறாவது, பன்னிரண்டாவது வருஷங்களிலே இடைக்கால வருமானமும் தர்றாளாம்.

அதுமட்டுமில்லாம, அனுபவ் குடியிருப்புகள், பழத்தோட்டங்கள், ஓய்வு இல்லங்கள், அனுபவ் பைனான்ஸ் பற்றி எல்லாம் நிறைய கேள்விப்பட்டிருக்கேன். ஒரு நல்ல நிறுவனத்திலேயிருந்து, நிறைய லாபம் தர்ற திட்டம் அறிமுகமாயிருக்கறப்போ,



கல்லூரிப் படிப்பு

நடுத்தர வர்க்கத்துப் பெண்கள் மேல்படிப்பு படிப்பதே பிரச்னை என்ற நிலை மாறியுள்ளதாயினும், அப்படி படித்துவிட்டு என்ன செய்வது என்ற புதிய பிரச்னை முளைத் திருக்கிறது...

'பொண்ணு டிகிரி படிச்சட்டு நல்ல ஹவுஸ் ஒய்ஃபா இருந்தா போதும்...' - இந்த எண்ணத் துடன்தான் உமாவைப் பெண் பார்த்தார் பழனியப் பன்.

இரு தரப்பினரும் திருமணத்துக்கு ஒப்புக் கொண்ட நிலையில் உமாவுக்கு எம்.சி.ஏ. (Master in Computer Applications) என்ற பட்ட மேல்படிப்பு வகுப்பில் இடம் கிடைத்து விட்டது.

பழனியப்பன் உமாவைத் தொடர்ந்து படிக்கச் சொன்னார். மணமாகி, முதல் குழந்தையும் பிறந்த நிலையில் உமா இறுதி யாண்டு படித்துக் கொண்டிருந்தார். பரீட்சை யன்று குழந்தைக்கு உடல் நிலை சரியிலாகி மருத்துவமனையில் சேர்க்க வேண்டியதா யிற்று. "நாங்கள் குழந்தையைப் பார்த்துக்





கொள்கிறோம். நீ போய் பரீட்சை எழுதிவிட்டு வா..." என்று கண வரும் குடும்பத்தாரும் தைரியம் கொடுக்க, குழந்தையைக் கவனித்து வந்த டாக்டர் விஸ்வநாத்தும் ஊக்குவிக்க, உமா குழந்தை யைப் பிரிந்து போய் பரீட்சை எழுதினார் நல்ல மதிப்பெண்களுடன் பாஸ் செய்தார்.

இப்போது பொறுப் பான வேலையில் கை நிறைய சம்பாத்தியத்துடன் இருக்கும் உமாவுக்கு இரண்டு குழந்தைகள். பழனியப்பனும் முக்கியமான பணியில் இருக்கும் விஞ்ஞானி. இவர்களுடைய குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை உமாவின் அம்மா முழு மனத்துடன் ஏற்றிருக்கிறார்.

"எம்.சி.ஏவுக்கு அட்மிஷன் கிடைப்ப தென்பது சாதாரண விஷயமில்லை. ஒருத் தரிடம் தகுதியும் திறமையும் இருக்கிறதென் றால் அது சரியான முறையில் பயன்படுத் தப்பட வேண்டும் என்பது என் கொள்கை. அதனால் என் மனைவி 'ஹவுஸ் ஒய்ஃபாக இருந்தால் போதும்' என்ற எண்ணத்தை நான் மாற்றிக் கொண்டேன்." என்கிறார் பழனியப்பன்.

ஆனால் எல்லாருக்கும் இவ்வளவு சுலபமாகவும் சுமுகமாகவும் வாழ்க்கை அமைவ தில்லை.

'என்ஜினியரான தனக்கு ஒரு என்ஜி னியர் மனைவி அமைந்தால் நல்லது' என்று நினைத்தார் சிவராமன். ரமாவை அவர் பெண் பார்க்கச் சென்றபோது, தங்கள் இரு வருமே பொறுப்பான வேலைகளில் இருந் தால் எழக்கூடிய பிரச்னைகள் குறித்து விவா தித்தார்கள். அவற்றைச் சமாளிக்க முடியும் என்ற முடிவுக்கும் வந்தார்கள்.

எலக்ட்ரானிக் என்ஜினியரிங் படித்த துடன் திருமணத்துக்குப் பின் எம்.பி.ஏவும் படித்து பாஸ் செய்த ரமா வேலைக்குச் சேர்ந்து சில மாதங்களே ஆகியிருந்தன. ஒரு

வயது நிரம்பாத குழந்தை அனிருத், வீட்டில் வேலைக்காரப் பெண்ணின் பாதுகாப்பில் இருந்தான். அன்று ரமா ஆபீஸ் கிளம்புகை யில் குழந்தைக்கு ஜுரம். முக்கியமான மீட்டிங் இருந்ததால் கட்டாயம் போக வேண் டிய நிலை. மதிய உணவு இடை வேளையின் போது ஒரு நடை வந்து குழந்தையைப் பார்த்துவிட்டுப் போகும்படி கணவரிடம் சொல்லிவிட்டு ரமா கிளம்பிப் போனார்.

"பிற்பகல் சிவராமன் போன் செய்தார். குழந்தைக்கு ஜுரம் அதிகமாகி விட்டதால் வேலைக்காரியையும் காரில் ஏற்றி என் அலு வலகத்துக்கு அனுப்பியிருப்பதாகவும், நான் உடனடியாக டாக்டரிடம் அழைத்துப் போக வேண்டும் என்றும், தமக்கு அதி முக்கியமான வேலை இருப்பதால் வர முடியவில்லை யென்றும் சொன்னார்.. அன்றைக்கு முடிவு செய்தேன் - குழந்தைக்காக வேலையை விடுவதென்று.

"கல்யாணத்துக்கு முன், எப்படி எப்படி அட்ஜஸ்ட் செய்து கொள்ளணும் என்றெல் லாம் விவாதித்து முடிவு செய்து கொண்டா லும் நடைமுறை என்று வரும் போது பெண் களுக்கு வீட்டுப் பொறுப்பும் குழந்தைகள் வளர்க்கும் பொறுப்பும்தான் பிரதானமாகப் படுகிறது.. பிறருடைய எதிர்பார்ப்பும் அவ் வாறே இருக்கிறது" என்று சொல்லும் ரமா, தாம் வேலைக்குப் போவதை நிறுத்தியதால் மகிழ்ச்சியாக இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறார்.

ரமாவின் மனோநிலைக்கு நேர் மாறானதாக இருக்கிறது உஷா வினுடையது:

'எனது குழந்தையின் நலனுக்காக நான் வக்கீல் தொழிலை ஒத்தி வைத் திருப்பதில் எனக்கு எந்த விதமான வருத்தமுமில்லை" என்கிறார் அவர்.

குழந்தைகளைக் கவனித்துக் கொள்ள வீட்டில் போதுமான நபர்கள் இருந்த போதிலும், உஷா அவர்களுடைய உதவியை ஏற்று வேலைக்குப் போகத் தயாரா யில்லை. "ஒரு குறிப்பிட்ட வயதுவரை தாயின் அருகாமையும் அரவணைப்பும் குழந்தை களுக்கு அவசியத் தேவை என்று நினைக்கி றேன். அதை முழுமையாகக் கொடுக்காமல் இருப்பது எந்த வகையில் நியாயம்? 'குழந்தை யின் நலனா? தொழிலா?' என்ற கேள்வி வரும் போது சந்தேகமில்லாமல் குழந்தைக்குத் தான் முதலிடம்!" என்கிறார் இவர்.

சி.ஏ. பாஸ் செய்துள்ள கோல்ட் மெட லிஸ்ட் ஆன சீதாவோ "குழந்தைப் பேறு ஓர் இனிய அனுபவம். குழந்தை வளர்ப்பும் அப் படித்தான். இந்த இனிமையான அனுப வத்தை நான் முழுமையாக நுக ராமல் விட்டு விட்டால் வாழ்க்கை பூரா வும் அதை நான் திரும்பப் பெற முடியாதே.." என் கிறார்.



• சீதா

குழந்தைக் காக வேலையை விட நேர்ந்ததில் வருத்தப்படும் ரமாவோ, "குழந் தைகள், வீட்டுப் பராமரிப்பு போன்றவற்றுக்கு முதலிடம் கொடுத்து கொஞ்ச காலத்துக்குத் தான் நம்மை நாமே சமாதானப் படுத்திக் கொள்ள முடியும். அதன் பின்னர் அறிவு ரீதியான தேடல்களுக்கு விடை கிடைக்காத தால் ஏக்கமும் மனச் சோர்வும் தலை தூக்க ஆரம் பித்துவிடும்.." என்கிறார்.



• உஷா

"குழந்தைகளை நம் பெற்றோர் விரும்பிப் பார்த்துக் கொண்டால் விட்டுவிட்டுப் போவ தில் தப்பில்லையே.." என்பது கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட உமாவின் வாதம். "என் குழந்தைகள் இருவரையுமே நான் பக்கத்திலிருந்து வளர்க்கவில்லை..

கரண்டி பிடிக்கத்தானா?

ஆனால் அதனால் அவர்கள் எந்த விதத்தி லும் குறைந்து விடவில்லை..."

சரி.. குழந்தைகளைப் பிரிந்திருப்பதிலும் அவர்களின் வளர்ச்சியில் முழுதாகப் பங் கேற்க முடியவில்லை என்பதாலும் குற்ற உணர்வு உறுத்துகிறதா? என்றால், "எப்போ தேனும் அப்படி ஓர் உறுத்தல் உண்டாகும் ஆனால் என்னை நானே சமாதானம் செய்து கொள்வேன். குழந்தைகளுடன் இருக் கும் சிறிது நேரத்தை அவர்களுக்கென முழு மையாக ஒதுக்கி கவனம் சிதறாமல் பார்த்துக் கொள்வேன்" என்கிறார் உமா.

"குழந்தை மருத்துவ நிபுணர்கள் கூறு வதும் இதுதான்.." என்று ஒப்புக் கொள்கிறார் கல்லூரி விரிவுரையாளராக இருக்கும் சுஜாதா. "என் குழந்தைக்கு அடிக்கடி உடல் நலக் குறைவு ஏற்பட்ட போது நான் பயங்கர மான குற்ற உணர்வால் பீடிக்கப்பட்டேன். டாக்டரிடம் என் பிரச்னைகளையும் உணர்வு களையும் பற்றி விவாதித்தேன். அவர், என் குழந்தையின் உடல் நலக் குறைவுக்கும் நான் வேலைக்குப் போவதற்கும் எவ்விதத் தொடர் பும் இல்லை என்றும் அதனால் நான் வேலையை விட்டு விடுவது குறித்து யோசிக் கவே கூடாது என்றும் அறிவுறுத்தினார். அந்த சமயத்தில் அவர் சொன்னதைக் கேட்டு நடந்ததுதான் புத்திசாலித்தனம் என்பதை இப்போது உணர்கிறேன்.. என் குழந்தைகள் நான் வேலைக்குப் போவதை ஏற்றுக் கொண் டிருக்கிறார்கள். வீட்டிலேயே இருக்கும் அம் மாக்களால் வளர்க்கப்படும் குழந்தைகளுடன் இவர்களை ஒப்பு நோக்கினால் எந்த விதத்திலும் இவர்கள் குறைவாக இல்லை."

பல பெண்களிடம் பேசிப் பார்த்ததில் அவர்களது பிரச்னைகளுக்கு அவரவர் மனோ நிலைப்படிதான் முடிவு தேட இயலும் என்பது புரிந்தது. ஆனால் பொதுவாக 'நடுத்தர வர்க்கத்துப் பெண்கள் மேல்படிப்பு படிப்பதே பிரச்னை, கேள்விக்குறி' என்ற நிலை மாறியுள்ளதாயினும் அப்படி படித்து விட்டு என்ன செய்வது என்ற புதிய பிரச்னை முளைத்திருப்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

எல்லா பெண்களுமே 'பட்டப் படிப்பு கரண்டி பிடிப்பதற்காக அல்ல...' என்பதை ஏற்கிறார்கள். ஆனால் பெரும்பாலானோர் தங்கள் முதல் கடமையும் பொறுப்பும் குடும் பம் தான் என்றே நினைக்கிறார்கள்.

அந்த பொறுப்பை நிறைவேற்றுவதில் சிறிதளவு குறையேற்பட்டாலும் குற்ற உணர் வில் வாடுகிறார்கள். பொருளாதாரத் தேவை என்னும் கட்டாயம் உள்ளவர்கள் கூட அந்த வாட்டத்துடனேயேதான் பணிக்குப்

போய் வந்து அல்லாடுகிறார்கள். அப்படிப் பட்ட கட்டாயம் இல்லாதவர்கள் அனேகமாக வேலைக்குப் போவதைத் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ விட்டு விடுகிறார்கள். இப்படி வேலையை விடுபவர்களுள் ரமாவைப் போல் ஒரு சிலர் மட்டுமே தாங்கள் மகிழ்ச்சியாக இல்லை என்பதை வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்கள்.

இதற்கெல்லாம் முக்கியமான காரணம் குடும்பப் பொறுப்பு பெண்களுடையது; உத்யோகம் புருஷ லட்சணம் என்ற மரபு ரீதியான பொறுப்புப் பகிர்தல் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய சூழலில், ஆரோக்கியமான குடும்ப வாழ்வும் மன நிறைவைத் தரும் புற வாழ்க்கையும் கிடைக்க வேண்டுமெனில் பெண்கள் தங்கள் கனவுகளையும் லட்சியங்களையும் மனத்துக்குள் போட்டுப் பூட்டி வைத்துக் கொள்ளாமல் குடும்பத்தாருக்கு உணர்த்தி, அவர்கள் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

குடும்பச் சூழலில் மட்டுமின்றி தொழில் துறையிலும் மனமாற்றங்கள் ஏற்பட வேண்டும். பெண்களால் குடும்பத்தையும் அலுவலகப் பணியையும் எப்படி ஒருங்கே சமாளிக்க முடியும்?' என்று தொழில் துறையினர் கேள்வி கேட்கிறார்கள்.

"இப்படி வாதாடுவதற்குப் பதில் 'flexi-time என்ற முறையை நம் தொழில் துறையிலும் அலுவலகங்களிலும் புகுத்தலாம்" என்கிறார் ரமா. அதாவது இத்தனை நாட்களுக்குள் இன்னின்ன பணிகள் முடிய வேண்டும் என்ற குறியீடு வழங்கிவிட்டு, ஊழியர்களைத் தங்களுக்குச் சௌகரியமான நேரத்தில் வந்து போக அனுமதிக்கும் முறை.

இதற்கிடையே பட்டதாரி பெண்களின் எண்ணிக்கை மளமளவென்று உயர்ந்து வருகிறது. 1996க்குள் பெண் இஞ்சினியர்கள் மட்டுமே 56,000 பேர் இருப்பார்கள் இந்தியாவில்!

இவர்களும் இதர பல பட்டதாரிப் பெண்களும் பரீட்சைகளில் வெற்றி பெற்றால் மட்டும் போதாது. குடும்பச் சூழலும் பணியிடத்துச் சூழலும் இன்று மரபுகளால் கட்டுப் பட்டுப் போயிருக்கின்றன. அந்தக் கட்டுப் பாடு களைத் தளர்த்துவதில் வெற்றி கண்டாக வேண்டும். இந்த வெற்றிதான், எதிர்காலத்திலேனும் பெண்கள் எந்த விதக் குற்ற உணர்வாலும் பாதிக்கப்படாமல் பணியாற்றி, தங்களுக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பதைச் சாத்தியமாக்கும்.

- நமது நிருபர்கள்

அட்டையில் : **சத்யா**

வண்ணப்படம், படங்கள் : **யோகா**

கார்ட்டூன் வரையுங்கள்!


பரிசு - ரூ. 50 X 5

உங்களுக்குப் பிடித்த, உங்களைக் கவர்ந்த பிரமுகர்களைக் (அரசியல்வாதியோ, நடிக நடிகையரோ, எழுத்தாளரோ, யாராக வேண்டுமானாலும் இருக்கலாம்.) கார்ட்டூனில் வரைந்து அனுப்புங்கள். சிறந்த 5 கார்ட்டூனுக்குப் பரிசு காத்திருக்கிறது. ஆசிரியர் தீர்ப்பே இறுதி. ஒரு விஷயம் - கறுப்பு இங்க்கில் மட்டுமே உங்கள் கார்ட்டூன்கள் அமையட்டும்!

முடிவு தேதி - 1.7.94.

பெயர் :

முகவரி :



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 120 மாணாக்கர்கள் வேதாத்யாயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகையினை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும் :

அத்வைத வித்யசார்யா மஹாராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D-76 மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத சருங்கலா - நாகராக்ஷரம் - விலை ரூ. 60/-
2. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 165/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள் (முதல் பாகம் - ரூ. 210/-, இரண்டாம் பாகம் - ரூ. 110/-, மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-
6. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/-


II **கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்**
1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ: 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III **நாகராக்ஷரம்**
1. மனாசேச்லோக - ராமமந்த்ராசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாகிருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - தமிழ் பதவுரை)
3. நிலோதந்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்கிருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
5. ராமோதந்தம் - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-
6. ஸௌபாக்ய யந்த்ரம் - ஆர்ட் பேப்பரில் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம். "எமது நூல்கள் பற்றிய விவரமான கேட்லாக் வாங்க விரும்புவோர் ரூ. 3/- தபால்தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்."

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S சமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, பாகசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.



• குருசடைத்தீவு: கடலிலிருந்து

ஏ.ஜே. ஆனந்தப் பயணத்

தேடிக் கொண்டிருந்தோம்!

'ராமேஸ்வரத்துக்கு வரும்போது அவசியம் குருசடைத் தீவுக்கு ஒரு விஸிட் அடியுங்கள். அற்புதமான தீவு; அங்கே ஒரு மீன் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. முத்துச் சிப்பிகள் வளர்ப்புத் தொழில் நடக்கிறது. உங்கள் பயணம் மிக இனிமையாக இருக்கும்' என்று ஒரு வாசகர் கடிதம் எழுதியிருந்தார்.

விபீஷணன் மகளின் பெயர் திரிசடை. ஒருவேளை இரண்டாவது மகளின் பெயர் குருசடையாக இருக்குமோ, ஏதாவது புராணப் பின்னணி கிடைக்குமோ என்றெல்லாம் நப்பாசைப் பட்டுக் கொண்டு புறப்பட்ட நேரம் ராகுகாலத்துக்கும் எமகண்டத்துக்கும் இடைப் பட்ட நேரம் போலும்!

"குருசடைக்குப் போகும் ஒரே படகு அதிகாலையிலேயே போய் விட்டது. நீங்கள் தனியார் படகு கிடைக்குமா, கேட்டுப் பாருங்கள்" என்று அரசாங்க படகுத்துறையினர் சொல்லிவிட்டார்கள்.

முயற்சி பண்ணிப் பார்க்கலாமே என்று கிளம்பினால்,

"சனி, ஞாயிறு போட் டிரைவருங்களுக்கெல்லாம் லீவுங்க. ஒருத்தரும் வரமாட்டாங்க. எல்லாரும் ஜாலியா சுத்தப் போயிருப்பாங்க" என்றார் உள்ளூர் நண்பர் ஒருவர்.

சரி, குருசடைக்கு பாக்கியமில்லை(!) என்று எண்ணியபடி எதற்கும் ஒரு கல் எறிந்து பார்க்கலாம் என்று coast guard அதிகாரி ஒருவரை அணுகி விஷயத்தைச் சொன்னோம். நண்பர், ஹைதராபாத்காரர். ஏடு கொண்டலு வாடன் அருள். யாருக்கோ போன் செய்தார். அரைமணியில் ஒரு 'போட்' ரெடி!

• குருசடையை நோக்கி... விசைப் படகில் பயணம்.





• கடல் உயிரியல் ஆய்வு மையம்: ஆட்கள் எங்கே?

'போட்'டைப் பார்த்ததும் ஃபோட்டோகிராஃபர் உற்சாக மிதப்பில் 'நிலா அது வானத்து மேலே' என்று பாட ஆரம்பித்தார். ஏதோ விபரீதம் வரப் போகிறது என்று அப்போதே உள்ளே பட்சி சொல்லியது. அதற்காகத் திரும்பி விடுவதா என்ன? வீரத் தமிழ் மரபு என்னாவது?

ஸ்டீமர் புறப்பட்டதும் 'முல்லைமலர் மேலே', 'படகு படகு' 'நிலா அது' என்று மேலும் மேலும் பாடல்களால் நண்பர் சித்திரவதைத்து வந்தார்.

செவிகளுக்குத் தண்டனை என்றாலும் கண்ணுக்கு விருந்து: ராமேஸ்வரம் பகுதிக் கடலில் அலை கிடையாது. விரிந்த ஏரி மாதிரியான ஓர் ஆழ்ந்த அமைதித் தோற்றம். துள்ளும் மீன்கள். எகிறும் டால்ஃபின்கள். எதிரே திட்டுத் திட்டாய்த் தீவுகள். ஒரு லாங்-ஜம்ப்பில் எட்டிவிடக் கூடிய தொலைவில் (!) இலங்கை.

மண்டபத்தில் புறப்பட்டால் பாம்பன் பிரிட்ஜ் அடியே புகுந்து முக்காலே அரைக் கால் மணிப் பயணத்தில் குருசடைத் தீவு.

ஏராள எதிர்பார்ப்புகளோடு இறங்கி, நடந்தால் ஏமாற்றம்! ஏமாற்றம்!

ஐந்து நிமிடத்தில் மறுகரையைத் தொட்டு விடலாம். அத்தனை சின்ன தீவு-அல்ல; திட்டு.

ஒரு தனித் தீவுக்கான இலக்கணமாக மனம் வகுத்து வைத்திருந்ததெல்லாம்- பாரதியார் பாஷையில்- பொய்யாய், பழங்கதையாய்ப் போனது காண்க.

வாசகர் எழுதியிருந்த மீன் ஆராய்ச்சி நிலையம் இருந்தது. எப்படி? ராணி,லயன் காமிக்ஸ்களில் வரும் பாழடைந்த வீடு மாதிரி! மாபெரும் வௌவால் கோட்டை! உள்ளே நுழைந்தால் கனத்த நெடி. காலி பீர் பாட்டில்களும், கிழிந்த 'இஸ்பேடு' அட்டைகளும்.

கடிதம் எழுதிய அன்பரைத் தேடிக் கொண்டிருக்கிறோம்.(ஏ.கே.ஆனந்தப்பிரியா)

கரையோரம், 'தமிழ்நாடு செயற்கை முத்து உற்பத்தி வாரியம்' என்றொரு பழைய போர்டு சரிய ஆரம்பித்துக் கொண்டிருந்தது. நாலைந்து நபர்கள் மட்டுமே வாசம். நம்மைப் பார்த்ததும் புலம்ப ஆரம்பித்து விட்டார்கள்.

"இது கவர்மெண்ட் வேலைங்க. தூத்துக்குடிலேர்ந்து சிப்பி கொண்டு வந்து இங்க வளர்க்கறோம்.

"மாசம் அறுநூறுருபா சம்பளம். இந்தத் தீவை விட்டு வெளியே போகக் கூடாதுன்னு ரூல். வாரம் ஒரு நாள் தான் படகு ஏரி டவுனுக்குப் (ராமேஸ்வரம்) போகலாம். இங்க தண்ணி கூடக் கிடையாது. வாரத்துக்கு ஒரு தடவைதான் குளியல். நாலு வருஷமா இதே நிலைதான். ஒரு வசதி செய்து தர்றதில்லீங்க! இப்ப இந்தத் தொழிலை தனியார் கிட்ட விடப் போறாங்களாம். எங்க கதி என்ன ஆகிறது?"

சும்மா ஓரிருமணி நேரம் இருந்ததற்கே நம் தாவு தீர்ந்து விட்டது.

இரவு-பகலாக எவ்வித பாதுகாப்பும், வசதிகளும் இல்லாத இத்தீவில் இவர்களின் நிலை என்னாவது?

இன்பச் சுற்றுலா மாதிரி தான் கிளம்பினோம். திரும்பி வருகையில் நெஞ்சம் கனத்துப் போனது.

- ஸ்டெப்பி கிராஃப்



"ஹலோ, யூனியன் தலைவர் தங்கராஜா? நான்தான் மானேஜர் பேசறேன். டைப்பிஸ்ட், லெட்டர்ஸ் எல்லாம் தப்பா அடிச்சிருக்காங்க. அவங்களை நான் இரண்டு வார்த்தை திட்டலாமா? பிரச்சனை ஒண்ணும் பண்ண மாட்டீங்களே."

- பி.ஆர்.கண்ணன்.

We accept
Fixed Deposits
at the rate of
24%
with incentives.

நீங்கள் எத்தனை ஆண்டுகள் வாடகை வீட்டில் இருந்தாலும் அது சொந்த வீடாகாது. காசி பில்டர்ஸ் நிறுவனம் வழங்கும் பரிசு மழை!

காசி குருப் ஹவுஸிங் பெனிபிட் ஸ்கீமின் 5-வது ஆண்டில் வெற்றிகரமான 13-வது குலுக்கல் 26.06.94 அன்று காசி திரையரங்கு வளாகத்தில் பிரபல நட்சத்திரங்களின் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இத் திட்டத்தில் ரூ. 1,250/- முதல் ரூ. 5,000/- வரை மாதத் தவணைகளாகச் செலுத்தி குலுக்கல் மூலம் 277 முதல் 1111 சதுர அடிகள் வரை உள்ள வீடுகளைத் தேர்ந்தெடுத்துச் சொந்த வீடாக்கிக் கொள்ளலாம். மீதித் தொகையை சொந்த வீட்டிலிருந்து கொண்டே வாடகைப் போல செலுத்தலாம். இத் திட்டத்தில் சேருபவர்கள் அனைவருக்கும் ரூ. 300/- முதல் ரூ. 1,000/- வரை ஒவ்வொரு கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

சுபமங்களா திட்டம் :

இத் திட்டத்தில் உடன் குடிபுகத் தயாரான நிலையில் உள்ள வீடுகளின் மொத்த விலையில் ரூ. 10,000/- மட்டுமே செலுத்தி உடனே சொந்த வீட்டில் குடியேறலாம். மீதித் தொகைக்கு நாங்கள் கடன் உதவி ஏற்பாடு செய்து தருகிறோம். இத் திட்டத்தில் வீடு பதிவு செய்பவர்கள் அனைவருக்கும் ரூ. 1,000/- மதிப்புள்ள கவர்ச்சிகரமான பரிசுகள் வழங்கப்படும்.

வீடு கிடைக்கும் இடங்கள் :

சென்னை கே. கே. நகர், மேற்கு விருகம்பாக்கம், வளசரவாக்கம், சாலிகிராமம், வடபழனி, குமரன் காலனி, கில் நகர் போன்ற இடங்களில் வீடுகள் கட்டித் தருகிறோம்.

ஒரு சதுர அடியின் விலை ரூ. 450/- மட்டுமே!

இன்னும் ஒரு சில தினங்களில் விலை ஏற்றம் அறிவிக்கப்பட இருப்பதால் உடன் பதிவு செய்து பயனடையுங்கள்.

FIXED DEPOSITS :

நீங்கள் முதலீடு செய்யும் வைப்பு நிதித் தொகைக்கு 24% வட்டியுடன் ஊக்கப் பரிசுகளும் வழங்கப்படுகிறது. மேலும் கூட்டு வட்டி வைப் நிதியில் நீங்கள் முதலீடு செய்யும் தொகை 3½ ஆண்டுகளில் இரட்டிப்பாகிறது.

மேலும் விவரங்களுக்கு :

காசி ஹவுசிங் & டெவலப்மென்ட் லிமிடெட்

மற்றும்

காசி பில்டர்ஸ்

காசி தியேட்டர் காம்ப்ளக்ஸ்,

91, 92 ஜவாஹர்லால் நேரு சாலை, அசோக் நகர், சென்னை - 600 095.
போன் : 4821969, 4822206 ஞாயிறு முழு நேரம் அலுவலகம் உண்டு.
FAX : 044-4821897

சக்கரவர்த்தித்

இவ்விடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டிய ஒரு வேதாந்த விஷயம் உண்டு. வில் பிடித்து நின்ற ராகவனைக் கைகுவித்து வணங்கி சமுத்திர ராஜன் சொன்னான் :

"அன்புக்குரிய ராமசந்திரனே! பூமியும் வாயுவும் ஆகாசமும் நீரும் நெருப்புமாகிய ஐம்பூதங்களும் தத்தம் சுபாவ நியதியில் நிற்கின்றன. அவைகளுக்கு இடப்பட்ட மாறாத அநாதி நெறியில் அவை செல்கின்றன. காமலோப மயக்கங்களால் அல்லது தண்டனைக்கு பயந்து நான் என் சுபாவத்தை மாற்றிக் கொள்ள முடியுமா? ஜலமானது திணிந்து கல்லாக முடியுமா? அல்லது என் ஆழத்தை நான் மாற்றி விட்டு நடந்து தாண்டும் ஒரு சிறு நீர் நிலையமாக நிற்க முடியுமா?"

இவ்வாறு சமுத்திர ராஜன் ராமசந்திரனிடம் மிக வினயமாகச் சொல்லிக் கொண்டான். முனிவர் சமுத்திர ராஜன் வாய்வழி நம்முடைய சாஸ்திரங்களின் அடிப்படையான தத்துவத்தை விளக்குகிறார். பிரகிருதிக்கும் ஈசுவரனுக்கு முள்ள அநாதி சம்பந்தத்தை விளக்குகிறார். ஆண்டவனுடைய நியதியே பிரகிருதி. பிரபஞ்சம் தானாக நடப்பதற்காக இயற்கை நியதிகளை ஆண்டவன் உண்டாக்கி அமைத்து விட்டான். அப்படியே கர்ம விதியும். பஞ்ச பூதங்களும்



உயிரற்ற பொருள்களும் ஜீவன்களும் இந்த சாசுவத நியதிகளின்படியே நடந்து கொள்ளும்.

மற்ற சமயங்களில் ஆண்டவனுடைய உண்மையையும் பிரபாவத்தையும் நிரூபிப்பதற்காக பிரகிருதி விதிகளை மக்கள் காணும்படி திடீர் என்று எதிர்பாராதபடி மாற்றி வியக்கச் செய்ததாகச் சொல்லுவார்கள். சுபாவத்துக்கு வியதிரேகமான நிகழ்ச்சிகளை வைத்து ஈசுவர நிரூபணம் செய்வார்கள். நம்முடைய சாஸ்திரம் அப்படிச் செய்வதில்லை.

ஒரு மலையைக் கண்ணன் தூக்கினான் என்றால் அது வேறு விஷயம். அதனால் அவன் ஆண்டவன் ஆகிவிட்டான் என்று சொல்லவில்லை. ராவணனும் கைலாசத்தைத் தூக்கினான். ராவணன் ஆண்டவன் ஆகிவிடவில்லை.

ஹிந்து சாஸ்திரத்தின்படி ஈசுவரனுடைய சங்கற்பமே இயற்கையும், காரண காரியவிதியும், பஞ்சபூதங்களின் மாறாத நியதிகளும், கர்ம விதியும். இது பகவத் கீதை 9-வது அத்தியாயத்தில் விளக்கப்பட்டு உபதேசிக்கப்படுகிறது. வால்மீகி முனிவர் இதைச் சமுத்திர ராஜன் பேச்சில் சுருக்கமாக வைத்து முடித்தார்.

84. யுத்தம் ஆரம்பித்தது

மால்யவான் என்ற விருத்தனான ராக்ஷசன் ராவணனுக்கு எவ்வளவோ சொல்லிப் பார்த்தான்.

"உன்னுடைய நல்ல காலம் முடிந்தது. நீ செய்து வந்த பாபகாரியங்களால் உன் தேஜஸ் குறைந்து போயிற்று. நீ பெற்றிருக்கும் வரங்களை இனி நம்பாதே! சமாதானம் செய்து கொள். இப்போது வந்திருக்கும் சேனையைப் பார். மானுடர்களும் வானரங்களும் கரடிகளுமான சேனை பயங்கரமாக வந்து நிற்கிறது. சேதுபந்தன அற்புதத்தைப் பார். மகா விஷ்ணுவே மனித சரீரத்தில் வந்து விட்டான் என்று எண்ணுகிறேன்." - இவ்வாறு கிழவன் சொன்னான்.

இதையெல்லாம் கேட்க ராவணன் விரும்பவில்லை. "நீர் சொல்லும் சொற்கள் எனக்கு கர்ண கடோரமாக இருக்கின்றன. நீர் சத்துருவோடு சேர்ந்துவிட்டீர் போலிருக்கிறது. மனித ஜாதிக்கு பலம் ஏது? தகப்பனால் காட்டுக்குத் துரத்தப்பட்ட ஒரு அற்ப மனிதனைக் கண்டு எல்லாரும் பயப்படுகிறீர்கள். குரங்குகளையும் கரடிகளையும் நம்பி ஒரு மனிதன் வந்திருக்கிறான். இவன் உங்களுக்குப் பெரும் பயத்தைத் தருகிறான். உங்களைப் பார்த்து எனக்கு வெட்கமாக இருக்கிறது.

"என்மேல் உங்களுக்குப் பொறாமையா? ஏன் இப்படி என்னிடம் பேசுகிறீர்கள்? நான் ராமனுக்குத் தலை வணங்க முடியாது. நீதி சாஸ்திரத்தில் இது குற்றமாயிருந்தால் அது என் சுபாவத்தில் ஏற்பட்ட குற்றம். அதை என்னால் மாற்ற முடியாது என்று வைத்துக் கொள்ளுங்கள். யுத்தம் செய்து மடிந்தாலும் மடிவேன், ராமனிடம் சமாதானம் கேட்க மாட்டேன்'' என்றான்.

"யோசித்துச் செய்ய வேண்டியதைச் செய். லங்கேசன் வெல்க! ராவணன் வெல்க!!" என்று சொல்லி விட்டு மால்யவான் வருத்தத்தோடு தன் வீடு திரும்பினான். இவன் ராவணனுக்குத் தாய் வழியில் பாட்டன்.

ராவணன் தன்னுடைய வீரர்களை அந்த அந்த இடத்துக்கு இவர் இவர் பொறுப்பு என்று அமைத்து விட்டான். பிரஹஸ்தனைக் கிழக்கு வாயிலுக்கும், மகா பாரிசுவனையும் மகோதரனையும் தெற்கு வாயிலுக்கும், தன் மகனும் மாயங்கள் கற்ற மகா வீரனுமான இந்திரஜித்தை மேற்கு வாயிலுக்கும் காப்



"டாக்டர், எனக்கு தொண்டையிலே ஏதோ சிக்கிக்கிட்ட மாதிரி ஒரு வலி ஏற்படுது..."

"என்ன சாப்பிட்டீங்க?"

"எலக்ஷன் சமயத்துல ரெண்டு லட்டு சாப்பிட்டேன் டாக்டர்!"

- வசந்தா ராஜசெல்வன்

புப் பொறுப்பாக அமைத்து விட்டு வடக்கு வாயிலைத் தானே காப்பது என்று முடிவு செய்தான். மகா வீர பராக்கிரமனான விருபாக்ஷனை நகரத்துக்குள்ளிருக்கும் சேனைக்குத் தலைவனாக நியமித்தான்.


இவ்வாறு தன் சேனையையும் வீரர்களையும் விதானப்படுத்திவிட்டுக் காரியங்கள் வெற்றிகரமாக முடியும் என்று திருப்தியடைந்தான். வி... காலம் நெருங்கியபடியால் ... யும் கேட்காமல் இவ்வாறு ஏமாந்தான். மந்திரிகள் ஸ்துதியும் ஜெய கோஷமும் செய்து அரசனைச் சந்தோஷப்படுத்தி விட்டுக் கலைந்தார்கள்.

ராமனும் சுக்ரீவனும் விபீஷணனும் மற்றவர்களும் யுத்தக் கிரமத்தைப் பற்றி யோசிக்கக் கூடினார்கள். விபீஷணன் ராவணனுடைய ஏற்பாடுகளைப் பற்றிச் சாரர்கள் போய்ப் பார்த்து விட்டு வந்ததையெல்லாம் எடுத்துச் சொன்னான்.

"இப்போது ராவணன் திரட்டியிருக்கும் சேனையானது கணக்கிலும் பலத்திலும் வீரத்திலும் குபேரனை எதிர்த்த சேனையைவிடப் பெரிது என்பதை அறிவீர்களாக. ஆயினும், எனக்குச் சந்தேகமில்லை, ராமசந்திரனுடைய வெற்றி நிச்சயம்" என்றான் விபீஷணன்.

ராமன் அன்று ராத்திரி சுவேலை மலைமேல் சேனையுடன் தங்கினான். மறுநாள் காலை எழுந்து அங்கிருந்து பார்த்தார்கள். திரிகூட மலைமேல் மனத்தைக் கவரும் அழகுடன் ஜொலிக்கும் லங்கா நகரம் ஆகாயத்திலிருந்து தொங்குவது போல் காட்சி தந்தது.

(தொடரும்)



• மௌன கீதம் • சோக கீதம்





● சி. சேகர், சென்னை.

? காங்கிரஸ் மாநாட்டில் சோனியா காந்தி?

! அழைப்பை ஏற்று வந்து அமைதியாகச் சற்று நேரம் உட்கார்ந்து சென்றதற்கே இத்தனை பரபரப்பு என்றால், நிஜமாகவே அரசியலில் தீவிர பங்கேற்க முன்வந்தால்...! நினைத்தாலே பல காங்கிரஸ் தலைவர்களுக்குப் 'பகீர்' என்கிறது!

● கே. ஆர். வேலுச்சாமி, வடக்கலூர்.

? ஆளுனருக்குக் கூடப் பத்திரிகை விளம்பரம் அவசியமா?

! இருவருக்கும் இடையே ஒரு பனிப்போர் நடக்கும் போது, முதல்வரால் மட்டும்தான் முழுப் பக்க விளம்பரம் தர முடியும் என்றாகி விடக் கூடாதல்லவா? அதற்குத்தான்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்.

? "நான் நினைத்திருந்தால் வெகுநாள் பிரதமராக நீடித்திருக்கலாம்" என்று சந்திரசேகர் கூறுகிறாரே?

! இவரை விட, 'நான் பிரதமராக ஆகியே இருக்கக் கூடாது' என்று கூறும் வி.பி. சிங் தான் நம் மதிப்பைப் பெறுகிறார்!

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? மகா புனிதர் நரசிம்மராவ் 1000 கோடி ரூபாய் சர்க்கரை ஊழலையும் மூடி மறைத்து மௌனகீதம் பாடுவாரா?

! 'இந்த ஊழலின் பிறப்பிடமே பிரதமர் அலுவலகம்தான்; அவர் ஆணையை என்னால் எப்படி மீற முடியும்?' என்று அமைச்சர் கல்பனாத்ராய் சோக கீதம் பாடும்போது நரசிம்மராவின் மௌனகீதம் ஒப்புதல் வாக்குமூலமாகி விடுமே!

● அ. ராஜா ரஹ்மான், திருப்பரங்குன்றம்.

? டில்லியில் நடைபெற்ற இ. காங்கிரஸ் மாநாடு பற்றி...?

! பிரதிநிதிகள் சாப்பாட்டு நேரத்தில் முட்டி மோதிக் கொண்டதைப் பார்க்க, "சாப்பாட்டு ராமர்கள் மாநாடு" என்றே வர்ணிக்கத் தோன்றும். ஆனால் ஒன்று, மெனு என்னவோ நாக்கில் ஜலம் ஊறவைப்பதுதான்!

● மா. பழனிச்சாமி, போத்தனூர்.

? 'கூடுதல் டி.ஜி.பி. பதவிகளை ரத்து செய்யக் கூடாது' என்று ஜெயலலிதா கூறுவதில் நியாயம் உள்ளதா?

! தமிழகத்துக்கு ஒரு வேளை கூடுதல் டி.ஜி.பி. நியாயமாகவே தேவைப்படலாம். ஆனால் பொதுவாக ஆட்சிக்கு வருபவர்கள், அரசியல் நோக்கிலும் பெருமைக்காகவும் புதிய புதிய பதவிகளை உருவாக்கி வேண்டப்பட்டவர்களுக்கு அவற்றை அள்ளித் தரும் போக்கு அநியாயமானது.



• ஆசை!



• நிராசை!



• காங்கிரஸ் மாநாட்டில்...

காங்கிரஸ் மாநாட்டில் சோனியாகாந்தி?

● அன்பு கதிரேசன், கீழ்கட்டளை.

? "இந்திய ராணுவத்துக்கு விலங்கிட வேண்டும்" என்று பேனசிர் பேசியிருக்கிறாரே?

! அவர் நாட்டு ராணுவம் அவருக்கே விலங்கிட எப்போதும் தயாராக இருப்பதை மறந்து பேசுகிறார்!



• அத்தனை நம்பிக்கை!



• சிலிர்க்க வைத்தார்!



• விலகுவது யாருக்கு?



• முழுப் பங்கும்

● *ரா. நாச்சிமுத்து, பொடிநாயக்கனூர்.*

? "ஐ.ஏ.எஸ். அதிகாரி வீட்டில் கொள்ளையடித்த சம்பவத்தை வைத்து தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டதாகக் கருத முடியாது" என்று அமைச்சர் தென்னவன் கூறியிருப்பது பற்றி...?

! அவர் வீட்டிலேயே கொள்ளையடிக்கப்பட்டாலும் சட்ட ஒழுங்கு சீர்குலைவு என்று ஒப்புக் கொள்ள மாட்டார். போயஸ் தோட்டத்திலேயே நடந்தால் ஒருவேளை ஞானோதயம் ஏற்படலாம்!

● *எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப் பட்டி.*

? இனி முன்போல் தியாக உணர்வுடன் சேஷனால் நடந்து கொள்ள முடியுமா?

! நாடாளுமன்றத்தில் சாசனத் திருத்த மசோதா வாபஸ் பெறப்பட்ட பிறகு, "விவேகம் வென்றது" என்று சேஷன் கூறிய பிறகு, இதற்காக எதிர்க் கட்சி தலைவர்கள் பலரைச் சந்தித்து அவர் கூழைக் கும்பிடு போட்டிருக்கிறார் என்பதையும் பார்க்கும் போது, இனி பாரபட்சமின்றி அவர் நடந்து கொள்வது கஷ்டம்தான். அப்படியே நடந்து கொண்டாலும் பாதிக்கப்பட்டவர்கள் நம்பாமல் புழுதி வாரி இறைப்பது நிச்சயம்.

● *த. குணசேகரன், கவுந்தப்பாடி.*

? "காங்கிரசுக்கு யாராலும் சாவு மணி அடிக்க முடியாது" என்று தங்கபாலு கூறியுள்ளாரே?

! வாய்ப்பை அவர்கள் வேறு யாருக்கும் விட்டுக் கொடுக்க விரும்பவில்லை!

● *கவிட் ரவி, கும்பகோணம்.*

? "பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் நான் எந்தப் பதவியும் வகிக்க மாட்டேன்" என்று டாக்டர் ராமதாஸ் கூறுகிறாரே?

! வராது என்பதில் அத்தனை நம்பிக்கை!

● *சின்னஞ்சிறுகோபு, மயிலாடுதுறை.*

? தமிழ் சினிமாவில் வன்முறை, ஆபாசம் அதிகமாக இருப்பதாக சிங்கப்பூர், மலேசியா நுகர்வோர் அமைப்பு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறதே?

! இந்தியர் - தமிழர் சொன்னால் உறைக்கவில்லை. சமீபத்தில் கூட 14 பெண்கள் அமைப்புக்கள் தணிக்கைக் குழுவினரிடமும் அரசிடமும் புகார் செய்துள்ளன. சிங்கப்பூர் - மலேசியாக்காரர்கள் சொன்னாலாவது நெஞ்சில் தைக்கிறதா பார்ப்போம்!

● *பூங்கோதை குப்புசாமி, சென்னை.* ❑

? எழில்மிகு சென்னை பட்ஜெட் ரூ 1200 கோடியிலிருந்து ரூ 4000 கோடியாக உயர்ந்துள்ளதே?

! கோடிகள் கூடும்; எழில் கூடுமா? சந்தேகம் தான். இவர்கள் ரூ 2000 கோடி திரட்ட வேண்டும்; அப்புறம் உலக வங்கி ரூ. 2000 கோடி தர வேண்டும்; அத்தனையும் உருப்படியான விதத்தில் செலவாக வேண்டும்... எங்கே, கூவத்தின் நாற்றத்துடன் ஊழல் நாற்றம் போட்டியிடாமல் இருக்குமா என்ன!

> ❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
> திருமதி பூங்கோதை குப்புசாமி,
> 83/8 எல்.பி. டபிள்யூ. டி. குடியிருப்பு,
> கே. கே. நகர், சென்னை - 78.

● *கே. ஆர். ராம், செங்குன்றம்.*

? 'நேருவின் கொள்கைகளைக் கைவிட மாட்டோம்' என்கிறாரே நரசிம்மராவ்?

! நேருவின் பொருளாதாரக் கொள்கைகள்தாம் இந்தியாவைக் கைவிட்டு விட்டன என்று சொல்லாமல் சொல்கிறார்.

● *யோகுஜி ராஜ், பம்பாய்.*

? ராஜ்குமார் பாரதி கச்சேரி கேட்டதுண்டா?

! ஒரு வெள்ளிக் கிழமை யதேச்சையாக ரேடியோ வைக்க, "லயிப்பு, பாவப் பொலிவுடன் இனிய குரலில், இத்தனை அழுத்தமாக யார் பாடுகிறார்கள்?" என்று ஆச்சர்யப்பட்டு நாளிதழ் பார்த்தால் ராஜ்குமார் பாரதி! "முன்னைக்கிப்போது எவ்வளவு முன்னேற்றம்!" என்று மகிழ, ஷண்முகப்ரியா திரவல் பண்ணி பாரதி பாட்டு ஒன்று எடுத்தார் பாருங்கள் - சிலிர்த்துப் போனேன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : வி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345[illegible].
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

ஃபாரெக்ஸ்

உணவு விழா

ஃபாரெக்ஸ் அணிவரிசை உங்கள் குழந்தையின் துரிதமான முழு வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை அளிக்கிறது.



4-வது மாதம் முதல், பாலுடன் கோதுமை தானியம் கலந்த ஃபாரெக்ஸ் அளித்து உங்கள் குழந்தையின் திட உணவை ஆரம்பியுங்கள்.

5-வது மாதம் முதல் குழந்தைக்கு ஃபாரெக்ஸ் வெஜ் அளியுங்கள். கோதுமை, பால், வைட்டமின் செறிந்த தக்காளி, கேரட் மற்றும் பயத்தம் பருப்பின் நற்பலன்கள் அனைத்தும் இதில் அடங்கியுள்ளது.



5-வது மாதம் முதல், கோதுமை, பால் மற்றும் வாழைப்பழம், மாம்பழம், ஆப்பிள் செறிந்த ஃபாரெக்ஸ் ஃப்ரூட்ஸ் கொடுத்திடுங்கள்.



6-வது மாதம் முதல் குழந்தைக்கு அளியுங்கள் ஃபாரெக்ஸ் எக். இதில் எளிதில் சீரணிக்கக் கூடிய முட்டை மற்றும் பாலின் நன்மைகள் அடங்கியுள்ளன.



வளரும் குழந்தைகளுக்கு



ஃபாரெக்ஸ்
சுவையுடன் வளரும் வழி.

முக்கிய அறிவிப்பு: தாய்ப்பால் உங்கள் குழந்தைக்குச் சிறந்தது. நான்கு மாதங்கள் முதல் உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமின்றி தானிய உணவையும் கொடுங்கள்.

Gx. 931.93.Tm